விலை ரூபா: 20.00

# தமிழ்நாதம்

Thamil Naatham

புகைத்தலை தவிர்ப்போம்

இராகம் 01 | தாளம் 47 | வள்ளுவர் ஆண்டு 2043 ஆவணி 07 வியாழக்கிழமை (23.08.2012) | பக்கங்கள்: பதினாறு

# இடம்பெயர்ந்த வடபகுதி மக்களுக்கு அடிப்படைத் தேவைகள் கிடைக்கவில்லை

## - ஐ.நா.வின் இலங்கைக்கான வதிவிடப் பிரதிநிதி

"வடபகுதியில் இடம்பெயர்ந்த மக்களின் அடிப்படைத் தேவைகள் முற்றுமுழுதாக இன்னமும் பூர்த்தி செய்யப்படவில்லை" என்று இலங்கையிலுள்ள ஐக்கிய நாடுகளின் நிரந்தர வதிவிடப் பிரதிநிதி கூறினார். அடிப்படைத் தேவைகளான நீர், உணவு, வீடு ஆகியவற்றுடன் நீண்டகாலத் தேவைகளான வாழ்வாதாரத்தை வளர்த்தெடுப்பதற்கான தொடர்ச்சியான உதவி நிலைமை வழமைக்குத் திரும்புதல் போன்றவையும் பூர்த்தி செய்யப்படவில்லை என்றும் சொன்னார்.

உலக மனிதாபிமான தினத்தை முன்னிட்டு கொழும்பிலுள்ள அலுவலகத்தில் நடைபெற்ற வைபவத்தில் உரையாற்றுகையில் ஐ.நாவின் இலங்கைக்கான வதிவிட பிரதிநிதி சுபினே நன்டி இவ்வாறு தெரிவித்துள்ளார்.

"இடம்பெயர்ந்த மக்களில் பெரும் பகுதியினரை மீளக் குடியமர்த்துவதில் அரசாங்கத்தினதும் மனித நேய சமுதாயத்தினதும் பாரிய சாதனைகளை ஏற்றுக்கொள்ளும் அதே வேளையில், இன்னும் பல தேவைகள் வடக்கு மக்களுக்கு நிறைவேற்றப்படாமல் உள்ளன என்றும் அவர் கூறினார்.

"நன்கொடைகள் குறைந்து வருகின்றன. எனவே மாற்று வழிகளைத்தேட வேண்டியுள்ளது. பலமான தலைமைத்துவம், வினைத்திறன் மிக்க ஒருங்கிணைப்பு ஏற்பாடுகள், பொறுப்புக்கூறலை மேம்படுத்தல் என்பவற்றில் நாம் இப்போது கூடிய கவனம் செலுத்துகின்றோம் என அவர் கூறினார்.

"நன்கொடை வழங்கும் அமைப்புகள் 2006 - 2012 வரையான ஆறு வருடத்தில் ஒரு பில்லியன் அமெரிக்க டொலருக்கு மேல் இலங்கைக்கான மனிதாபிமான உதவியாக வழங்கியுள்ளன என அவர் தெரிவித்தார். கடந்த 10 வருடங்களில் உலகெங்கும் 800 இற்கு மேற்பட்ட உதவிப் பணியாளர்கள் கடமையின்போது இறந்ததாக அவர் கூறினார்.

2011 ஆம் ஆண்டில் மாத்திரம் 301 அனர்த்தங்களில் 30,000 பேர் வரையில் இறந்ததாகவும்

02


## சட்ட விரோத அவுஸ்திரேலிய பயணம் அபாயம் மிக்கது

### இலங்கை அகதிகளுக்கு தமிழக அரசு எச்சரிக்கை

தமிழகத்திலுள்ள இலங்கை தமிழ் அகதிகள் முகாம்களில் உள்ளவர்களை அபாயமிக்க கடலில் வெளிநாட்டுக்கு பயணம் தொடர்பில் தெளிவு படுத்த தமிழக அரசு திட்டமிட்டுள்ளது. தமிழக முகாம்களில் உள்ள இலங்கையர்கள் அவ்வப்போது முகாம்களில் இருந்து தப்பி அகதிகள் அவுஸ்திரேலியா செல்ல முயற்சிக்கின்றனர்.

இவ்வாறு ஆபத்தான கடல் வழியில் ஆஸ்திரேலியா செல்ல வேண்டாம் என்றும், அது பாதுகாப்பானது அல்ல என்றும் தமிழக அரசு கூறியுள்ளது. மேலும், அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்லும் தமிழர்களுக்கு ஏற்படும் அபாயங்கள் குறித்து தமிழகத்தில் உள்ள 111

02



திறப்பு விழாவுக்கு ஆயத்தமாக இருந்த உடுவில் பிரதேச சபையின் புதிய கட்டடம் மீது இனந்தெரியாதோரால் கழிவொயில் வீசப்பட்டிருப்பதை படத்தில் காணலாம்.

## மன்னார் நீதிமன்றத் தாக்குதல் சம்பவம்: ஐவர் கைது

மன்னார் நீதிமன்றம் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் சம்பவத்துடன் தொடர்புடையதாகக் கூறப்படும் மேலும் 5 சந்தேக நபர்களை விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் கைது செய்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை கைதான இவர்கள், மன்னார் மாவட்ட மேலதிக நீதவான் இ.கயஸ்பல்டானோ முன்னிலையில் ஆஜர்படுத்தப்பட்டதை அடுத்து அவர்களை இம்மாதம் 27ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு நீதவான் உத்தரவிட்டார்.

02

### கல்விப் பொது தரா தர உயர் தர பரீட்சை :

## வினாத்தாள் தவறுகளால் பாதிக்கப்பட்ட மாணவர்களுக்கு நியாயமான தீர்வு

### விடைத்தாள் திருத்தும் போது கவனிப்போம் என்கிறார் கல்வி அமைச்சர்

கல்வி பொது தராதர உயர் தரப் பரீட்சை வினாத்தாள்களின் திருத்தங்கள் கிடைக்கப்பெறாத மாணவர்களுக்கு அநீதி ஏற்படாத வகையில் விடைத்தாள்களை திருத்துவதற்கான விதிமுறைகளை பரீட்சைத் திணைக்களம் ஏற்படுத்தும் என கல்வி அமைச்சர் பந்துல குணவர்தன நாடாளுமன்றத்தில் கூறியுள்ளார்.

நேற்று ஜே.வி.பி. நாடாளுமன்ற உறுப்பினர் அநுர குமார திஸாநாயக்க எழுப்பிய கேள்வியொன்றுக்கு பதிலளிக்கையிலேயே அவர் இவ்வாறு கூறினார்.

மேலும் கூறுகையில், வினா பத்திரங்களுக்கான திருத்தங்கள்

02

## மூன்றாம் தவணை ஆரம்பத்தில் பாடசாலை அதிபர்கள், ஆசிரியர்களும் பகிஷ்கரிப்பில்!

அதிபர்கள் மற்றும் ஆசிரியர்களது சம்பள உயர்வு உள்ளிட்ட 13 கோரிக்கைகளுக்கு தீர்வு வழங்காதவிடத்து பாடசாலைகளின் மூன்றாம் தவணை ஆரம்பத்திலிருந்து பணி பகிஸ்கரிப்பை மேற்கொள்வதற்கு தீர்மானித்துள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கம் தெரிவித்துள்ளது.

நேற்று (22) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பொன்றில் அதிபர் மற்றும் ஆசிரியர் சங்கங்கள் தெரிவித்துள்ளன.

சம்பள உயர்வு உள்ளிட்ட 13 கோரிக்கைகள் கல்வி அமைச்சின் செயலாளரிடம் முன்வைக்கப்பட்டுள்ளன.

எனினும் நீண்ட காலம் சென்ற நிலையில் இதுவரை தமது கோரிக்கைகளுக்கு எந்தவித பதிலும் அளிக்கவில்லை.

பல்கலைக்கழக விரிவுரையாளர்கள்

02

## நீதவான் மீதுமனித மலக்கழிவு வீச்சு

சிலாபம் மேல் நீதிமன்றத்தின் கூண்டில் அடைத்துவைக்கப்பட்டிருந்த சந்தேக நபரொருவர் கூண்டில் இருந்து வெளியே வந்து மனித மலக்கழிவு அடங்கிய பொதியை நீதவான் மீது வீசியுள்ளார்.

இதனைத் தொடர்ந்து குறித்த நபர் பொலிஸாரினால் கைது செய்யப்பட்டார்.

02

## நல்லிணக்க முயற்சிகள் குறித்து அகாசிக்கு அமைச்சர் பீரிஸ் விளக்கினார்

கற்றுக்கொண்ட பாடங்கள் மற்றும் நல்லிணக்க ஆணைக்குழுவின் சிபார்சுகளை அமுல் நடத்த எடுக்கப்படும் நடவடிக்கைகள் மற்றும் ஏற்கனவே மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின் முன்னேற்றங்கள், எதிர்காலத்தில் முன்னுரிமை அளிக்கப்பட வேண்டிய இலக்குகள் பற்றியெல்லாம் அமைச்சர் ஜி.எல்.பீரிஸ், இலங்கைக்கு வருகைதந்துள்ள ஜப்பானிய விசேட பிரதிநிதி யசூசி அகாசிக்கு விளக்கினார்.

உள்ளூரில் இடம்பெயர்ந்த மக்ளின் மீள்குடியேற்றம், முன்னாள் போராளிகளை சமூக

02

## நேற்றுத் திறக்கப்படவிருந்த உடுவில் பிரதேச சபை கட்டடத்திற்கு கழிவு ஒயில் வீசசு

நேற்று காலை திறக்கப்படவிருந்த உடுவில் பிரதேசசபையின் புதியகட்டடத்தின் மீது ஆயுதபாணி யான குழுவினர் துப்பாக்கி முனை யில் காவலர்களை கட்டி பற்றையில் போட்டுவிட்டு கட்டடத்தின் மீது கழிவு எண்ணெய் ஊற்றியுள்ளார்கள்.

அதிகாலை 2.00 மணியளவில் ஆயுதங்களுடன் நுழைந்த கும்பல் இந்த அநாகரிகச் செயலை அரங்கேற்றியுள்ளது.

அதிகாலை வேளையில் மோட்டார் சைக்கிள்கள் மற்றும் வெள்ளை வானில் வந்த பதினைந்துக்கும் மேற்பட்டவர்கள் மதில் ஏறிப் பாய்ந்து காவலாளிகளைத் துப்பாக்கிமுனையில்

02

தமிழ் பேசும் மக்களின் எழுச்சிக் குரல்

# இலங்கையைத் தட்டிக்கழிக்கும் ஐ.நா!

ஐக்கிய நாடுகள் அமைப்பினால் இலங்கைக்கு வழங்கப்படவிருந்த ஐந்தாவது பாதீட்டுக் குழுவிற்கான நியமனம் ஜெர்மனிக்கு இப்போது வழங்கப்பட்டுள்ளதாக இன்னர் சிட்டி பிரஸ் இணையம் செய்தி வெளியிட்டுள்ளது.

கடந்த ஜுலை மாதம் இந்த குழுவில் ஐக்கிய நாடுகள் அமைப்பிற்கான இலங்கையின் நிரந்தர பிரதிநிதி பாலித கோஹன நியமிக்கப்படவிருந்ததாக அறி விக்கப்பட்டிருந்தது.

இருந்தபோதும், தற்போது இந்தக் குழுவின் நியமனம் ஜெர்மனி நாட்டின் ஒரு பிரதிநிதிக்கு வழங்கப்பட்டுள்ளது.

ஐக்கிய நாடுகள் அமைப்பின் பொது சபை குழுக்களால் முதலாவது பாதீட்டு குழு இந்த முறை ஆசிய நாடொன்றுக்கு ஒதுக்கப்பட்டிருந்தமை சுட்டிக் காட்டத்தக்கது. இந்த குழுவும் இலங்கைக்கு வழங்கப்படாது, இந்தோனேசியாவுக்கு வழங்கப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும், குழுக்களின் நியமன மாற்றங்கள் தொடர்பில் எந்தவித காரணங்களும் இது வரை வெளியாகவில்லை.

# டெசோ மாநாட்டுத் தீர்மானங்களை படித்து உரிய நடவடிக்கை எடுப்பேன்

## மன்மோகன் சிங்

பிரதமர் மன்மோகன் சிங்கை நேற்று புதுடில்லியில் சந்தித்த திமுக பாராளுமன்ற உறுப்பினர்கள், டெசோ மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் அடங்கிய அறிக்கையை பிரதமரிடம் சமர்ப்பித்தனர்.

தி.மு.க. பாராளுமன்றக்குழுத் தலைவர் டி.ஆர்.பாலு தலைமையில் தி.மு.க. மக்களவை - மாநிலங்களவை உறுப்பினர்கள் கடந்த 12ஆம் திகதி டெசோ அமைப்பின் சார்பில் நடைபெற்ற ஈழத்தமிழர் வாழ்வுரிமைப் பாதுகாப்பு மாநாட்டில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களை விளக்கி, கருணாநிதி, பிரதமருக்கு எழுதிய கடிதத்தையும் - தீர்மானங்களையும், பாராளுமன்ற வளாகத்தில் உள்ள பிரதமர் அலுவலகத்தில் பிரதமர் மன்மோகன் சிங்கை நேரில் சந்தித்து வழங்கினார்கள்.

பிரதமர், இக்கடிதத்தை படித்து விட்டு உரிய நடவடிக்கைகள் மேற்கொள்வதாக உறுதி அளித்தார்.

# சுண்டைக்காய் நாடான இலங்கையிடம் இந்தியாவுக்கு வெட்ககேடான தோல்வி

## நடிகர் விஜயகாந்த்

சுண்டைக்காய் நாடான இலங்கை, இந்தியா கேட்ட ரூ.100 கோடி மதிப்புள்ள சொத்தை எந்தத் தயக்கமும் இல்லாமல் சீனாவுக்கு வாரி வழங்கி உள்ளது இதை விட இந்திய அரசுக்கு ஏற்பட்டுள்ள வெட்கக்கேடான தோல்வி எதுவும் இல்லை என்றும் தே.மு.தி.க தலைவர் விஜயகாந்த் கூறினார்.

இது தொடர்பாக அவர் வெளியிட்ட அறிக்கையில், கச்சத்தீவை மீட்கவோ, கடலோர மீனவர்களின் இரத்தக் கண்ணீரைத் துடைக்கவோ தி.மு.க. மற்றும் அ.தி.மு.க ஆட்சியில் வழி காணப்படவில்லை. இராமேஸ்வரம் பகுதி மீனவர்கள் தாக்கப்படுவது தொடரும் சோகக் கதையாக உள்ளது. மத்திய அரசுக்கும், குறிப்பாக பிரதமருக்கும் கடிதங்கள் எழுதியும் இன்றுவரை பலனில்லை. தமிழ்நாடு தொடர்ந்து மத்திய அரசால் புறக்கணிக்கப் படுவதைக் கண்டித்து அண்மையில் நடந்த குடியரசுத் தலைவர் தேர்தலைப் புறக்கணித்தோம். தமிழ்நாட்டைச் சேர்ந்த அரசியல் கட்சிகள் அவரவர் இயல்புக்கும், அவரவர் சக்திக்கும் ஏற்றவாறு தங்கள் எதிர்ப்பைத் தெரிவித்து வந்துள்ளனர் என்றார்.

# பிரிட்டனின் பயண எச்சரிக்கை குறித்து உயர்ஸ்தானிகருடன் ஜி.எல்.பீரிஸ் பேச்சு

பிரித்தானிய பிரஜைகள் இலங்கைக்கு விஜயம் செய்வது தொடர்பாக பிரித்தானிய வெளிவிவகார அலுவலகம் விடுத்த பயண எச்சரிக்கை தொடர்பாக பிரித்தானிய உயர் ஸ்தானிகரை வெளிவிவகார அமைச்சர் ஜி.எல். பீரிஸ் கலந்துரையாடியுள்ளார்.

இவ்விடயம் குறித்து கலந்துரையாடிய அமைச்சர், வடபகுதியில் ஏற்பட்டுள்ள முன்னேற்றத்திற்கு ஏற்ப மேற்படி பயண எச்சரிக்கையில் மாற்றம் செய்யுமாறு கோரினார். நாட்டில் ஸ்திரத் தன்மையும் பாதுகாப்பும் ஏற்பட்டுள்ள நிலையில் மேற்படி எச்சரிக்கையை நியாயப்படுத்த முடியாது என அமைச்சர் தெரிவித்தார் எனத் தகவலறிந்த வட்டாரமொன்று தெரிவித்தது.

வடபகுதியில் அதிக இராணு[illegible] பிரசன்னம் காணப்படுவதாக[illegible] பயங்கரவாத அச்சுறுத்தல் உள்ளதாகவும் மேற்படி பயண எச்சரிக்கையில் தெரிவிக்கப்பட்டிருந்தது.

இந்நாட்டில் பாலியல் வன்முறைகள் அதிகரித்திருப்பதாகவும் அதில் தெரிவிக்கப்பட்டிருந்தது. அரசியல் கூட்டங்கள் வன்முறைகளாக மாறுவது குறித்தும் எச்சரிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

எனினும் அவ்வாறான பிரச்சினைகள் எதுவும் இலங்கையில் இல்லை எனவும் அவர் குற்றம் சுமத்துவது தவறு எனவும் ஏற்கனவே இலங்கை கூறியுள்ளது.



நேற்றைய தினம் இலங்கைக்கு விஜயம் செய்த ஜப்பானிய விசேட தூதுவர் யசூசி அக்காஷி வெளிவிவகார அமைச்சர் பேராசிரியர் ஜி.எல்.பீரிஸ் மற்றும் நீதியமைச்சர் ரவூப் ஹக்கீம் ஆகியோரை தனித்தனியே சந்தித்து இலங்கையின் சமகால அரசியல் நிலவரம், யுத்தத்தின் பின்னரான மீள்குடியேற்றம், புனர்வாழ்வு, நல்லிணக்கம் மற்றும் அபிவிருத்தி நடவடிக்கைகள் தொடர்பாக பேச்சுவார்த்தை நடத்தினார்.

## சட்ட விரோத அவுஸ்திரேலிய... (தொடர்)

முகாம்களில் வாழும் இலங்கை தமிழர்களுக்கு விழிப்பு ணர்வை ஏற்படுத்தவும் தமிழக அரசு திட்டமிட்டுள்ளது.

கடல் வழியாக அவுஸ்திரேலியா செல்ல முயன்ற தமிழகர்கள் சுமார் 600 பேர் வரை கடலிலேயே உயிரிழந்துள்ளனர். சில நாட்களுக்கு முன்பு கூட சென்னையில் இருந்து கடல் வழியாக அவுஸ்திரேலியா தப்பிச் செல்ல முயன்ற 100 அகதிகள் கைது செய்யப்பட்டுள்ளனர் என்று தமிழக அரசு குறிப்பிட்டுள்ளது.

## மூன்றாம் தவணை...(தொடர்)

பணி பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ள நிலையில், இம்முறை இடம்பெற்றுக் கொண்டிருக்கும் உயர்தரப் பரீட்சை விடைத்தாள்களை திருத்துவதற்கு செல்ல மாட்டார்கள் எனத் தெரிவித்துள்ளனர்.

அப்பரீட்சை தாள்களை திருத்துவதற்கு அவர்கள்தான் சிறந்தவர்கள். அவர்களது இடத்தை வேறு எவராலும் நிரப்ப முடியாது என இலங்கை ஆசிரியர் சங்க பிரதான செயலாளர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை பல்கலைக்கழக விரிவுரையாளர்களது போராட்டத்திற்கு தாம் நூறுவீத ஒத்துழைப்பை வழங்குவதாகவும் அச்சங்கம் தெரிவித்துள்ளது.

## வினாத்தாள் தவறுகளால் பாதிக்கப்பட்ட.. (தொடர்)

சில மாணவர்களுக்கு கிடைக்கவில்லை.

"விடைத்தாள்களை நாம் திருத்தும்போது, பாதிக்கப்பட்ட பரீட்சார்த்திகள் தொடர்பாக நாம் தீர்மானமொன்றை மேற்கொள்வோம். இது தொடர்பாக நியமிக்கப்பட்ட நிபுணர்கள் குழு தீர்மானம் மேற்கொள்ளும்" - என்றார்.

மேலும் இராசாயனவியல், பௌதிகவியல், விவசாய விஞ்ஞானம், சிங்கள மொழி ஆகிய வினாப் பத்திரங்கள் குறித்து அவர் கருத்துத் தெரிவிக்கையில், அவற்றில் சிறிய தவறுகள் காணப்பட்டன.

"532 பாடப்பகுதிகள் தொடர்பாக 52,00,000 வினாப்பத்திர பிரதிகளை நாம் அச்சடிக்கிறோம். இவற்றில் தவறுகள் 0.1. சதவீதம் மாத்திரமேயாகும். கேம்பிரிட்ஜ் சர்வதேச பரீட்சை போன்றவற்றிலும் இத்தகைய தவறுகள் ஏற்பட்டமை தொடர்பாக தெரிவிக்கப்பட்டுள்ளன" என்று கூறினார்.

## நீதவான் மீது மனித மலக்...(தொடர்)

தங்கொட்டுவைப் பகுதியில் ஆறு வயது சிறுவன் ஒருவனை பாலியல் துஷ்பிரயோகத்திற்கு உட்படுத்திய குற்றச்சாட்டின் பேரில் குறித்த நபர் கைதுசெய்யப்பட்டு தடுத்துவைக்கப்பட்டிருந்தார். இது தொடர்பான வழக்கு நேற்றுக் காலை விசாரணைக்கு எடுக்கப் பட்டது.

கூண்டுக் கதவை திறந்தபோது வெளியே வந்த குறித்த நபர், தனது ஆசனத்தில் அமர்ந்திருந்த மேல் நீதமன்ற நீதவான் மலனி குணரட்ன மீது பொதி ஒன்றை வீசினார். இருப்பினும் அவர் வீசிய பொதி இலக்குத் தவறி சுவரில் போய் வீழ்ந்தது. இந்தப் பொதியை பொலிஸார் சோதனை செய்தபோது அதில் மனித மலக் கழிவு காணப்பட்டது.

## மன்னார் நீதிமன்றத் தாக்குதல்... (தொடர்)

கடந்த மாதம் 18ஆம் திகதி மன்னார் நீதிமன்றம் மீதான தாக்குதல் சம்பவம் தொடர்பில் ஏற்கனவே 13 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

அத்தோடு அடையாளம் காணப்பட்ட மேலும் 26 சந்தேக நபர்களையும் கைது செய்து நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துமாறு மன்னார் பொலிஸாருக்கு உத்தரவு பிறப்பிக்கப்பட்டிருந்தது.

இந்த நிலையில் விசேட குற்றத்தடுப்பு பிரிவு பொலிஸார் தன்வசம் வைத்துள்ள வீடியோ மற்றும் புகைப்பட ஆதாரங்களை வைத்து மேற்படி ஐந்து சந்தேக நபர்களும் கைது செய்யப்பட்டு நீதிமன்ற உத்தரவுக்கமைய விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

## நல்லிணக்க முயற்சிகள்... (தொடர்)

மயப்படுத்தல் ஆகியவற்றில் ஏற்பட்ட முன்னேற்றங்கள் பற்றி அமைச்சர் பீரிஸ் விளக்கிக் கூறினார். கண்ணிவெடி அகற்றும் பணிகள் பெரும்பாலும் பூர்த்தியாகி விட்டன என்றும் சொன்னார்.

அரசாங்கத்தின் மும்மொழித் திட்டம், வடக்கில் எழுநூறுக்கு மேற்பட்ட தமிழ் பேசும் பொலிசார் சேவையில் இணைத்துக் கொள்ளப்பட்டமை போன்ற விடயங்களையும் அமைச்சர் பீரிஸ் விளக்கினார். காணிப் பிரச்சினை அதற்குத் தீர்வுகாண அரசு கைக் கொள்ளும் அணுகுமுறை, உத்தேச காணி ஆணைக்குழுவை நிறுவ எடுக்கப்படும் முயற்சிகள் பற்றியெல்லாம் அமைச்சர் பீரிஸ் விளக்கினார்.

அரசியல் மற்றும் அரசியலமைப்பு விடயங்கள் தொடர்பாக பாராளுமன்றத்தில் அங்கம் வகிக்கும் அரசியல் கட்சிகளை உள்ளடக்கிப் பாராளுமன்ற தெரிவுக் கமிட்டியை உடன் நிறுவ அரசு எடுக்கும் முயற்சிகள் பற்றியும் எடுத்துக்கூறினார்.

## இடம்பெயர்ந்த வடபகுதி மக்களுக்கு... (தொடர்)

மில்லியன் மக்கள் பாதிக்கப்பட்டதாகவும் 366 பில்லியன் அமெரிக்க டொலர் அளவிலான சேதங்கள் ஏற்பட்டதாகவும் நன்றி கூறினர்.

ஐ.நா.பொதுச்சபை ஓகஸ்ட் 19 ஆம் திகதினைய உலக மனிதாபிமான தினமாக பிரகடனம் செய்துள்ளது. 2003 ஆம் ஆண்டு பாக்தாத் நகரிலிருந்த ஐ.நா. அலுவலகத்தின் மீது மேற்கொள்ளப்பட்ட பாரிய குண்டுத்தாக்குதலில் 22 மனிதாபிமானப் பணியாளர்கள் இறந்ததை நினைவுகூறும் வகையில் இத்தினம் அனுஷ்டிக்கப்படுகிறது. இவ்வருடத்திற்கான தொனிப்பொருள் நான் இங்கிந்தேன் என்பதாகும். இது எவ்வளவு சிறிய தொகையினராக இருப்பினும் மக்களுக்கு உதவுவதாகும்.

இந்த நிகழ்வில் இராஜதந்திர சேவையினர் நன்கொடை வழங்கும் அமைப்புகள், சிரேஷ்ட அரசாங்க அதிகாரிகள் சிவில் சமூக உத்தியோகஸ்தர்கள் ஆகியோருடன் பொருளாதார அபிவிருத்தி அமைச்சர் பஷில் ராஜபக்ஷவும் கலந்துகொண்டார்.

# பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் இன்று ஆர்ப்பாட்டப் போராட்டம்

பல்கலைக்கழக ஆசிரியர் சங்கங்களின் கோரிக்கைகளை அரசாங்கம் நிறைவேற்றாததைக் கண்டித்து, மாபெரும் ஆர்ப்பாட்டம் ஒன்றை இன்று வியாழக்கிழமை நடத்துவதற்கு நாட்டின் சகல பல்கலைக்கழகங்களும் 80 தொழிற்சங்கங்களும் பல சிவில் சமூக அமைப்புகளும் இணைந்து தீர்மானித்துள்ளன.

இந்த ஆர்ப்பாட்ட ஊர்வலங்கள் கொழும்பு நகரின் 3 முக்கிய இடங்களிலிருந்து 3.00 மணிக்கு ஆரம்பித்து ஹைட்பார்க் நோக்கி செல்லும். மொறட்டுவ, றுகுணு, கொழும்பு, கட்புல கலைகள் பல்கலைக்கழகங்கள் மற்றும் தொழிற்சங்கங்களின் ஊர்வலங்கள் விகாரமாதேவி பூங்காவூடாக தர்மபால மாவத்தையூடாகச் செல்லும்.

ஸ்ரீஜெயவர்தனபுர, சப்பிரகமுவ மற்றும் திறந்த பல்கலைக்கழகங்கள் ஆகியவற்றின் ஊர்வலங்கள் சம்பத்வங்கியில் ஆரம்பித்து நவம் மாவத்தையூடாக செல்லும்.

மொத்த உள்நாடடு உற்பத்தியின் 6 சதவீதத்தை கல்விக்கு செலவளிக்க வேண்டும். கல்வியை அரசியல் மயப்படுத்துவதையும் நிறுத்த வேண்டும். கல்விக் கொள்கைகளை எழுந்தமானமாக அன்றி, கல்வியாளரின் ஆலோசனையுடன் வகுக்க வேண்டும் என்பன பல்கலைக்கழக ஆசிரியர்களின் கோரிக்கைகள் ஆகும்.

"நாம் தோல்வி அடைய மாட்டோம். எமது கோரிக்கைகளை நாம் வென்றெடுப்பது நிச்சயம். ஆனால் இது எப்போது நடக்கும் என்பது அரசாங்கத்தைப் பொறுத்தது" என பல்கலைக்கழக ஆசிரியர்களின் சங்கங்களின் சம்மேளன உபதலைவர் தம்பர அமில தேரர் கூறினார்.

"எமது சம்பளத் தினத்தில் எமக்கு சம்பளம் கிடைக்காவிட்டால் நாம் தொழிற்சங்க நடவடிக்கைகளை கைவிடுவோம் என அவர்கள் எண்ணுகின்றனர். ஆனால் நாம் முன்னெப்போதையும்விட இப்போது வேலை நிறுத்தத்தை தொடர்வதில் உறுதியாக உள்ளோம்" என சம்மேளனத்தின் தலைவர் நிமல் தேவசிறி கூறினார்.

# கொழும்பு நூதனசாலை திருட்டு சம்பவம்: மேலும் 9 பேருக்கு பொலிஸார் வலைவீச்சு

கொழும்பு நூதனசாலை திருட்டு தொடர்பாக பிரதான சந்தேக நபர் உட்பட மேலும் 8 பேரை பொலிஸார் இன்னும் தேடி வருகின்றனர்.

இத்திருட்டு தொடர்பாக இரு பெண்கள் உட்பட மூவர் திங்கட்கிழமை இரவு கைது செய்யப்பட்டனர். இவர்களை செப்டெம்பர் 4 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்குமாறு கெஸ்பேவ நீதவான் நீதிமன்றம் உத்தரவிட்டது.

பிரதான சந்தேக நபரின் மனைவியான கோனவெலயை சேர்ந்த பெண்ணொருவரும் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

திருடப்பட்ட புராதன பொருட்களில் சிலவற்றை பொலிஸார் கைப்பற்றியுள்ளனர்.

எனினும் அவற்றிலிருந்த இருந்த விலை உயர்ந்த கற்கள் மற்றும் தங்கம் ஆகியன அகற்றப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள், குற்றப் புலனாய்வுப் பிரிவினரால் விசாரிக்கப்பட்டு வருகின்றனர்.

கைதான பெண்களில் ஒருவர் விமானசேவை நிறுவனமொன்றின் முன்னாள் ஊழியராவார். மற்றொருவர் கொழும்பு மாநகர சபை தொழிலாளியாவார் என பொலிஸார் தெரிவித்தனர்.



வேலணை சரவணைப் பகுதியில் உள்ள குளம் பிரதேச மக்களின் நன்மை கருதி சிரமதானப் பணிமூலம் துப்புரவு செய்யப்பட்டது. படத்தில் பிரதேச மக்கள் அரசியல் பிரமுகர்கள் இணைந்து குளத்தினை சிரமதானம் மூலம் சுத்தம் செய்வதை படங்களில் காணலாம்.

(தெல்லிப்பழை நிருபர்)

## காலாவதியான உணவுப் பண்டங்கள் மீட்பு

நுகர்வோர் அதிகார சபையினால் வேலணை மற்றும் புங்குடு தீவு பகுதியில் காலாவதியான பொருட்கள் மற்றும் நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமான விற்பனை செய்யப்பட்ட அத்தியாவசிய பொருட்கள் மற்றும் குளிர்பானங்கள் போன்றன வர்த்தக நிலையங்களில் மீட்கப்பட்டுள்ளன.

பாவனையாளர் அதிகார சபையினால் மேற்கொள்ளப்பட்ட திடீர் சோதனையின் போது குறித்த வர்த்தக நிலையங்களில் கடந்த மாதம் முதல் சோடா, சீனி, பிஸ்கட் போன்ற அத்தியாவசிய பொருட்கள் மீட்கப்பட்டுள்ளன.

மேலும் பாவனையாளர் அதிகார சபையின் தண்டனை சட்டத்தின் கீழ் அத்தியாவசிய பொருட்களை நிர்ணயிக்கப்பட்ட விலைக்கு அதிகமாக விற்பனை செய்யும் வர்த்தகர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படவுள்ளது.

## மூன்று மாகாணங்களில் அரச பதவிகளுக்கு ஆட்சேர்க்கத் தடை

[illegible]தல்கள் நடைபெற இருக்கும் மூன்று மாகாணங்களிலும் தேர்தல் நடைபெறும் தினமாக 8ஆம் திகதிவரை அரசாங்கப் பதவிகளுக்கு ஆட்களைத் திரட்ட வேண்டாமென்று தேர்தல் ஆணையாளர் அறிவுறுத்தியுள்ளார். பொது நிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சுக் காரியதரிசிக்கு இந்த அறிவுறுத்தல் விடுக்கப்பட்டுள்ளது. பொதுநிர்வாக உள்நாட்டு அலுவல்கள் அமைச்சர் டபிள்யு. டி.ஜே.செனிவிரத்ன, நாற்பத்து மூவாயிரம் பட்டதாரிகளை நிகழ்ச்சித்திட்ட அதிகாரிகளாக ஆட்சேர்க்கும் திட்டத்தின் கீழ் வேலைகளை மேற்கொள்ளும் கட்டத்திலேயே இவ்வாறான அறிவுறுத்தல் விடுவிக்கப்பட்டுள்ளது.

## பருத்தித்துறை வீதி புனரமைப்பு

பருத்தித்துறை - யாழ்ப்பாணம் வீதியில கல்வியங்காடு சந்தியிலிருந்து இருபாலை சந்தி வரையிலான வீதி திருத்த வேலைகளை முன்னிட்டு மூடப்பட்டுள்ளதாக வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். அலுவலகம் அறிவித்துள்ளது.

டச்சு வீதி, இராசபாதை வீதி ஆகியன மாற்றுப்பாதைகளாக தற்போது பயன்படுத்தப்படுவதாகவும் வீதி அபிவிருத்தி அதிகாரசபையின் யாழ். அலுவலகம் தெரிவித்துள்ளது.

இலங்கை வங்கி ஊழியர் சங்கம்:

# புதிய நிறைவேற்றுக் குழுவுக்கு உறுப்பினர்களை நியமிக்கத் தடை

இலங்கை வங்கி ஊழியர் தொழிற்சங்கம் புதிய நிர்வாகிகளைத் தெரிவுசெய்வதற்கான கூட்டத்தை நடத்துவதற்கு கொழும்பு மாவட்ட நீதிமன்றம் தடைவிதித்துள்ளது.

அதேவேளை, சங்கத்தின் புதிய செயலாளரை நியமிப்பதற்கு மத்திய குழுவை கூட்ட வேண்டுமெனவும் நீதிமன்றம் பணித்துள்ளது.

வங்கி ஊழியர் சங்கத்தின் மக்கள் வங்கிப் பிரிவு, அச்சங்கத்தின் 257 மத்திய குழு அங்கத்தவர்களுடன் இணைந்து தாக்கல் செய்த மனுவையடுத்தே மேற்படி கொழும்பு மாவட்ட நீதிபதி ஜி.ஏ. தம்மிக கனேபொல வினால் மேற்படி உத்தரவுகள் பிறப்பிக்கப்பட்டன.

மனுதாரர்கள் சார்பில் புண்ய ஜயதிலக்கவின் நெறிப்படுத்தலில் நவோதா விஜேரட்ண, தாரக நாணயக்காரவுடன் பைஸர் முஸ்தபா நீதிமன்றில் ஆஜரானார்.

# உயர்தரப் பரீட்சைக்கு நான் இடையூறு ஏற்படுத்தவில்லை

பேர்ட்டி

அநுராதபுரத்தில் கடந்த சனிக்கிழமை நடைபெற்ற தேர்தல் பிரசாரக் கூட்டத்தின்போது க.பொ.த. உயர்தரப் பரீட்சைக்கு தான் இடையூறு ஏற்படுத்தவில்லை என வடமத்திய மாகாண சபையின் முன்னாள் முதலமைச்சர் பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்க கூறியுள்ளார்.

அப்படியான சம்பவம் நடைபெற்றதாக தான் அறியவில்லை எனவும் அவர் கூறினார்.

"நான் அந்தக் கூட்டத்திற்கு வந்தபோது ஆதரவாளர்கள் திரண்டிருந்தனர்.

அக்கூட்டத்தில் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ கலந்து கொள்ளவிருந்தார். க.பொ.த. உயர்தரப் பரீட்சை பிற்பகல் 3.00 மணிக்கு முடிந்துவிட்டது.

நான் அங்கு 3.15 மணிக்கு வந்தேன்.

அதற்கு முன்னர் என்ன நடந்தது என எனக்குத் தெரியவில்லை" என அவர் கூறினார்.

"அப் பகுதியில் பரீட்சை நடைபெறுவதாகத் தான் அறிந்திருக்கவில்லை எனவும் ஏதேனும் இடையூறுகள் ஏற்பட்டிருந்தால் அது தனது எதிரிகளினாலேயே ஏற்படுத்தப்பட்டிருக்கும்" எனவும் பேர்ட்டி பிரேம்லால் திசாநாயக்க கூறினார்.

# மாலைதீவின் புதிய ஜனாதிபதி இன்று இலங்கை வருகிறார்

மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் வாஹிட் ஹசன் இன்று வியாழக்கிழமை இலங்கைக்கு வருகை தரவுள்ளார்.

இரு நாட்கள் இலங்கையில் தங்கியிருக்கவுள்ள அவர், ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவை சந்தித்து கலந்துரையாடுவதுடன் இரு நாடுகளுக்கும் இடையிலான ஒத்துழைப்புகள் குறித்த புரிந்துணர்வு ஒப்பந்தமொன்றில் கையெழுத்திடவுள்ளதாக வெளிவிவகார அமைச்சு தெரிவித்தது.

2010 ஆம் ஆண்டு அப்போதைய மாலைதீவு ஜனாதிபதி மொஹமட் நீட்டுக்கும் எதிர்க்கட்சியினருக்கும் இடையில் மத்தியஸ்தம் செய்வதற்காக ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ மாலைதீவுக்கு விஜயம் செய்தமை குறிப்பிடத்தக்கது.

எதிர்க்கட்சியினரின் ஆர்ப்பாட்டங்களையடுத்து, இவ்வருடம் பெப்ரவரி மாதம் ஜனாதிபதி பதவியிலிருந்து நீ'ஷ்ட் இராஜினாமா செய்தார். அதன்பின் மொஹமட் வாஹிட் ஹசன் ஜனாதிபதியாக பதவியேற்றார்.

## இன்றைய இராசி பலன்கள் (23.08.2012)

**நந்தன வருடம் ஆவணித் திங்கள் 7 ஆம் நாள் வியாழக்கிழமை**

**நட்சத்திரம்** : சுவாதி பிற்பகல் 3.31 வரை அதன் பின் விசாகம்
**திதி** : சஷ்டி பிற்பகல் 12.20 வரை அதன் பின் ஸப்தமி
**சுபநேரம்** : 7.35 - 9.05 **இராகுகாலம்** : 1.35 - 3.05
(இந்த நேரங்கள் பகலுக்கும் இரவுக்கும் பொருந்தும்)


**மேடம்** : மன அமைதி, தொழில் முன்னேற்றம், நண்பர் உதவி.
**இடபம்** : பணக்கஷ்டம், உடல் நலக் குறைவு, கோபமிகுதி.
**மிதுனம்** : எதிர்பாராத வரவு, புத்திசாதுரியம், புத்திரரால் நன்மை.
**கடகம்** : காணி நிலம் சேர்க்கை, குடும்ப மகிழ்ச்சி, தாய்வழி ஆதரவு.
**சிங்கம்** : இடம் மாறுதல், பிரயாசை, சகோதர சஞ்சலம்.
**கன்னி** : பணப் புழக்கம், போசன சுகம், மனைவி வழியால் நன்மை.
**துலாம்** : மன உழைச்சல், கடும் முயற்சி, கபாலரோகம்.
**விருச்சிகம்** : பொருட் செலவு, ஏமாற்றம், பிரயாணக் கஷ்டம்.
**தனுசு** : புது முயற்சி, தொழில் இலாபம், குடும்ப சுகம்.
**மகரம்** : நற்காரிய விருத்தி, தொழில் ஆர்வம், அதிகாரம் செய்தல்.
**கும்பம்** : சுபகாரிய செயற்கை, தெய்வ அனுகூலம், பெரியோர் மதிப்பு.
**மீனம்** : வீண் விரயம், குடும்ப கலகம், போக்குவரத்தில் கலகம்.

**- ஜோதிடர் பால.இரத்தினசேகர்**

# இதுவரை 12 தடவைகள் பழுதடைந்த நுரைச்சோலை அனல் மின்நிலையம்

சீன நிதியுதவியுடன் நுரைச்சோலையில் நிர்மானிக்கப்பட்டுள்ள அனல்மின்நிலையம் இயங்க ஆரம்பித்ததில் இருந்து 12 தடவைகள் பழுதடைந்திருப்பதாக மின்சாரத்துறை அமைச்சர் சம்பிக்க ரணவக்க தெரிவித்திருக்கிறார்.

இந்த அனல் மின்னிலையம் கடந்த வருடம் மார்ச் மாதம் செயற்பட ஆரம்பித்தது. இதுவரையில் பன்னிரண்டு தடவைகள் பழுதடைந்துள்ள. எனினும் இதன் உற்பத்திச் செலவு குறைவு. இந்நிலையில் இதனைத் தொடர்ந்து இயக்குவதா, இல்லையா என்பது பற்றி ஆராய விசேட குழு நியமிக்கப்பட்டுள்ளதாகவும் கூறப்படுகிறது.



நுரைச்சோலை அனல் மின் உற்பத்தி நிலையம் பிரதேசவாசிகளின் எதிர்ப்புக்கு மத்தியிலும் 450 மில்லியன் அமெரிக்க டொலர்கள் செலவில் நிர்மாணிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

# உல்லாசப் பிரயாணத் துறைக்கு உதவ பாலாவி விமான நிலையம் விரிவாக்கம்!

இலங்கை விமானப்படைக்கு சொந்தமான புத்தளம் பாலாவி விமான நிலையத்தினை உள்நாட்டு விமான நிலையமாக அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது. அண்மையில் அதிகாரிகள் குழு ஒன்று இந்த விமான நிலையப் பகுதிக்கு விஜயம் செய்து நிலைமையை ஆராய்ந்துள்ளனர்.

இந்த விமான நிலையத்தின் 1000 மீற்றர் கொண்ட விமான ஓடுபாதையினை 1500 மீற்றராக நீடிப்பதற்கும் இதில் சிறியரக விமானங்களை தரையிறக்குவதற்கு ஏதுவான வகையில் ஒழுங்குகளை மேற்கொள்வதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

இலங்கைக்கு வருகை தரும் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது அதிகரித்துள்ள நிலையில் அவர்கள் கற்பிட்டி, வில்பத்து சரணாலயம் உட்பட உல்லாசப் பயணிகளைக் கவரும் வகையிலான பகுதிகளுக்கு இலகுவாகச் செல்லக்கூடிய வகையில் இந்த விமான நிலையம் அபிவிருத்தி செய்யப்படவுள்ளதாக அறியவருகிறது.

# சிறுபோக நெல்கொள்வனவுக்கு இந்த வருட நிதி ஒதுக்கீடு

இந்த ஆண்டிற்கான சிறுபோக நெல்லை கொள்வனவு செய்வதற்காக இரண்டு மில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டிருப்பதாக வர்த்தகத்துறை அமைச்சு தெரிவித்துள்ளது. மட்டக்களப்பு, அம்பாறை, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் சிறுபோகநெல் அறுவடை தற்சமயம்ஆரம்பமாகி உள்ளது. நெல் சந்தைபடுத்தும் சபை இதுவரை 1300 மெட்ரிக் தொன் நெல்லை கொள்வனவு செய்திருப்பதாகவும் கூறப்பட்டது.

# சர்வதேச மகளிர் தினத்தையொட்டி சிறுவர்களுக்கான சுவரொட்டிப் போட்டி

(உடுவில்)

சர்வதேச மகளிர் தினத்தையொட்டி மாணவர்களிடையே சுவரொட்டிப் போட்டி தொடரினை சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரங்கள் அமைச்சு நடாத்தவுள்ளது. சர்வதேச மகளிர் தினக் கொண்டாட்ட நிகழ்ச்சித் திட்டத்தை முன்னிட்டு எதிர்வரும் ஒக்டோபர் மாதம் 11ஆம் திகதி "நீங்கள் எமது பெண்மக்கள்" என்னும் தொனிப்பொருளில் மாணவர்கள் மற்றும் சிறுவர்கழக உறுப்பினர்களிடையே சுவரொட்டிப் போட்டி நடாத்தப்படவுள்ளது.

ஆறு வயது முதல் 14 வயது வரை ஒரு பிரிவும் 14 வயது முதல் 18 வயது வரை மற்றொரு பிரிவும் என இரண்டு பிரிவுகளாக போட்டி நடாத்தப்படவுள்ளது.

பாடசாலை மாணவர்கள், அதிபரின் உறுதிப்படுத்தலுடனும் சிறுவர் கழக உறுப்பினர்கள் பிரதேச செயலகங்களில் கடமையாற்றும் சிறுவர் உரிமைகள் மேம்பாட்டு அலுவலர் மற்றும் பிரதேச செயலாளரின் உறுதிப்படுத்தலுடன் எதிர்வரும் செப்டம்பர் மாதம் 10ஆம் திகதிக்கு முன் செயலாளர், சிறுவர் அபிவிருத்தி மகளிர் விவகாரங்கள் அமைச்சு, இல. 175A, நாவல வீதி, நுகேகொட என்னும் முகவரிக்கு அனுப்பி வைக்குமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

இப் போட்டி மாவட்ட மற்றும் தேசிய மட்டங்களில் இடம்பெற்றுள்ளதுடன் மாவட்ட மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே பத்தாயிரம், ஏழாயிரத்து ஐந்நூறு மற்றும் ஐயாயிரம் ரூபா வீதம் பணப் பரிசுகளும் தேசிய மட்டத்தில் முதலாம், இரண்டாம் மற்றும் மூன்றாம் இடங்களைப் பெறுபவர்களுக்கு முறையே இருபதாயிரம், பதினையாயிரம் மற்றும் பத்தாயிரம் ரூபா வீதம் பணப் பரிசுகளும் மேலும் ஏழு பேருக்கு மூவாயிரம் ரூபா பெறுமதியான ஆறுதல் பரிசும் வழங்கப்படவுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

# யா/சன்மார்க்க ம.வி.க்கு புதிய அதிபர் நியமனம்

(உடுவில்)

யா/சன்மார்க்க மகாவித்தியாலய அதிபராக எம்.முரளிதரன் வடமாகாண கல்வித் திணைக்களத்தினால் நியமிக்கப்பட்டுள்ளார். இவர் இலங்கை அதிபர் சேவை 2:2 இல் உள்ளதுடன் இதற்கு முன்பு 2007ஆம் ஆ[illegible] முதல் யா/ஆனைப்ந்தி மெதடி[illegible]த மிஷன் வித்தியாலய அதிபராக கடமையாற்றி வந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

# புங்குடுதீவு முற்றவெளியில் சந்தை

(உடுவில்)

வேலணை பிரதேச சபைக்குட்பட்ட புங்குடுதீவு முற்றவெளியில் சந்தை அமைக்கப்படவுள்ளது.

வடக்கு கிழக்கு மாகாணங்களுக்கான புறநெகும உள்ளூர் பிரதேச கிராமிய சிறுநகர அபிவிருத்திக்கான திட்டத்தின்கீழ் உலக வங்கியின் உதவியுடன் புங்குடுதீவு முற்றவெளி சந்தை நிர்மாணிக்கப்படவுள்ளது. இச் சந்தை பதின்மூன்று லட்சம் ரூபா செலவில் அமைக்கப்படவுள்ளன.

# தாய்மார்கள், பணிப்பெண்களாக வெளிநாடு செல்லத் தடைச்சட்டம்!

18 வயதுக்குக் குறைந்த பிள்ளைகளைக் கொண்டிருக்கும் தாய்மார்கள், பணிப்பெண்களாக தொழில் வாயப்புப் பெற்று வெளிநாடு செல்லக் கூடாது.

இவ்வாறான தாய்மார்கள் வெளிநாடுகளுக்குச் செல்வதால், சிறுவர் துர்ப்பிரயோகங்கள் மற்றும் வன்முறை நடவடிக்கைகள் இந்த நாட்டில் அதிகரித்து வருகின்றன. எனவே இதனைத் தடுக்கும் வகையில் தடைச் சட்டம் கொண்டுவரப்படுவது அவசியம் என பலராலும் சுட்டிக்காட்டப்பட்டு வருகிறது.

# புதுக்குடியிருப்பில் மீள்குடியேறிய குடும்பங்களுக்கு வீடு கட்ட காணிகள்

முல்லைத்தீவு மாவட்டத்தின் புதுக்குடியிருப்புப் பிரதேசத்தில் மீள்குடியமரச் சென்ற ஐம்பது குடும்பங்களுக்கு வீடு கட்டுவதற்காகக் காணிகள் வழங்கப்பட்டுள்ளன. குடியமர்வதற்கான இக் காணிகளை புதுக்குடியிருப்புப் பிரதேச செயலர் எஸ்.ஜெயகாந்த் வழங்கியுள்ளார். இதனால் தொடர்ந்து சம்பந்தப்பட்ட மக்கள் தங்கள் காணிகளைத் துப்புரவு செய்து வருகின்றார்கள்.

புதுக்குடியிருப்புப் பிரதேசத்திலிருந்து போரினால் இடம்பெயர்ந்து செட்டிகுளம் நலன்புரி நிலையத்தில் தங்கியிருந்த புதுக்குடியிருப்பு கிழக்கு, புதுக்குடியிருப்பு மேற்கு ஆகிய கிராம உத்தியோகத்தர் பிரிவுகளைச் சேர்ந்த குடும்பங்கள் கடந்த 13 ஆம் திகதி அழைத்துவரப்பட்டு சொந்த இடங்களில் மீள்குடியமர்த்தப்பட்டுள்ளன.

மீள்குடியமர்த்தப்பட்ட இவர்களில் புதுக்குடியிருப்பு மேற்கைச் சேர்ந்த 36 குடும்பங்களுக்கு கோம்பாவில் கிராம உத்தியோகத்தர் பிரிவிலுள்ள திம்பிலிக் கிராமத்தில் ஒவ்வொரு குடும்பத்துக்கும் கால் ஏக்கர் (3½ பரப்பு) வீதம் வீடு கட்டுவதற்குக் காணி வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# தனியார் பஸ் சாரதிகள், நடத்துநர்களுக்கு எச்சரிக்கை

(வல்வெட்டித்துறை)

தனியார் பஸ்களில் பயணிக்கும் பொதுமக்களுக்கு இடையூறு விளைவிக்கும் வகையில் செயற்படும் சாரதி மற்றும் நடத்துனர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் என்று வல் வெட்டித்துறை பொலிஸ் நிலையப் போக்குவரத்து பொலிஸார் தெரிவித்தனர்.

வல்வெட்டித்துறை போக்குவரத்து பொலிஸாரின் ஏற்பாட்டில் பொலிஸ் பிரிவுக்கு உட்பட்ட தனியார் பஸ் உரிமையாளர்கள், சாரதிகள், நடத்துனர்களுக்கான விசேட கூட்டம் கடந்த பத்தாம் திகதி வெள்ளிக்கிழமை காலை 6.30 மணிக்கு வல்வெட்டித்துறை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி எம்.எஸ்.குமாரசிவக தலைமையில் இடம்பெற்றது. அவர் இதில் தெரிவித்ததாவது:

தனியார் பஸ்களில் பயணம் செய்யும் பயணிகளுக்கென நடத்துனரால் வழங்கப்படும் பயணச் சீட்டில் திகதி, சீட்டின் இலக்கம், இடங்கள், பணத்தொகை மற்றும் பஸ் இலக்கம் என்பன தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும். பஸ்களில் அளவுக்கதிகமாக ஆட்களை ஏற்றக்கூடாது. நடத்துனரால் வழங்கப்படும் பயணச்சீட்டில் திகதி, சீட்டின் இலக்கம், இடங்கள், பணத் தொகை மற்றும் பஸ் இலக்கம் என்பன தெளிவாக குறிப்பிடப்பட்டிருக்க வேண்டும். பஸ்களில் அளவுக்கதிகமாக ஆட்களை ஏற்றக்கூடாது. மிதி பலகைகளில் பயணிகள் பயணிக்கக்கூடாது. அத்துடன் பயணிகள் மீது நடத்துநர்கள் தவறான வார்த்தைப் பிரயோகங்களை பாவிக்கக் கூடாது. சாரதிகள், நடத்துநர்கள் ஆகியோர் மது போதையில் கடமையில் ஈடுபடக் கூடாது என்றும் போக்குவரத்து விதிமுறைகளை மீறிச் செயற்படுவோர் மீது கடுமையான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் தெரிவிக்கப்பட்டது. பயணிகளிடம் அந்நியோன்னியமாக பழகி அவர்களுக்கு ஏற்படும் சிரமங்களைத் தவிர்த்து, பொறுப்புள்ளவர்களாக நடத்துநர், சாரதிகள் செயற்பட வேண்டும்.

# 12 மில்லியன் பெறுமதியான அணு விபத்து எச்சரிக்கை கருவிகள் கொள்வனவு

இலங்கை மின்சாரசபையின் கீழ் இயங்கும் அணுசக்தி அதிகாரசபை சர்வதேச அணுசக்தி முகவர் நிறுவனத்திடம் இருந்து 12 மில்லியன் ரூபா பெறுமதியான எட்டு அணு விபத்து எச்சரிக்கை கருவிகளை கொள்வனவு செய்துள்ளது.


அணு விபத்துகள் தொடர்பாக பொதுமக்களை எச்சரிப்பதற்காக ஐந்து அணுவிபத்து எச்சரிக்கை நிலையங்களை அமைப்பதற்கு இலங்கை அரசாங்கம் தீர்மானித்துள்ளதாக மின்சக்தி- எரிசக்தி அமைச்சு தெரிவித்தது.

இதற்கான ஒப்பந்தம் கடந்த ஜூன் மாதம் 28 ஆம்திகதி கைச்சாத்திடப்பட்டது. இந்தஒப்பந்தத்தில் இலங்கை கடற்படை அனரத்த முகாமைத்துவ நிலையம் மற்றும் இலங்கை அணுசக்தி அதிகாரசபை என்பன கைச்சாத்திட்டன.

கொள்வனவு செய்யப்படும் உபகரணங்கள் கடற்படை முகாம்கள் மற்றும் மத்திய பிரதேசங்களில் பொருத்தப்படும்.

இவற்றை கொழும்பு ஊறுகொடவத்தையிலுள்ள அணுசக்தி அதிகாரசபை கண்காணிக்கும் எனவும் தெரிவிக்கப்படுகிறது.

தமிழ்நாட்டில் அமைக்கப்பட்டுள்ள கூடங்குளம் அணு மின் நிலையம் விரைவில் அணுமின் உற்பத்தி வேலைகளை ஆரம்பிக்கவுள்ளதும் இங்கு சுட்டிக்காட்டத்தக்கது.



# விளையாட்டுத்துறை சமூக அபிவிருத்திக்கு கூடுதலான பங்களிப்பினை செலுத்துகிறது

**யாழ்.அரச அதிபர் உரை**

அபிவிருத்தி என்கிற விடயம் சமூக அபிவிருத்தியை மையப்படுத்தியதாக அமையவேண்டும். சமூக அபிவிருத்திக்கு விளையாட்டுத்துறை மிகக் கூடுதலான பங்களிப்பையும் அக்கறையினையும் செலுத்தி வருகின்றது என யாழ்.அரச அதிபர் சுந்தரம் அருமைநாயகம் தெரிவித்தார்.

வடமாகாண விளையாட்டுத் துறையின் ஏற்பாட்டில் தேசிய கால்பந்தாட்ட அணிக்கு வீரர்களைத் தெரிவு செய்வதற்கான பிரதேச மட்டத்தில் நடைபெறவுள்ள கால்பந்தாட்டப் போட்டிகளை நடாத்துவதற்கு பிரதேச செயலாளர்களுக்கான காசோலை வழங்கும் நிகழ்வு நேற்றுமுன்தினம் செவ்வாய்கிழமை மாவட்டச் செயலகத்தில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

பொதுவாக அபிவிருத்தி என்பது கட்டிடங்களையும் காணிகளையும் வீதிகளையும் அபிவிருத்தி செய்வதை மையமாகக் கொண்டவை. அவ்வாறான அபிவிருத்திகளை மட்டுமே அபிவிருத்தி என்கின்ற ஒருநோக்கு கடந்த காலங்களில் இருந்தாலும் கூட, உண்மையில் அபிவிருத்தி என்கிற விடயம் சமூக அபிவிருத்தியை மையப்படுத்தியதாக அமையவேண்டும். இத்தகைய சமூக அபிவிருத்திக்கு விளையாட்டுத்துறை மிகக் கூடுதலான பங்களிப்பையும் அக்கறையினையும் செலுத்தி வருகின்றது.

கடந்த இரண்டு மாதங்களுக்கு முன்னர் கிளிநொச்சியில் நடைபெற்ற கலந்துரையாடல் ஒன்றில் விளையாட்டுத்துறை அமைச்சர் விளையாட்டுத்துறையை மேம்படுத்துவதற்கு பிரதேச மட்டத்திலும் மாவட்ட ரீதியாகவும் பொது விளையாட்டு மைதானம் அமைக்கவேண்டும் என்ற திட்டம் அங்கீகரிக்கப்பட்டு தற்போது அத்திட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு வருகின்றது. அத்துடன் யாழ். மாவட்டத்தில் விளையாட்டத் துறையில் எத்தகைய சவால்கள் வந்தாலும் அதனை எதிகொண்டு எங்கள் திறன்களை வெளிக்காட்டக்கூடிய சந்தர்ப்பத்தை நாங்கள் அனைவரும் உருவாக்கவேண்டும். இதற்காக விளையாட்டுத் துறை உத்தியோகஸ்தர்கள் சிறந்த பங்களிப்பை வழங்க வேண்டும் என்றார்.

## தமிழக மீனவர் விவகாரம்:
# டெல்லியில் நடத்தப்படவிருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்பட்டது

தமிழக மீனவர்கள் பிரச்சனைக்குத் தீர்வு காண இந்திய மத்திய அரசை வலியுறுத்தி தி.மு.க. எம்.பி.க்கள் நேற்று இந்திய நாடாளுமன்ற வளாகத்தில் நடத்த இருந்த ஆர்ப்பாட்டம் திடீரென கைவிடப்பட்டுள்ளது.

சென்னையில் தி.மு.க. எம்.பிக்கள் குழு தலைவர் டி.ஆர். பாலு நேற்றுமுன்தினம் வெளியிட்ட அறிக்கையில், டெசோ மாநாட்டு தீர்மானங்களை விளக்கி தி.மு.க. தலைவர் கருணாநிதி எழுதிய கடிதம் பிரதமர் மன்மோகன் சிங்கிடம் தி.மு.க. சார்பில் கையளிக்கப்பட்டது.

அப்போது டெசோ மாநாட்டு தீர்மானத்தையும், தமிழக மீனவர்கள் இலங்கை கடற்படையினரால் தாக்கப்படும் செயலையும் எதிர்கொள்ளும் பாதிப்புக்கள் தொடர்பிலும் விளக்கமாக தி.மு.க. எம்.பி.க்கள் பிரதமரிடம் எடுத்துரைத்தனர். இது தொடர்ந்து நடைபெற்று வருகிறது, குறிப்பாக ராமேஸ்வரத்தை சேர்ந்த தமிழக மீனவர்கள் பாதிக்கப்பட்டுள்ளனர்.

இலங்கை கடற்படையினரால் தமிழக மீனவர்களின் உயிருக்கும், உடமைக்கும் பாதுகாப்பு அளிக்க நிரந்தர தீர்வு அளிக்கக்கோரி டெல்லி பாராளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை அருகே நேற்றுக் காலை 10 மணிக்கு ஆர்ப்பாட்டம் நடைபெறும் என்று தெரிவித்திருந்தார்.

இந்நிலையில் நேற்று டெல்லியில் செய்தியாளர்களிடம் பேசிய டி.ஆர்.பாலு, தமிழக மீனவர்களை இலங்கை விடுதலை செய்துவிட்டதால் நாடாளுமன்ற வளாகத்தில் நடைபெற இருந்த ஆர்ப்பாட்டம் கைவிடப்படுகிறது என்றார்.

# வலி.தெற்கு பி.சபை தலைமையகம் நேற்றுக் திட்டமிட்டபடி திறப்பு

உள்ளூராட்சி மன்றத்தின் பங்களிப்புடன் உள்ளூராட்சி உட்கட்டமைப்புக்களை மேம்படுத்தும் முகமாக நிர்மாணிக்கப்பட்ட வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கட்டிடத்திற்கான சமய முறைப்படியான சடங்குகள் நேற்று புதன்கிழமை நடைபெற்றன.

நேற்றுக் காலை 10 மணிக்கு வலிகாமம் தெற்கு பிரதேச சபைத் தலைவர் பிரகாஷ் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில் பிரதேசபை உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர்.

வலிகாமம் தெற்கு பிரதேச சபையின் தலைமை அலுவலக கட்டிடம் நேற்று திறக்கப்படவிருந்த நிலையில், இன்று அதிகாலை இனந்தெரியாத நபர்கள் குறித்த கட்டிடத்தின் மீது கழிவு எண்ணெய் ஊற்றி தாக்குதல் நடத்தியமை குறிப்பிடத்தக்கது.

# நீதவான்களுக்கு பயிற்றுவிப்பாளராக யாழ்.நீதவான் மா.கணேசராஜா

கொழும்பில் புதிதாக நியமனம் பெற்ற நீதவான்களுக்கான பயிற்சிகளை வழங்குவதற்கு யாழ்.நீதவான் நீதிமன்ற நீதவான் மா.கணேசராஜா நியமிக்கப்பட்டுள்ளார்.

இதற்கான நியமனத்தை நீதிச் சேவை ஆணைக் குழு தனக்கு வழங்கியதாக அவர் கூறினார்.

மேற்படி புதிய நீதவான்களுக்கு கொழும்பிலுள்ள சிரேஷ்ட நீதிபதிகளுடன் இணைந்து 3 மாத பயிற்சிகள் வழங்கப்படவுள்ளன.

இப்பயிற்சிகள் எதிர் வரும் செப் டெம்பர் மாதம் 3 ஆம் திகதி கொழும்பில் ஆரம்பிக்கப்படவுள்ளன.

இப்பயிற்சி நெறியின் பின்னர் நீதிச் சேவை ஆணைக்குழுவினால் தனக்கு மாவட்ட நீதிபதிக்கான நியமனம் வழங்கப்படவுள்ளதாகவும் யாழ்.நீதவான் மா.கணேசராஜா மேலும் தெரிவித்தார்.

# போலி நாணயத்தாள்: ஒருவர் கைது

பத்தள, படல்கும்புரவில் போலி நாணயத் தாள் வைத்திருந்த ஒருவரை பொலிஸார் கைது செய்துள்ளனர். இவ்வரிடமிருந்த போலி ஐநூறு ரூபா பொலிஸாரினால் கைப்பற்றப்பட்டுள்ளது.

கைது செய்யப்பட்டவர் நுவரெலியா, மாகஸ்தோட்ட பிரதேசத்தைச் சேர்ந்தவர் எனத் தெரிவிக்கப்படுகிறது.

இவரை வெல்லவாய நீதிமன்றத்தில் ஆஜர்படுத்துவதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

# கிழக்கு சபையை கூட்டமைப்பு கைப்பற்றிவிடும் என்ற பயம் அரசாங்கத்திற்கு இருக்கிறது

**அமைச்சர் ஹக்கீம்**

கிழக்கு மாகாண சபையை தமிழ் தேசியக் கூட்டமைப்பு கைப்பற்றி விடும் என்ற பயம் அரசாங்கத்திற்கு இருக்கின்றது. இந்தப் பயத்தை எமது சமூகத்தின் அந்தஸ்தை உயர்த்துவதற்கு நாம் பயன்படுத்த வேண்டும் என நீதி அமைச்சரும் ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸின் தலைவருமான றவூப் ஹக்கீம் கூறினார்.

கிழக்கு மாகாண சபைத் தேர்தலில் போட்டியிடும் முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளர்களுக்கு ஆதரவான பிரச்சாரக்கூட்டமொன்று கிண்ணியாவில் கிழக்கு மாகாண சபை வேட்பாளர் மௌலவி எஸ்.எல்.எம். ஹஸன் (அஷ்ஹரி) தலைமையில் கிண்ணியா ஹஸனாத் பராமரிப்பு நிலையத்தில் இடம்பெற்றது. இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றுகையிலேயே அமைச்சர் ஹக்கீம் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இந்நிகழ்வில் அமைச்சர் ஹக்கீம் தொடர்ந்தும் பேசுகையில்,

எங்களுடைய கட்சிதான் மிகப் பெரிய அளவில் பிளவுபட்ட இயக்கமாக இருக்கின்றது. ஒவ்வொரு தேர்தலிலும் ஏதோ கட்சியில் பதவிகளுக்காக சேர்ந்து கொள்வதாக இருக்கின்றனர். ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் கட்சி என்ற இயக்கம் தனித்து போட்டிடுவது என்ற முக்கிய தீர்மானத்திற்கு வந்த காரணம் முஸ்லிம் சமுதாயத்தை நீண்ட சந்தேக கண்ணோட்டத்தில் பார்ப்பது, எடுத்ததற்கெல்லாம் எங்களைப் பார்த்து நீங்கள் வந்தான் வரத்தான் என்ற ரீதியில் பார்ப்பது போன்றவையாகும். எங்களது ஆன்மீக நடவடிக்கைகளில் வழிந்து வந்து குந்தகம் விளைவிக்கின்ற ஒரு காலம் இது.

நிறைய அநீதி, அநியாயங்கள் நடக்கின்றன. இதைக் தட்டிக் கேட்பதற்கு இயலாத அரசியல் சமநிலையில்லாத நிலையில் இருக்கின்றோம்.

நாங்கள் அரசாங்கத்தில் இணைந்திருக்கின்றோம், ஆட்சியாளரிடம் பங்காளியாகவும் இருக்கின்றோம்.

சிலர் எங்களிடம் கேள்விகளைக் கேட்டுக் கொண்டிருக்கின்றார்கள். "நீங்கள் இன்னும் முஸ்லிம் காங்கிரஸ் தானே, அரசாங்கத்தில் தானே இருக்கின்றீர்கள் வெற்றி பெற்ற பின்னரும் மீண்டும் போய் அரசாங்கத்தில்தானே இருக்கப் போகின்றீர்கள் என்று கேட்கிறார்கள் என்றார்.

## ஸ்ரீலங்கா மிரர் இணையத்தள விவகாரம்:
# கணினிகளை ஒப்படைக்க சி.ஐ.டி.யினர் ஆட்சேபம்

கணினிகளில் உள்ள தரவுகளை மாற்றலாம் அல்லது அழிக்கலாம் என்பதால் ஸ்ரீலங்கா மிரர் இணையத்தளத்தின் உரிமையாளர்களிடம் கணினிகளை ஒப்படைப்பதற்கு குற்றவியல் புலனாய்வுப் பிரிவினர் நேற்றுமுன்தினம் ஆட்சேபம் தெரிவித்தனர்.

நீதிமன்றத்தின் ஆணையை பெற்றுக்கொண்டு ஸ்ரீலங்கா மிரர் மற்றும் எக்ஸ் நியூஸ் இணையத்தள அலுவலகத்தில் குற்றவியல் விசாரணை திணைக்கள பொலிஸார் திடீர் சோதனை நடத்தி கணினிகளை கைப்பற்றியதுடன் எட்டு ஊழியர்களையும் கைது செய்தனர் என ஸ்ரீலங்கா மிரர் சார்பில் ஆஜரான வழக்குரைஞர் உபுல் குமாரபெரும கூறினார்.

மேலும், தண்டனை கோவையின் பிரிவு 118 இன் கீழ் ஊழியர்களை கைது செய்ததாகவும் அது 2002 கோவையின் பிரிவு 12 இனால் இரத்துச் செய்யப்பட்டுவிட்டது எனவும் கூறினார். எனவே, குற்றப்புலனாய்வு பொலிஸ் இவர்களை கைது செய்தது பிழையானது என அவர், வாதாடினார்.

மேலும் அவர் "ஹெலப்பில் ஹம்பாந்தோட்டை" வழக்கில் உயர்நீதிமன்றம் அளித்த தீர்ப்பை மேற்கோள் காட்டி, அதில் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷவுக்கு எதிராக பொலிஸில் முறைப்பாடு செய்யப்படாததால் பொலிஸாரினால் வழக்கை முன்னெடுக்க முடியாது என கூறி வழக்கை தள்ளுபடி செய்ததை எடுத்துக் காட்டினார். இந்த வழக்கிலும் எவ்வித முறைப்பாடும் கிடைக்காதபோதும் குற்றப்புலனாய்வு பொலிஸார் தம் பாட்டில் செயற்பட்டுள்ளதால் வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டுமென வழக்குரைஞர் உபுல் குமாரபெரும வாதாடினார்.

கணினிகளில் உள்ள தரவுகளை மாற்றாது பேணுவ்தாக உரிமையாள்கள் உத்தரவாதம் அளிக்கும் பட்சத்தில் மாத்திரம் கணினிகளை ஒப்படைக்குமாறு சட்டமா அதிபர் அறிவுறுத்தியுள்ளார் எனவும் சந்தேக நபர்களை தண்டனை சட்டத்தின் பிரிவு 120 இன் கீழ் கைது செய்ததாகவும் குற்றப்புலனாய்வுப் பிரிவு இன்ஸ்பெக்டர் அநுர சில்வா கூறினார்.

# யாழ்ப்பாணத்தில் சர்வதேச மனிதாபிமான தினம் அனுஷ்டிப்பு

சர்வதேச மனிதாபிமான தினம் நேற்றுமுன்தினம் செவ்வாய்க்கிழமை காலை யாழ்ப்பாணத்தில் உள்ள யுன்.என்.எச்.சி.ஆர் காரியாலயத்தில் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

பாக்தாத் நகரில் கொல்லப்பட்ட மனிதாபிமான பணியாளர்களை நினைவுகூரும் முகமாக கடந்த 2008 ஆம் ஆண்டு முதல் வருடந்தோறும் ஓகஸ்ட் மாதம் 19 ஆம் திகதி இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டு வருகின்றது.

இலங்கையில் ரம்ழான் பெருநாளை முன்னிட்டு இன்று செவ்வாய்க்கிழமை இத்தினம் அனுஷ்டிக்கப்பட்டுள்ளது.

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இந்நிகழ்வில் ஐ.நா.தொண்டு நிறுவனங்கள் மற்றும் மனிதாபிமான உதவி நிறுவனங்கள் ஆகியவற்றின் பணியாளர்கள் கலந்துகொண்டனர். இத்தினத்தை முன்னிட்டு ஐக்கிய நாடுகள் சபையின் செயலாளர் நாயகத்தால் விடுவிக்கப்பட்ட செய்திக் குறிப்பும் வாசிக்கப்பட்டது.

இச்செய்திக்குறிப்பில் இவ்வாண்டுக்குரிய உலகமனிதாபிமான தினமானது உலகெங்கிலும் உள்ள 10 கோடி மக்களை ஒன்று கூட்டி மிகவும் வலுவானதும் மாற்றத்தை ஏற்படுத்தக்கூடியதுமான ஒன்றென ஐ.நா.செயலாளர் குறிப்பிட்டார்.

# யாழ்ப்பாணத்தில் தொடர் திருட்டு: மூன்று சந்தேகநபர்கள் கைது

யாழ்ப்பாணத்தில் வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் 3 பேர் கைது செய்யப்பட்டு விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக யாழ்.பொலிஸ் நிலைய உபபரிசோதகர் விக்கிரமராட்சி தெரிவித்தார்.

யாழ்.கொட்ல வண்ணார்பண்ணை சிவப்பிரகாசம் வீதி மற்றும் நல்லூரில் அரசடி வீதிகளில் உள்ள வீடுகளை உடைத்து திருட்டில் ஈடுபட்டவர்கள் என்ற சந்தேகத்தின் பேரில் இவர்கள் கைது செய்யப்பட்டுள்ளதாகவும் அவர் கூறினார்.

தமிழ்நாதம்
Thamil Naatham
ஆகஸ்ட் மாதம் 23ஆம் திகதி வியாழக்கிழமை

## பல்கலைக்கழகங்கள் போராட்டங்களின் குவிவு மையங்களாகலாம்

"நாட்டின் கல்வித்துறையில் நிலவும் நெருக்கடிகள் மீண்டும் ஒரு ஆயுதக் கிளர்ச்சிக்கு வழிவகுக்கலாம்" என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. திரு. எம்.ஏ.சுமந்திரன் கூறியுள்ளார். மருத்துவ பீடங்கள் தவிர்ந்த ஏனைய பீடங்களைச் சேர்ந்த விரிவுரையாளர்கள் தொடர்ச்சியாக நடத்தி வந்த பணிப் பகிஷ்கரிப்பின் காரணமாகச் சகல பல்கலைக்கழகங்களையும் மூடிவிடுமாறு உயர் கல்வி அமைச்சு உத்தரவிட்டிருக்கும் தருணத்திலேயே சுமந்திரனின் இந்த எச்சரிக்கையும் வெளிவந்திருக்கின்றது.

இசற் புள்ளி விவகாரத்தினால் ஜீ.சி.ஈ. உயர்தரப் பரீட்சைக்குத் தோற்றிய மாணவர்கள் பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இவர்களின் பிரச்சினைக்கு இன்னமும் தீர்வு காணப்படவில்லை. இதேவேளை பல்கலைக்கழக விரிவுரையாளர்கள், போதனாசிரியர்கள் நடத்திவந்த போராட்டம் இன்னமும் தொடர்கதையாகவே நிகழ்கின்றது. நாட்டில் சுமார் 15 பல்கலைக்கழகங்கள் உள்ளன. சப்பிரகமுவ பல்கலைக்கழகத்தில் 72 மாணவர்கள் இடை நிறுத்தப்பட்டுள்ளனர். யாழ் பல்கலைக்கழக மாணவர்களும் சில தினங்களுக்கு முன்னர் ஆர்ப்பாட்டப் பேரணியொன்றினை நடத்தியிருக்கிறார்கள்.

பல்கலைக்கழகங்கள் புத்திஜீவிகளை உருவாக்கும் ஒரு தொழிற்சாலையென்று கூறினால் அதில் தவறில்லை. நாட்டின் அரசியல், சமூக, பொருளாதார, நிர்வாகத் தலைவர்கள் எல்லாம் பெரும்பாலும் பல்கலைக்கழகங்களில் இருந்தே வெளிவருகிறார்கள். இலங்கையில் மட்டுமல்ல, முழு உலகிலுமே பல்கலைக்கழகங்கள் போராட்டத் தளங்களாகவும், ஆர்ப்பாட்டங்களின் குவிவு மையங்களாகவும் இருந்து வருகின்றன. சில போராட்டங்கள் நியாயமானவையாகவும், இன்னும் சில நியாயம் அற்றவையாகவும் இருக்கலாம்.

சுமந்திரன் எம்.பி. கூறியதைப் போன்று 1970 களின் ஆரம்பத்தில் பல்கலைக்கழக அனுமதிக்கெனக் கொண்டுவரப்பட்ட மொழிவாரித் தரப்படுத்தல் முறையே தமிழ் இளைஞர்களின் ஆயுதப் போராட்டத்துக்கு பிள்ளையார் சுழி போட்டது. யாழ்ப்பாணத்து தமிழ் இளைஞர், யுவதிகளே இந்த மொழி வாரி தரப்படுத்தல் முறையால் பெரிதும் பாதிக்கப்பட்டார்கள். மருத்துவம், பொருளியல் போன்ற துறை சார்ந்த பீடங்களுக்கு வடபகுதி தமிழ் இளைஞர்களே அன்று அதிகளவில் உள்வாங்கப்பட்டார்கள்.

சிங்கள மாணவர்களை விட வடபகுதித் தமிழ் மாணவர்கள் பெருமளவில் பல்கலைக்கழக அனுமதி வாய்ப்பை பெற்றதால், சிங்கள அரசியல்வாதிகள் எதிர்ப்பு நடவடிக்கைகளில் ஈடுபடத் தொடங்கினார்கள். இதன் விளைவாகவே மொழி வாரித் தரப்படுத்தல் முறை அமுலுக்கு கொண்டுவரப்பட்டது. இதன் விளைவால் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்களே தமிழ் மாணவ பேரவை என்ற ஓர் அமைப்பை உருவாக்கினார்கள். இதில் அங்கம் வகித்த தமிழ் இளைஞர்கள் பின்னர் பல்வேறு ஆயுதக் குழுக்களுக்கு தலைமை வகித்தார்கள். சுமார் 36 தமிழ் ஈழ ஆயுதக் குழுக்கள் அப்போது செயற்பட்டன என்று ஒரு புள்ளிவிபரம் குறிப்பிடுகின்றது. பின்னர் இவை ஐந்து குழுக்களாக ஒருமுகப்படுத்தப்பட்டு சர்வதேச அங்கீகாரத்துக்காக உலகம் தழுவிய வகையில் பாரிய முயற்சிகளை மேற்கொண்டார்கள்.

சுமந்திரன் எம்.பி. கூறியதைப் போன்று தமிழ் ஈழ ஆயுதப் போராட்டத்தில் பிரச்சார மையமாக லண்டனே திகழ்ந்தது. பின்னர் இது மேற்கத்திய தலைநகரங்களுக்கும் விரிவடைந்தது. மேற்கு நாடுகளில் இருந்துதான் தமிழக குழுக்களின் ஆயுதக் கொள்வனவு, நிதி சேகரிப்பு, பிரசார நடவடிக்கைகள் எல்லாம் மேற்கொள்ளப்பட்டன. தேசிய, சர்வதேச அளவில் இலங்கையின் ஆயுதப் போராட்ட நடவடிக்கைகளுக்கான களம் விரிந்து சென்றதினாலேயே யுத்தத்தை முடிவுக்கு கொண்டுவர முப்பது வருடங்கள் பிடித்தன.

இளவயதினர் எழுவானத்துச் சூரியன் போன்றவர்கள். அவர்கள் இலகுவில் சரியானதோ அல்லது பிழையானதோ என்ற வேறுபாடுகள் இன்றி கருத்துகளால் ஈர்க்கப்படுகிறார்கள். இளவயது துடிப்பும், பல்கலைக்கழகத்தில் நிலவும் புத்திஜீவித்துவத் தன்மையும் இவர்களை போராட்டப் பாதைக்கு அழைத்துச் செல்கிறது. உலக நாடுகளில் நிகழ்ந்த போராட்டங்களின் மூலஸ்தானங்களாகப் பல்கலைக்கழகங்களே திகழ்ந்திருக்கின்றன. எனவே இன்று இலங்கையின் கல்வித் துறையில் ஏற்பட்டிருக்கும் நெருக்கடிகள் ஓர் ஆபத்தான சமிக்ஞையைக் காட்டுகிறது. இந்த நெருக்கடிகளுக்கு இயன்றவரை விரைவாகத் தீர்வு காணப்படவில்லையென்றால் அது நாட்டுக்குப் பெரும் ஆபத்தாக அமைந்துவிடும்.

இல. 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்
ஆசிரியர் பீட தொலைபேசி/பக்ஸ் 021-2219505,
விளம்பரம்/விநியோகம் : 021-2219506
e-mail: tnaatham@yahoo.com

# 20ஆம் நூற்றாண்டின் அரசியல் வரலாறு

1917ஆம் ஆண்டு ரஷ்யாவில் லெனின் தலைமையில் நடந்த நிகழ்வு முதலாவது முக்கிய நிகழ்வாகும். அந்த அரசின் மேல் வெளிநாட்டுப் படைகள் ஆக்கிரமிப்பை மேற்கொண்டமையினால் அதைச் சுற்றியிருந்த 14 பால்டிக் குடியரசுகள் இணைந்து சோவியத் யூனியனாக பிரகடனப்படுத்தப்பட்டது. இந்த சோசலிச ஆட்சி 1991ஆம் ஆண்டு இறுதிவரை நீடித்தது. இரண்டாவது உலக மகா யுத்தம் 1945ஆம் ஆண்டு இத்தாலியில் முசோலினியும் ஜேர்மனியின் ஹிட்லரும் இறந்த பின்பு, சோவியத் யூனியன் யுத்தம் முடிவுக்கு வந்ததாகப் பிரகடனப்படுத்தி அதைக் கொண்டாடியது. அதற்குப் பிறகு அமெரிக்கா ஜப்பானின் ஹிரோசிமா, நாஹசாகி ஆகிய நகரங்கள் மீது அணுகுண்டுகளை வீசியது. இதனால் இலட்சக் கணக்கான மக்கள் இறந்தனர். ஊனமுற்றனர். இன்றும் அந்தப் பிரதேசத்தில் ஊனமுற்ற குழந்தைகள் பிறக்கின்றன. யுத்தம் முடிந்த பின்பு பல கிழக்கு ஐரோப்பிய நாடுகள் சோவியத் இராணுவத்தின் உதவியுடன் சோசலிச ஆட்சிகளை ஏற்படுத்திக் கொண்டன.

1967ஆம் ஆண்டு சோவியத் புரட்சியின் 50ஆவது ஆண்டு கொண்டாட்டம் உலகமெல்லாம் கொண்டாடப்பட்டது. அப்பொழுது கார்ல்மாக்ஸின் சிந்தனையை ஏற்றுக் கொண்ட கீழ்க்கண்ட நாடுகளுக்கு வாழ்த்துத் தெரிவிக்கப்பட்டது.

பல்கேரியா, கியூபா, செக்கோஸ்லாவிக்கியா, கிழக்கு ஜேர்மனி, ஹங்கேரி, வடகொரியா, மங்கோலியா, போலந்து, ருமேனியா, யூகோஸ்லாவியா, சீனா, வியட்நாம், அல்பேனியா ஆகிய 13 நாடுகளே அவை.

இந்தக் கால கட்டத்தில் ஆசிய, ஆபிரிக்க, லத்தீன் அமெரிக்க நாடுகளில் விடுதலைப் போர் உத்வேகம் அடைந்தது. 80இற்கு மேற்பட்ட நாடுகள் விடுதலை பெற்று பாராளுமன்ற ஜனநாயகத்தை ஏற்றுக் கொண்டன. 1955ஆம் ஆண்டு இந்தோனேசிய நகரமான பாண்டும் நகரத்தில் அணிசேரா நாடுகளின் முதலாவது மகாநாடு நடைபெற்றது. இந்தப் பிரகடனத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள் மூன்றாவது உலக நாடுகள் என்று கூறப்படுகின்றன. முதலாவது



ஜி.7 நாடுகளின் அணி

உலகமாக அமெரிக்கா தலைமையில் முதலாளித்துவத்தை ஏற்றுக்கொண்ட ஜனநாயக நாடுகள் உள்ளன. இரண்டாவது அணியாக சோசலிசத்தை ஏற்றுக் கொண்ட நாடுகள், சோவியத் யூனியன் தலைமையில் இயங்கி வந்தன. இக்காலகட்டத்தில்தான் நேட்டோ அமைப்பு உருவாகியது. இதில் ஐக்கிய அமெரிக்கா, ஐக்கிய இராச்சியம், பிரான்ஸ், இத்தாலி, மேற்கு ஜேர்மனி போன்ற நாடுகளே நன்மை பெற்றன. இந்த அமைப்பில் மேலும் பல



2ஆவது உலக மகா யுத்தம்

ஐரோப்பிய நாடுகள் சேர்ந்து கொண்டன. இதைவிட, வார்சோ ஒப்பந்த நாடுகள் ஒன்று சேர்ந்தன. இது ஒரு இராணுவ அமைப்பாகும். சோசலிச நாடுகள் வார்சோ என்ற அமைப்பை ஏற்படுத்திக் கொண்டன. வார்சோ என்பது போலந்து நாட்டின் தலைநகரமாகும்.

1990ஆம் ஆண்டளவில் சோசலிச நாடுகள் வீழ்ச்சியுற்ற பின், வார்சோ என்ற அமைப்பு

நேட்டோ



இல்லாமல் போய்விட்டது. மூன்றாம் உலக நாடுகளுக்கு சோசலிச நாடுகள் பெரும் உதவி புரிந்து வந்தன. பல தொழிற்சாலைகளைக் கட்டிக் கொடுத்தன. முதலாவது உலக நாடுகள், மூன்றாம் உலகநாடுகளில் ஒரு தொழிற்சாலையைத் தன்னும் கட்டிக் கொடுக்கவில்லை. இரண்டாவது உலக மகா யுத்தம் முடிந்த பின் ஐக்கிய நாடுகள் சபை ஆரம்பிக்கப்பட்டது. இனிமேல் உலக நாடுகள் யுத்தம் வராமல் பார்த்துக்கொள்ள வேண்டும் என்ற நோக்கத்திலேயே ஐ.நா.சபை உருவாக்கப்பட்டது. யுத்தத்தால் சீரழிந்த நாடுகளை மீண்டும் கட்டியெழுப்புவதற்கு உதவுவதற்கான ஐ.நா. சபையின் கீழ் உலக வங்கி, சர்வதேச நாணய நிதியம் என்பன ஆரம்பிக்கப்பட்டன. இதற்கு அதிக நிதியை ஜி7 நாடுகள் வழங்கின. உலக வங்கி எடுக்கும் தீர்மானங்களில் முக்கால்வாசி வாக்குகளை ஜி7 நாடுகளே செலுத்துகின்றன. பிரிட்டன், கனடா, பிரான்ஸ், ஜேர்மனி, இத்தாலி, ஜப்பான், அமெரிக்கா ஆகிய இந்த ஏழு நாடுகளுமே ஜி7 நாடுகள் என அழைக்கப்படுகின்றன.

எமது நாடு சுதந்திரம் பெற்ற பின்னர், 1956ஆம் ஆண்டு வரை ஐக்கிய தேசியக் கட்சி அரசாங்கங்களே ஆட்சி செலுத்தின. அந்த இரண்டு அரசாங்கங்களும் முதலாம் உலக நாடுகளுடன் அதிக உறவை வைத்துக் கொண்டன. 1956ஆம் ஆண்டு எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்கா தலைமையில் எம்.ஈ.பி. அரசாங்க அரசாங்கம் ஆட்சியைக் கைப்பற்றியது. இதில் முக்கிய கட்சியாக எஸ்.டபிள்யூ.ஆர்.டி.பண்டாரநாயக்காவின் ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி செயற்பட்டது. இந்த அரசாங்கத்தின் கீழ் பல தனியார் துறைகள் தேசியமயமாக்கப்பட்டன. உரிய அரசாங்கத்துறைத் தொழிற்சாலைகள் மற்றும் கூட்டுத்தாபனங்கள் என்பன ஆரம்பிக்கப்பட்டன. வங்கித் தொழில், காப்புறுதி என்பன தேசியமயமாக்கப்பட்டன. பின்னர் ஏற்பட்ட அரசாங்கங்களில் இடதுசாரிக் கட்சிகளான லங்கா சமசமாஜக் கட்சி, கம்யூனிஸ்ட் கட்சி ஆகியன அங்கம் வகித்தன.

உலக நாடுகளில் எங்கெல்லாம் முதலாளித்துவ கட்சிகள் ஆட்சி புரிகின்றனவோ அங்கெல்லாம் இனக் கலவரங்கள் ஏற்பட்டு வருகின்றன. ஐ.நா. சபை ஆரம்பிக்கப்படுவதற்கு முன்னரேயே இருந்த பல உலக அமைப்புகள் அதில் சேர்த்துக் கொள்ளப்பட்டன. உதாரணமாக ஐ.எல்.ஓ. என அழைக்கப்படும் உலகத் தொழிலாளர் ஸ்தாபனத்தைக் குறிப்பிடலாம். உலகிலேயே முதலாவதாக ஆரம்பிக்கப்பட்ட அமைப்பு "சர்வதேச தொலைத்தொடர்பு சங்கம்" என குறிப்பிடலாம். தொலைபேசி ஆரம்பிக்கப்பட்டபோது, அதன் சர்வதேச செயற்பாட்டைக் கட்டுப்படுத்துவதற்காக இந்த அமைப்பு உருவாக்கப்பட்டது.

சி.குமாரலிங்கம்

# அவுஸ்திரேலியாவுக்கு தப்பிச் செல்ல முயன்று சென்னையில் சிக்கிய 61 ஈழத்தமிழர்களின் கதை



சொந்த நாட்டை, வீட்டை, உறவுகளை இழந்து தமிழகத்துக்கு ஓடிவந்த ஓடிவந்த இலங்கைத் தமிழ் அகதிகளின் வாழ்க்கை எத்தனை மோசமாக இருக்கிறது என்று வெளிச்சம் போட்டுக்காட்டிவிட்டது சமீபத்திய சம்பவம். கடந்த 17-ம் தேதி சென்னையை அடுத்த ஊரப்பாக்கத்தில் மூன்று வான்களில் சென்ற 61 ஈழத் தமிழர்களை வளைத்துப் பிடித்திருக்கிறார்கள் தமிழக கியூ பிராஞ்ச் பொலிஸார்.

இவர்கள் அனைவரும் தமிழத்தில் உள்ள பல்வேறு இலங்கை அகதிகள் முகாமில் தங்கி இருந்தவர்கள். புரோக்கர்கள் கொடுத்த நம்பிக்கையில் திருட்டுத்தனமாக அவுஸ்திரேலியாவுக்குச் செல்ல முயன்ற நேரத்தில்தான் சுற்றிவளைக்கப்பட்டனர். அவர்களை அங்கு கொண்டுபோய்ச் சேர்ப்பதாகக்கூறி பணம் வசூல் செய்த நான்கு புரோக்கர்களையும் கைது செய்துள்ளது பொலிஸ்.

இலங்கையில் இருந்து அகதிகளாக தமிழகம் வந்துசேர்ந்த ஆயிரக் கணக்கானோருக்கும் மண்டபம், ஈரோடு, புதுவை, கரூர், திருச்சி எனப் பல்வேறு இடங்களில் உள்ள முகாம்களில் தங்க வைக்கப்பட்டு உள்ளனர்.

இவர்க ளுக்கு அரசின் நேரடிக் கண்காணிப்பின் கீழ் சில வசதிகள் செய்து தரப்பட்டுள்ளன.

திறந்தவெளி முகாம் எனப்படும் இந்த முகாமில் இருப்பவர்கள் வேலைக்குச் செல்லவும் பிற இடங்களுக்குச் சென்றுவரவும் அனுமதிதரப்பட்டுள்ளது.

இவர்களில் வழக்கு களில் சிக்கியுள்ள சிலர் மட்டும் சிறைக்கு நிகரான கட்டுப்பாடுகள் கொண்ட பூந்தமல்லி மற்றும் செங்கல்பட்டு சிறப்பு முகாம்களில் அடைக்கப்பட்டுள்ளளர்.

இப்போது பொலிஸிடம் சிக்கி இருக்கும் 61 பேரும் பல்வேறு திறந்தவெளி முகாம்களில் தங்கி இருந்தவர்கள்தான். "இவர்கள் முகாம் அதிகாரிகளின் அனுமதி இன்றி கடந்த 17-ம் திகதியன்று முகாம்களில் இருந்து வண்டலூர் உயிரியல் பூங்காவுக்கு சுற்றுலா செல்வது போல் கிளம்பியிருக்கிறார்கள்.

புரோக்கர்களிடம் முன்னரே பேசி வைத்தபடி இரண்டு குழுவாக வேளாங்கண்ணி மற்றும் கன்னியாகுமரி சென்று அங்கிருந்து கடல்வழியாக அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிச் செல்லத் திட்டம் போட்டு இருந்தனர்.

எங்களுக்குத் தகவல் கிடைத்ததன் அடிப்படையில் ஊரப்பாக்கம் அருகே வேன்களில் வந்தவர்களை வழிமறித்துப் பிடித்து, அனைவரையும் எங்கள் கட்டுப்பாட்டுக்கு கொண்டுவந்துவிட்டோம்" என்றனர் பொலிஸார்.

காஞ்சிபுரம் திருமண மண்டபம் ஒன்றில் தங்கவைக்கப்பட்டு இருந்த ஈழத்தமிழர்களைச் சந்தித்தோம். "எங்களைப் போட்டோ பிடிச்சுப் போட்டு என்ன செய்யப் போறீங்க... நாளைக்கு காலையில் எங்களுக்கு சுதந்திரம் கிடைச்சிடுமா?" என்று விரக்தியுடன் பேசமறுத்தனர். பொலிஸில் பிடிபட்ட அவமானத்தில் பலரும் முகத்தைக் காட்ட விரும்பாமல் திருப்பிக் கொண்டனர்.

அவுஸ்திரேலியா கொண்டு சேர்ப்பதாகச் சொல்லி இவர்களிடம் பணம் கறந்த பாமினி என்ற நகுலன், சின்னத்தம்பி, சசிகுமார், வின்செண்ட் என்ற நான்கு ஏஜெண்ட்களையும் கைது செய்திருக்கிறது காவல்துறை.

இவர்களுக்கு மூளை யாகச் செயல்பட்ட காளிதாஸ் என்பவரைத்தேடி வருகிறார்கள்.

விசாரணை செய்த பொலிஸார், ஆவணங்களை சரிபார்த்த பிறகு அகதிகளை மீண்டும் அவர்களது முகாம்களுக்கே திருப்பி அனுப்பியுள்ளனர்.

கைதுசெய்யப்பட்ட நால்வரும் அகதிமுகாம்களைச் சேர்ந்தவங்கதான். பல இடங்களிலும் இருக்கிற அகதிகளிடம் பேசி, பழக்கத்தை ஏற்படுத்திக்கிட்டு அவுஸ்திரேலியாவுக்குத் தப்பிப்போனா நிம்மதியா வாழலாம், மூளைச் சலவை செய்து இருக்காங்க.

அவுஸ்திரேலியாவுக்கு அழைச்சுட்டுப் போறதுக்காக பணம் வசூல் செஞ்சு இருக்காங்க. 17-ம் தேதி தப்பிச் செல்வதற்கு நாளும் குறிச்சி இருக்காங்க. இந்த விவரங்கள் எப்படியோ கசியவே, மேலதிகாரிகள் எங்களை அலெர்ட் செஞ்சாங்க. வண்டலூரில் இருந்து கூடுவாஞ்சேரி போறவழியில் எல்லா வாகனங்களையும் நிதானமாக சோதனை செய்தோம். தப்பிக்க முடியாமல் மாட்டிக்கிட்டாங்க.

நாங்க கைது செய்யாமல் இருந்திருந்தால், நிச்சயமாக இவர்கள் ஏமாந்துதான் போயிருப்பார்கள்.

திருட்டுத் தோணியில் ஏறிப்போய் நடுவழியில் உயிரை விட்டிருப்பார்கள்.

இப்போது, அவுஸ்திரேலி யாவிலும் அதிகமான கட்டுப்பாடு கள் இருப்பதால், ஈழத்தமிழர்கள் தப்பி ஓட முயற்சிப்பது நல்லதல்ல" என்றார் அகதிகளைப் பிடித்த தனிப் படையைச் சேர்ந்த ஒரு பொலிஸ்காரர்.

*நன்றி: ஜூனியர் விகடன்.*

# உடையார்கட்டு தமிழ் கலவன் பாடசாலை மீள இயங்குகிறது

முல்லைத்தீவுகல்விவலயத்திற்குட்பட்ட உடையார்கட்டுஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலை கல்வி அமைச்சின் அனுமதியுடன் இயங்கி வருகிறதுஎன்றுமுல்லைத்தீவுவலயக் கல்விப் பணிப்பாளர் ரி.வரத ராஜமூர்த்திதெரிவித்தார்.

புதுக்குடியிருப்புகல்விக் கோட்டத்திற்குஉட்பட்டஉடையார்கட்டு மகாவித்தியாலயம், ஆயிரம் பாடசாலைகள் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டதையடுத்துஅதன் அருகில் உடையார்கட்டுஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலைதனியாக இயங்கிவருகின்றது. உடையார் கட்டுமகாவித்தியாலயத்தில் ஆரம்ப வகுப்பில் கல்விகற்றுவந்தமாணவர்களே இந்தஅரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

புதுக்குடியிருப்புகல்விக் கோட்டத்திற்குஉட்பட்டபாடசாலைகள் சில ஆயிரம் பாடசாலை வேலைத் திட்டத்தின் கீழ் உள்வாங்கப்பட்டாலும்,பாடசாலைகளில் ஆரம்ப வகுப்புக்கள் தவிர்ந்ததரம் ஆறு தொடக்கம் பதின் மூன்றுவரையானவகுப்புக்களேநடைபெற்றுவருகின்றனஎனவும் அவர் தெரிவித்தார்.

# புராதன பொருட்கள் திருட்டோடு சம்பந்தப்பட்டவர் முக்கிய அரசியல்வாதி

## - சோபித தேரர் குற்றஞ் சாட்டுகிறார்

நூதனசாலையில் இருந்து அரிய வகைப்புராதனப் பொருட்களை திருடிச் சென்றவர் போதவஸ்துப் பாவனையாளர் என பொலிஸார் கூறுவது அப்பட்டமான பொய் என்று ஜாதிக ஹெல உறுமயாவின் தலைவரான சோபித தேரர் கூறினார். சக்தி வாய்ந்த அரசியல்வாதி ஒருவர் இந்தத் திருட்டோடு சம்பந்தப்பட்டிருப்பதால், விசாரணை நடாத்துவதற்கு பொலிஸாருக்கு சுதந்திரம் இல்லை என்றும் அவர் கூறினார்.

பொலிஸார் உண்மையை மறைத்து போதவஸ்து பாவனையாளர் மீது குற்றங்களை சுமத்த முனைகின்றனர். நூதனசாலை உயர் பாதுகாப்பு வலையத்தில் இருப்பதனால் போதைவஸ்துப் பாவனையாளர், ஒருவரால் அதற்குள் சென்று பொருட்களைக் களவாட முடியாது என்றும் அவர் சொன்னார். தற்போது இலங்கைக்கு கொண்டு வரப்பட்டிருக்கும் புத்தபகவானின் புனித சின்னங்கள் நூதனசாலையில் வைக்கப்பட்டிருந்தால் அதுவும் களவாடப்பட்டிருக்கும் என்றும் அவர் சொன்னார் பொலிஸாருக்கு சுதந்திரமாக விசாரணை நடாத்த அனுமதியளிக்கப்பட்டிருந்தால் அவர்கள் குற்றவாளியை இலகுவில் கண்டு பிடித்து விட்டிருப்பார்கள்.

முன்னாள் அமைச்சர் லலித் அதுவாத் முதலியை கொன்றவர் என்று இனம் தெரியாத ஒரு சடலத்தை பொலிஸார் நீதி மன்றத்தில் காட்டியதைப் போன்றுதான். இந்த நூதன சாலைத் திருட்டையும் போதவஸ்துப் பாவனையாளர் ஒருவர் செய்தார் என்று கூறுகின்றனர். இப்படிச் சொல்வதனால் லலித் அத்துலத் முதலியின் வழக்கு விசாரணையை விரைவில் முடித்துவிட்டதை போன்று இந்த திருட்டு விசாரணையையும் போதவஸ்து பாவனையாளர் மீது குற்றம் சாட்டி விரைவில் முடித்துவிடப் பார்கின்றனர் என்றும் சோபித தோரர் கூறினார்.

# நூதனசாலைத் திருட்டு 3 பேர் கைது

கொழும்பு நூதன சாலையிலிருந்து விலையுயர்ந்த புராதனப் பொருள்கள் திருடப்பட்டமை சம்பந்தமாக மூன்றுபேர் பிரியந்தலை பொலிஸாரினால் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து இரு பெண்கள் கைது செய்யப்பட்டனர். களவாடப்பட்ட பொருட்களின் பாகங்களை கடலுக்குள் வீசுவதற்காக சந்தேக நபரான ஒரு பெண் சென்றுகொண்டிருந்த போது அவர் கைது செய்யப்பட்டார். களவாடப்பட்ட பொருட்களை வைத்திருந்தார்கள் என்ற குற்றச்சாட்டின் பேரில் ஒரு ஆணும் மற்றொரு பெண்ணும் கைது செய்யப்பட்டனர். இன்னமும் பிடிபடாமல் இருக்கும் முக்கிய சந்தேக நபர் ஒரு போதவஸ்து பாவணையாளர் என்று பொலிஸார் தெரிவித்தனர். பிடிபட்டவர்கள் திருட்டுக்கு உதவியவர்கள் மட்டுமே என்றும் பொலிஸார் கூறினர்.

# "தமிழீழம்" வார்த்தைக்கு தடை விதிக்கும் திட்டமில்லை

## - பிரதித் தேர்தல் ஆணையாளர்

தமிழ் ஈழம் என்ற சொல்லைக் கொண்டுள்ள அரசியல் கட்சிகளைத் தடைசெய்வது குறித்து தேர்தல் திணைக்களம் எந்தவொரு முடிவையும் எடுக்கவில்லை என்று பிரதித் தேர்தல் ஆணையாளர் (நிர்வாகம்) எம்.எம்.மொஹமட் தெரிவித்தார்.

பிரிவினையைத் தூண்டும் வகையில் தமிழ் ஈழம் என்ற பதமுடைய அரசியல் கட்சிகளைத் தடை செய்வது குறித்து தேர்தல் ஆணையாளர் ஆராய்ந்து வருகின்றார் என்று வெளியாகியிருந்த செய்திகள் தொடர்பாகவே பிரதித் தேர்தல் ஆணையாளர் எம்.எம். மொஹமட் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

"தேர்தல் திணைக்களம் இன்னும் அவ்வாறானதொரு முடிவை எடுக்கவில்லை. ஆணையாளரும் அதுகுறித்து பரிசீலிக்கவில்லை" என்றும் அவர் கூறினார். அதே வேளை, தமிழ் ஈழம் என்ற பதத்தைக் கொண்ட அரசியல் கட்சியைத் தடைசெய்வது குறித்தோ அல்லது பரிசீலனை செய்வது குறித்தோ தேர்தல் திணைக்களம் தமக்கு இன்னும் எந்தவொரு அறிவிப்பையும் விடுக்கவில்லை என்று தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) தெரிவித்துள்ளது.

இதேவேளை, அவ்வாறு கட்சி தடைசெய்யப்படுமானால் அதற்கு எதிர்ப்பைத் தெரிவித்து அனைத்து வித நடவடிக்கைகளும் முன்னெடுக்கப்படும் என்றும் அந்தக் கட்சி தெரிவித்துள்ளது. தற்போது தேர்தல் திணைக்களத்தில் பதிவு செய்யப்பட்டுள்ள அரசியல் கட்சிகளுள் தமிழ் ஈழ விடுதலை இயக்கம் (ரெலோ) மட்டும்தான் தமிழ் ஈழம் என்ற சொல்லைக் கொண்டுள்ளமை குறிப்பிடத்தக்கதாகும்.

# பாதிக்கப்பட்ட மாணவர்கள் போராட்ட எழுச்சி வித்துகளாகலாம்

## எச்சரிக்கிறார் சுமந்திரன் எம்.பி.

பிரபாகரன் தமிழீழப் போராட்டத்தை ஆரம்பிப்பதற்கு முன்னதாகவே 1970களின் ஆரம்பத்தில் தமிழ் இளைஞர்களின் எழுச்சி லண்டனில்தான் ஆரம்பமானது. என்று தமிழ் தேசியக் கூட்டமைப்பின் தேசியப் பட்டியல் எம்.பி. எம்.ஏ. சுமந்திரன் கூறினார்.

கொழும்பில் நடைபெற்ற செய்தியாளர் மாநாட்டிலேயே சுமந்திரன் எம்.பி. மேற்கண்டவாறு கூறினார்.

நாட்டின் கல்வித்துறை யில் நிலவும் குளறுபடிகளுக்கு விரைவில் தீர்வுகாணத் தவறினால் அது மற்றொரு ஆயுதக் கிளர்ச்சிக்கு வழிவகுக்கும் என்றும் அவர் சொன்னார். அவர் மேலும் கூறியதாவது:-

1970களில் மொழிவாரித் தரப்படுத்தல் கொள்கையால் பாதிக்கப்பட்ட தமிழ் மாணவர்கள் தமது பெற்றோர்களிடமிருந்த சொத்துகளை விற்றுவிட்டு மேற்படிப்புக்காக பிரிட்டனுக்குச் சென்றார்கள். தங்கள் தாய் நாட்டில் பாதிக்கப்பட்ட தமிழ் இளைஞர்கள், விரக்தியுற்ற நிலையிலேயே பிரிட்டனுக்குச் சென்றார்கள்.

கடந்த பல தசாப்தங்களாக இழுபட்டுச் செல்லும் இனப்பிரச்சினைக்கு இதுவே முக்கிய காரணமாகும். ஈ.பி.ஆர்.எல்.எப் தலைவர் சுரேஷ் பிரேமச்சந்திரன் இதற்கு நல்ல உதாரணமாவார். இவர் லண்டனில் தனது படிப்பைக் கைவிட்டுவிட்டு ஆயுதப் பயிற்சி பெற பாலஸ்தீனத்துக்குச் சென்றார் இவரைப் போன்ற எண்ணம் கொண்ட பல இளைஞர்கள் ஈரோஸ் என்ற ஈழ மாணவர் புரட்சிகர அமைப்பில் இணைந்து கொண்டார்கள்.


அடுத்த வரவு செலவுத் திட்டத்துக்கு முன்னர் கூடிய கல்வி வாய்ப்புக்களை ஏற்படுத்துவதற்காக போதியளவு நிதி ஒதுக்கப்படவில்லையென்றால் நாடு தழுவிய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள் இடம்பெறும். இசற் புள்ளிப் பிரச்சினையோடு வேறு பல நெருக்கடிகளுக்கும் இடமளிக்கப்பட்டுள்ளது. இவற்றுக்குத் தீர்வு காண்பதற்கு நிவாரண நடவடிக்கைகள் எடுக்கப்படவில்லையென்றால் ஆயுதப்போராட்ட வரலாறு மீண்டும் ஏற்படும் என்றும் அவர் சொன்னார்.

# அபிவிருத்தியில் பங்கம் விளைவிக்கும் புவி வெப்பமடைதல்

புவி வெப்பமாதல் என்பது வெறும் சுற்றுச்சூழல் சார்ந்த பிரச்னை மட்டுமல்ல வளரும் நாடுகளின் எதிர்காலத்துடனும் பல லட்சம் கோடி ரூபாய்களுடனும் பின்னிப் பிணைந்திருக்கும் பிரச்னை.
புவியின் சராசரி வெப்பத்தின் அளவு அதிகரித்துவருகிறது. வளி மண்டலத்திலுள்ள கரியமில வாயு உள்ளிட்ட பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தி அதிகரிப்பதுதான் இதற்கான முக்கிய காரணம் என்பதே புவி வெப்பமாதல் கருதுகோளின் அடிப்படை.
ஆகையால், பசுமை இல்ல வாயுக்களின் அடர்த்தியை - குறிப்பாக, கரியமில வாயுவின் அடர்த்தியைக் குறைப்பதற்கான இலக்குகளை நிர்ணயிப்பதே இப்பிரச்னைக்கான முடிவாகக் கருதப்படுகிறது.
கரியமில வாயு அதிகரிப்புக்கு மிக முக்கியமான பெட்ரோலியப் பொருள்கள் பயன்பாட்டை வெகுவாகக் குறைப்பதும் அதிக மாசற்ற செம்மையான இயந்திரவியல் கொள்கைக்கு மாறுவதும் புவி வெப்பத்தைத் தணிக்க முக்கியத் தீர்வுகளாக முன்வைக்கப்படுகின்றன.
செம்மையான இயந்திரவியல் என்பதை விரிவான பொருளில் சொல்வதென்றால், இப்போதுள்ள பழைய தொழில்நுட்பத்தை அப்படியே கடாசிவிடுவது என்பதேயாகும். விறகு அடுப்புக்குப் பதில் சூரிய சக்தி அடுப்பு என்பதில் தொடங்கி ஹைட்ரஜனில் இயங்கும் மொபெட்டுகள், ஹைபிரிட் கார்கள் வரை எல்லாமே புதியவையாகும். கார்பன் கிரெடிட்ஸ்வர்த்தகத்துக்கு வழிவகுக்கும் (ஏற்கெனவே, தூய்மையான முன்னேற்றத் தொழில்நுட்பத் திட்டங்களில் (சிடிஎம்) 32 சதத் திட்டங்களில் இந்தியா பங்கேற்றுள்ளது). 'இன்றைய தேதியில் உலகிலுள்ள பெரும் தொழிற்சாலைகளை மட்டும் செம்மையான இயந்திரவியலின் கீழ் கொண்டுவர மட்டுமே ரூ. 16 லட்சம் கோடி தேவைப்படும் என்று மதிப்பிடப்படுகிறது. அதாவது, 2030-ல் உலக மாசு அளவை 2007 அளவுக்குக் கொண்டுவர ரூ. 20 லட்சம் கோடி தேவைப்படும் என்று மதிப்பிடுகிறார்கள்.
இங்கு கவனிக்க வேண்டிய முக்கியமான விஷயம்- இத்தகைய தொழில்நுட்பத்தை உருவாக்குபவர்களாக வளர்ந்த நாடுகளே இருக்கிறார்கள் என்பதாகும். அதாவது மாசற்ற உலகுக்கான இந்தத் தொழில்நுட்பம் அவர்களுக்கு லட்சக்கணக்கான கோடிகளை ஈட்டித் தரும்.
இந்தியாவின் கரியமில வெளியீட்டில் சரி பாதி அளவு இந்தியத் தொழிற்சாலைகளால் வெளியிடப்படுவதாக வளர்ந்த நாடுகள் குற்றஞ்சாட்டும் நிலையில், செம்மையான இயந்திரவியலுக்கு மாற இந்தியத் தொழில்துறை எத்தனை லட்சம் கோடிகளைச் செலவிட வேண்டியிருக்கும் என்பதும் சர்வதேசத் தொழிற்போட்டியில் இந்தியாவுக்கு இந்தச் செலவு என்று ஆய்வுகள் தெரிவிக்கின்றன.
ஆனால், மாசின் உச்சத்திலிருக்கும் அமெரிக்கா இன்னமும் கரியமில வாயு வெளியீட்டைக் குறைக்க சர்வதேச ஒப்பந்தங்கள் எதிலும் கையொப்பமிடாத நிலையில், இந்தியாவையும் சீனாவையும் நிர்பந்தித்துக் கொண்டிருக்கிறது. ஏனைய வளர்ந்த நாடுகளும் அமெரிக்காவுக்கு ஒத்தூதுகின்றன.
புவி வெப்பமாதல்பற்றி முதல் பேச்சு எழுந்த காலத்திலிருந்தே இந்தக் கருதுகோளே தவறு என்ற பேச்சும் வலுவாகத் தொடர்கிறது. புவி வெப்பமாதலும் குளிர்தலும் தொடர்ந்து சங்கிலித் தொடராக நிகழ்ந்துகொண்டிருப்பவை இயற்கைச் சீர்கேடுகளுக்கும் இந்தக் கருதுகோளுக்கும் தொடர்பில்லை என்று ரீய விஞ்ஞானிகள் தொடர்ந்து கூறி வருகின்றனர். புவி வெப்பமாதல் மிகப் பெரிய விஞ்ஞான தில்லுமுல்லு என்கிறார் ரஷிய விஞ்ஞானி ஆந்த்ரே காப்டிசா. இது தொடர்பாக அண்டார்டிகாவில் மேற்கொள்ளப்பட்ட ஆய்வின் முடிவை வெளியிட்டுள்ள அவர், 1970-களில் பெரிதாக இப்படிக் கிளப்பிவிடப்பட்ட புவி குளிர்மயமாதல் இப்போது புஸ்வாணமாகிவிட்டதையும் சுட்டிக்காட்டுகிறார். வளரும் நாடுகளைப் பின்னுக்குத்

**புவி வெப்பமாதல் எப்படி ஏற்படுகிறது? வீடு, அலுவலகங்கள், கார், பஸ்களில் பயன்படுத்துகிற ஏ.சி., ஃபிரிட்ஜ் சாதனங்களில் இருந்து வெளிவரும் குளோரோ புளூரோ கார்பன் என்னும் வாயுதான் இந்தப் புவி வெப்பமாதலுக்கு முக்கியக் காரணம் என்கிறார்கள். பூமியைப் பாதுகாக்கும் படலத்துடன், இந்த வாயு வினைபுரிந்து அதை ஓட்டை விழச் செய்கிறது. அதனால், கட்டுக்கடங்காத வெப்பம் பூமியைத் தாக்குகிறது.**

எத்தகைய பின்னடைவுகளை உருவாக்கும் என்பதையும் விவரிக்க வேண்டியதில்லை. உண்மையில், கரியமில வாயு வெளியீட்டைக் குறைக்க முதலில் தலைப்பட வேண்டிய நாடு அமெரிக்காதான். தனி நபர் கரியமில வாயு உமிழ்வு அமெரிக்காவில் 19.70 மெட்ரிக் டன்களாக இருக்கிறது. இந்த உமிழ்வு ரீயாவில் 11 மெட்ரிக் டன்களாகவும், ஐரோப்பிய ஒன்றியத்தில் 9.17 மெட்ரிக் டன்களாகவும், இந்தியாவில் 1.31 மெட்ரிக் டன்களாகவும் இருக்கிறது. மேலும், 2030-ல்கூட இந்தியாவில் தனிநபர் ஆண்டு கரியமில வாயு உமிழ்வு உலக சராசரியான 4.22 டன்னை தாண்ட வாய்ப்பில்லை





தள்ளும் ஓர் உத்தியே புவி வெப்பமாதல் கருதுகோள் என்று ரீய விஞ்ஞானிகள் தீவிரமாகக் குற்றஞ்சாட்டுகின்றனர். இது ஒருபுறமிருக்க, மாசடைந்துவரும் சூழல் - அருகிவரும் இயற்கை வளங்கள் - மாறிவரும் தட்பவெப்பம் ஆகியவை புவிச் சூழலில் மிகப் பாதகமான அம்சங்களே. ஆனால், பூமி ஓர் உயிருள்ள செல். தன்னைத்தானே தகவமைப்புக்கேற்ப மாற்றிக்கொள்ளும் தன்மை புவிக்கு இருக்கிறது என்ற கருதுகோளும் காலங்காலமாக விஞ்ஞானிகளிடையே இருந்து வருகிறது. புவி வெப்பமாதலின் நம்பகத்தன்மையே கேள்விக்குறியாக இருக்கும்போது அதன் பெயரால் முன்வைக்கப்படும் தீர்வுகள் எந்த அளவுக்கு நம்பகமானவை? புவி வெப்பமாதலுக்கு முன்வைக்கப்படும் தீர்வுகளை, நிர்பந்தங்களை ஏற்றுக்கொண்டால், அதனால் கடுமையான விளைவுகளைச் சந்திக்க வேண்டிய நாடாக இந்தியாவே இருக்கும். தொழில்துறை சார்ந்து மட்டுமல்ல் இன்னமும் மின்சாரத்தைப் பார்க்காத கோடிக்கணக்கான இந்தியக் கிராமவாசிகளையும்கூட அது பாதிக்கும். அனல் மின்சாரத்துக்கு மாற்றாக அவர்களுடைய உள்நோக்கம் அணு மின்சாரத்தை விற்பதாகவே இருக்கிறது. பெட்ரோலியப் பொருள்களுக்கு மாற்றாக உயிரி எரிபொருளையே முன்வைக்கிறார்கள். இதனால், ஏற்படும் உணவுப் பொருள் தட்டுப்பாட்டுக்கு மாற்றாக மரபீனி மாற்றுப் பயிர்களை முன்வைக்கிறார்கள். உண்மையில் இவையெல்லாம் இப்போதுள்ள சூழலியல் அபாயங்களைவிடவும் பேரபாயங்களையே தோற்றுவிக்கும். கட்டாய மழைநீர் சேகரிப்பு, கிராமங்கள்தோறும் பாசனக் குட்டைகள் அமைத்தல், கட்டாய மர வளர்ப்பு, வனப்பரப்பை அதிகரித்தல், திட, திரவக் கழிவு மேலாண்மை, பிளாஸ்டிக் பொருள்களுக்குக் கட்டுப்பாடு, சூழலுடன் இயைந்த தொழில் வளர்ச்சித் திட்டம், நதிகள், கடல், காற்று மாசுக்களைத் தடுத்தல்... இப்படிச் சுற்றுச்சூழலை மேம்படுத்த இந்தியா மேற்கொள்ள வேண்டிய காரியங்கள் ஏராளம். இவற்றையெல்லாம் தீவிரமாக அரசு செயல்படுத்தலாம். ஆனால், வளர்ந்த நாடுகளின் நிர்பந்தத்துக்கு அடிபணிந்து அவற்றின் நிலைப்பாட்டுக்கு ஒத்[illegible]சத்தால், இந்தியாவின் வளர்ச்சிக்கும் அடிப்படைக் கட்டமைப்புக்கும் அது பெரும் ஆபத்தையே விளைவிக்கும். இன்னொரு வரலாற்றுத் தவறுக்கு வழிவகுக்கும்!

**காடுகள் அழிப்பு :**

தொழிற்சாலைகளிலும், உற்பத்தி நிலையங்களிலும், வீடுகளிலும் பலவகையான எரிபொருட்கள் நாள்தோறும் எரிக்கப்படுகின்றன. தொழிற்சாலைகளில் நாள்தோறும் டன் கணக்கில் நிலக்கரி எரிக்கப்பட்டு வெப்பமும், புகையும் காற்றில் கலக்கிறது. காற்றில் இருக்கும் ஆக்சிஜனை உயிர்வாழும் அத்தனை ஜீவராசிகளும் சுவாசித்து தீர்த்து விடுகின்றன. மரங்கள் மட்டும் தான் காற்றில் கலந்த கார்பன்டை ஆக்சைடு வாயுவை கிரகித்துக்கொண்டு, சுவாசிப்பதன் மூலமாக ஆக்சிஜனை வெளியேற்றுகின்றன. இவைகள் காற்று மண்டலத்தில் இருந்து உறிஞ்சிக் கொள்ளும் கரியமிலவாயு உணவு தயாரிப்பில் உபயோகப்படுகிறது இதனால் சுற்றுப்புறக் காற்றின் வெப்பநிலை வெகுவாகக் குறைந்து விடுகிறது.

ஆனால் ஒரு நாளில் தொழிற்சாலைகளும், மனிதர்களும், விலங்குகளும் வெளிவிடும் கார்பன்டைஆக்சைடு முழுவதையும் உறிஞ்சிக் கொள்ளும் அளவிற்கு உலகத்தில் மரங்களின் எண்ணிக்கை இல்லை. நாம் தான் நமது சுயத்தேவைகளுக்காக, லாப நோக்கத்திற்காக, அறியாமையின் காரணமாக கண்ணில் பட்ட மரங்களை எல்லாம் வெட்டி சாய்த்து வருகின்றோமே . இவ்வாறு அதிகப்பரப்பில் இருந்த காடுகள் சென்ற நூற்றாண்டின் இறுதிக்குள் பாதிக்கு மேல் அழிந்து விட்டன.

மரம் என்றால் உயிர், இன்னும் சொல்லப்போனால் அதுவே நமக்கும் விலங்கு பறவைகளுக்கும் வாழ்வாதாரம். சிலபேர் நினைக்கிறார்கள் , காடு இருப்பதால் யாருக்கு என்ன லாபம்? மரங்களை வெட்டி விற்றால் நிறைய பணம் சம்பாதிக்கலாம். காடுகளை அழித்து குடியிருப்புக்களைக் கட்டினால் கோடிக்கணக்கில் சம்பாதிக்கலாம். இந்த எண்ணம் தவறானது , இது போன்ற தவறான எண்ணத்தினால் தான் இதுவரையில் உலகத்தில் உள்ள காடுகளில் பாதிக்குமேல் அழிந்து விட்டது.

காடுகள் சோலைவனங்கள் இந்த சோலைவனங்கள் அழியுமானால் நாம் பாலைவனத்தில் தான் வசிக்க வேண்டும்.

ஒரு காடு அழியும் போது வெறும் மரங்கள் மட்டும் அழிவதில்லை, அங்கிருக்கும் அத்தனை தாவரங்கள், மூலிகைகள், பறவைகள், விலங்குகள், பூச்சிகள், புழுக்கள், எண்ணற்ற நுண்ணுயிர்கள் ஆகியவை எல்லாமே ஒட்டுமொத்தமாக அழிந்து விடுகின்றன. இதனால் ஏற்படும் நஷ்ம் சொல்லிமாளாது.

சிலர் காடுகளை அழித்து மரம் செடிகொடிகளை விற்று பணம் சம்பாதிக்கிறார்கள்,

இன்னும் சிலர் காட்டு விலங்குகளை வேட்டையாடி அவற்றின் கொம்பு, தந்தங்கள், தோல் ஆகியவற்றை விற்று பெரும் பணம் சம்பாதிக்கிறார்கள். மிருகங்களும், பறவைகளும் அழிவதைப்பற்றி அவர்கள் கவலைப்படுவதே இல்லை. காடு அழிவதால் சுற்றுச்சூழல் அழிகிறது, பருவநிலையில் விரும்பத்தகாத மாற்றங்கள் ஏற்படுகின்றன.

**காடுகளை அழிப்பதால் ஏற்படும் விளைவுகள்:**

மண் அரிப்பு - தற்பொழுது காடுகளின் அழிவின் காரணமாக மண்அரிப்பு தவிர்க்க இயலாத பிரச்சினையாக மாறிவருகிறது. மண் அரிப்பு ஏற்படுவதால் விவசாயம் பெரிதும் பாதிப்பு அடையும். வருடந்தோறும் சுமார் 40 ஆயிரம் ஹெக்டேர் நிலங்கள் மண்அரிமானத்தின் காரணமாக எதுவும் விளையாத வறட்டு நிலமாக மாறிவருகிறது.

பாலைவனங்கள் உருவாதல் - காடுகளின் அழிப்பினால் நிலத்தில் எந்த உயிரினமும், நுண்ணுயிர்களும் வாழ முடிவதில்லை. மண்ணின் உயிரியல் வளம் அழிவதால் அந்த நிலம் எதற்கும் பயன்படாமலும், எதுவும் விளையாமலும் பாலைவனமாக மாறுகிறது.

மழைபொழிவு பாதிப்பு - மரங்களின் அழிவால் காற்று மண்டலத்தில் கார்பன்டை ஆக்சைடின் அளவு அதிகமாகிவிடுகிறது இதனால் மழை குறைந்து வறட்சி ஏற்படுகிறது.

குறைந்து வரும் மரத்தின் அளவு - தொழில்களுக்குத் தேவைப்படும் மரத்தின் எண்ணிக்கை ஆண்டுதோறும் குறைந்து கொண்டே வருகிறது. இதனால் வீட்டு உபயோகப் பொருட்களான நாற்காலி, மேசை, கட்டில், பீரோ போன்றவை செய்யும் தொழில்கள் நலிந்து விட்டன.

வறட்சி - மழை பொழியும் பகுதிகளில் உள்ள காடுகள் அழிக்கப்படுவதால் ஓடைகள் வறண்டு விடுகின்றன. ஆறுகளில் வறட்சிக் காலங்களில் மிகக்குறைந்த அளவே தண்ணீர் இருக்கிறது. இந்தக் காரணங்களினால் வறட்சிக்கு வழி ஏற்பட்டு விடுகிறது.

வண்டல் - மலைகளில் இருந்து அரித்துக்கொண்டு வரப்படும் மண் நீர்த்தேக்கங்களிலும், ஆற்றுப்படுகைகளிலும் குவிக்கப்படுகிறது. மலையில் இருந்து வரும் மழைநீரைத் தடுப்பதற்கு காடுகள் இல்லாத காரணத்தினால் இந்த அவலநிலை ஏற்படுகிறது. ஆகவே வண்டல் மண் தேவையில்லா இடங்களில் சேமிக்கப்பட்டு வீணாகிறது. அதுமட்டும் இல்லாமல் மின்சக்தியின் தயாரிப்பும் குறைகிறது.

மண்ணின் தன்மையை அழிக்கிறது - காடுகள் மண்ணின் தன்மை கெடாமல் பாதுகாத்து வருகின்றன. காடுகளும் மரங்களும் மலைப்பகுதிகளில் அமைந்துள்ள மண்ணின் தன்மையை மண்அரிமானம் ஏற்படாமல் காப்பதன் மூலமாக பாதுகாத்து வருகின்றன. காடுகளை அழிப்பதால் மண்அரிமானம் ஏற்படுகிறது இதனால் மண் அதன் தன்மையை இழந்தும் விடுகிறது.

பல்லுயிரின மாறுபாட்டின் இழப்பு- ஒரு தாவரம் அழிக்கப்பட்டால் அதை நம்பி வாழும், அண்டி வாழும் நாலுவகை உயிரினங்களின் அழிவுக்கு காரணமாக அமைந்து விடும்.

சீனக் காடுகளில் மூங்கில் குருத்துக்களை மட்டுமே சாப்பிட்டு வாழும் பாண்டா கரடிகள் தற்போது அரிதாகிவிட்டன இதன் காரணம் என்ன ? மூங்கில் காடுகள் அழிக்கப்பட்டு விட்டது தான்.

வேலையில்லாத் திண்டாட்டம் - காடுகளின் அழிப்பினால் காடுகளை நம்பிவாழும் மக்களின் வாழ்வாதாரம் அழிக்கப்படுகிறது.

இதனால் இவர்களும் வேலைதேடி நகரத்திற்கு வருகின்றனர். இது வேலையில்லாத் திண்டாட்டத்தை மேலும் அதிகரிக்கிறது.

இந்த உயிர்க்கோளமான பூமிக்குத் தேவையான பிராணவாயுவை உற்பத்தி செய்வது உலகின் 13 நடுகளில் உள்ள காடுகள் தான். அவற்றில்

இந்தியாவும் ஒன்று. மேற்குத் தொடர்ச்சி மலை, கிழக்குத்தொடர்ச்சிமலை, மற்றும் இமயமலைக்காடுகள் ஆகியவை உலகின் உயிர்க்காற்றை உற்பத்தி செய்வதல் பெரும்பங்கு வகிக்கின்றன. இந்தக் காடுகளை காப்பாற்றுவதன் மூலமாகத்தான் நாம் வெப்பத்தைக் குறைத்து, வெப்ப உயர்வினால் ஏற்படும் பாதிப்புக்களில் இருந்து உயிர்களையும், பயிர்களையும் காப்பாற்ற முடியும்.

இன்று சமூக ஆர்வலர்கள் ஆரம்பித்து எல்லோர் வாயும் முணுமுணுக்கும் வார்த்தை சுற்றுப்புறச் சீர்கேடு. அதிலும் குறிப்பாக குளோபல் வார்மிங் என்ற வார்த்தைளைச்சொல்லாதவர்களே இருக்க முடியாது. குளோபல் வோர்மிங் என்றால், பூமியைக் கட்டுக்கடங்காத வெப்பம் சூழ்ந்திருக்கிறது என்று சொல்லலாம். சுருக்கமாக புவி வெப்பமாதல்.

குளோபல் வார்மிங் பிரச்னையால் பசுமைக் குடில் வாயு அதிகளவில் வெளியேறுவதால் ஓசோன் படலம் ஓட்டை விழுந்து புற ஊதாக்கதிர்களும் அகச்சிவப்பு கதிர்களும் நேரடியாக பூமியைத் தாக்கும். இதனால், மனிதர்களுக்கு தோல் புற்றுநோய்கள் ஆரம்பித்து, வித்தியாசமான உயிர்க்கொல்லி நோய்கள் எல்லாம் ஏற்படும் என்பது விஞ்ஞானிகளின் எச்சரிக்கைகள்.புவி வெப்பமாதல் எப்படி ஏற்படுகிறது? வீடு, அலுவலகங்கள், கார், பஸ்களில் பயன்படுத்துகிற ஏ.சி., பிரிட்ஜ் சாதனங்களில் இருந்து வெளிவரும் குளோரோ புளூரோ கார்பன் என்னும் வாயுதான் இந்தப் புவி வெப்பமாதலுக்கு முக்கியக் காரணம் என்கிறார்கள்.

பூமியைப் பாதுகாக்கும் படலத்துடன், இந்த வாயு வினைபுரிந்து அதை ஓட்டை விழச் செய்கிறது. அதனால், கட்டுக்கடங்காத வெப்பம் பூமியைத் தாக்குகிறது. இந்த வெப்பத்தின் அளவு எதிர் காலத்தில் இன்னும் அதிகரிக்கும். அப்படி அதிகரித்தால், துருவத்தில் உள்ள பனி மலைகள் உருகும். கடல் நீர்மட்டம் உயரும். இதனால், பல்வேறு கண்டங்கள் அழிந்து போகும். கடந்த சில ஆண்டுகளுக்கு முன் உருவான சுனாமி கூட புவி வெப்ப மாதலால்தான் என்று எச்சரிக்கிறார்கள் விஞ்ஞானிகள்.

உலக நாடுகள், மக்கள்தொகை பெருக்கத்துக்கு ஏற்றவாறு மின்சாரத்தை வழங்குவதற்காக, அணு உலைகளை அமைத்து வருகின்றன. இதிலிருந்து வெளியேறும் கார்பன் துகள்கள், பெட்ரோல் பயன்படுத்தும் வாகனங்கள், எந்திரங்களில் இருந்து வெளியேறும் கார்பன் துகள்களால்தான் புவிவெப்பமாகிறது என்றும் ஆராய்ச்சியாளர்கள் சொல்கிறார்கள் ■

பிணையங்கள் பரிவர்த்தனை விவகாரம்:

# திலக் கருணாரட்ணவை விசாரணைக்கு அழைக்கும் பிரேரணைக்கு அனுமதி

கொழும்பு பங்குச் சந்தையில் உத்தியோகபூர்வ இரகசியங்களைப் பயன்படுத்தி இலாபம் சம்பாதிப்பது பற்றிய விவரங்களைப் பெறுவதற்காக அரசாங்க முயற்சியாண்மைகளுக்கான நாடாளுமன்றக் குழுவில் (கோப்) சாட்சியமளிக்க முன்னாள் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவர் திலக் கருணாரட்னவை அழைக்கும் பிரேரணை ஒன்றை நாடாளுமன்றத்துக்கு கொண்டுவருவதற்கு ஐக்கிய தேசியக் கட்சிக்கு சபாநாயகர் நேற்று முன்தினம் அனுமதி யளித்தார்.

சில பகுதியினரின் அழுத்தங்களால் பிணையங்கள் பரிவர்த்தனை ஆணைக்குழுவின் தலைவராக செயற்படுவது கடினமாகவுள்ளது எனக் கூறி கருணாரத்ன தனது பதவியை வெள்ளிக்கிழமை இராஜினாமாச் செய்தார்.

சந்தேகத்துக்கு உரிய பல பங்குச்சந்தை நடவடிக்கைகளை கோப் ஆராய்ந்துகொண்டிருந்த வேளையில் கருணாரத்ன இராஜினமாச் செய்ததாக ஐ.தே.க. முக்கியஸ்தரான ரவி கருணாநாயக்க கூறினார். நாடாளுமன்ற நிலையியல் கட்டளைகள் அரசாங்க நிறுவனங்களின் முன்னாள் தலைவர்களை அழைக்க அனுமதிப் பதில்லை.

கருணாரத்ன சில சர்ச்சைக்கு உரிய நடவடிக்கைகளை வெளிக்கொணர தயாராக இருந்தார். எனவே கோப் இவரை அழைப்பதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் என கருணாநாயக்க கூறினார்.

இதற்கு பதிலளித்த சபாநாயகர் சமல் ராஜபக்ஷ இந்த பிரேரணையை நீங்கள் கொண்டு வரலாம். ஆனால் இது அதற்கான நேரம் அல்ல. தயவு செய்து பொருத்தமான நேரத்தில் இதனைக் கொண்டுவாருங்கள்" என்றார்.

பிரதான எதிர்க்கட்சிக் கொறடாவான ஜோன் அமரதுங்க, ஊழியர் சேமலாப நிதியம், கலதாரி ஹோட்டல், லா.்.ப் காஸ் இலங்கைக் கிறைன் எலிவேற்றஸ் ஆகியவற்றின் பங்குகளை வாங்கியது பற்றி நான்காவது முறையாக கேள்வி எழுப்பினார்.

இதற்கு பதிலளிக்க இன்னும் கால அவகாசம் தேவை என அரசாங்கம் கூறியது.

இதில் ஒரு சட்டப் பிரச்சினை உள்ளது. இதை தீர்த்தவுடன் இந்தக் கேள்விக்கு பதிலளிக்கப்படும் என பிரதான அரசாங்க கொறடாவான தினேஷ் குணவர்தன கூறினார்.

இந்த தாமதம் பற்றி தனது விசனத்தை வெளிக்காட்டிய ரவி கருணாநாயக்க ஊழியர் சேமலாப நிதியின் முதலீடுகள் பற்றிய கேள்விகள் எல்லாமே பதிலளிக் கப்படாமல் உள்ளன என்றார்.



வேலணை பிரதேச சபை எல்லைக்குட்பட்ட சரவணை, புன்னம்பிட்டி இந்து மயானத்தில் வேலணை பிரதேசசபை உறுப்பினர்கள் மற்றும் மக்கள் சிரமதானத்தில் ஈடுபட்டனர். (படம்: தெல்லிப்பழை)

## இன்று திருமஞ்ச திருவிழா

தெல்லிப்பழை ஸ்ரீ துர்க்காதேவி தேவஸ்தான மகோற்சவத்தின் 8ஆம் நாளாகிய இன்று (வியாழக்கிழமை) திருமஞ்சத் திருவிழா நடைபெறுகிறது.

மாலை 5.30 மணிக்கு நிகழும் வசந்த மண்டபப் பூசையைத் தொடர்ந்து துர்க்கை அம்பாள் திருமஞ்சத்தில் ஆரோகணித்து வீதியுலாவரும் நிகழ்வு இடம் பெறும். (க)

# சர்வதேச இந்துமத குருபீடத்தின் ஆன்மீகப் பெருவிழா

(மருதனார்மடம்)

சர்வதேச இந்துமத குருபீடம் நடாத்தும் 15ஆவது ஆண்டு ஆன்மீகப் பெருவிழா இம்மாதம் 24, 25, 26 ஆகிய மூன்று தினங்களிலும் நடைபெறவுள்ளது. முதல் நாள் நிகழ்வு 24ஆம் திகதி நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமூர்த்தி சிவன் ஆலயத்தில் கணபதிஹோமத்துடன் ஆரம்பமாகும். சர்வதேச இந்துமத குருபீடாதிபதி அருள்ஜோதி ஸ்ரீ ஐயப்பதாஸ் சாம்பசிவ சிவாசாரியார் தலைமையில் நடைபெறும் இவ்விழாவில் நல்லை ஆதீன முதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர தேசிக ஞானசம்பந்த பரமாசாரியசுவாமிகள், சித்தாந்த நல்லறிஞர் சிவஸ்ரீ கு. ஜெகதீஸ்வரக் குருக்கள் ஆகியோர் ஆசியுரை வழங்கவுள்ளனர். இணுவில் தர்மசாஸ்தா குருகுல அதிபர் சிவஸ்ரீ தானு மகாதேவ குருக்கள் சிறப்புரை வழங்குவார். நண்பகல் அன்னதானம் வழங்கப் படும்.

இரண்டாம்நாள் விழா சங்கானை இலுப்பைத்தாழ் வெல்லில் ஸ்ரீ முருக மூர்த்தி தேவஸ்தானத்தில் இடம்பெறும். சிறப்பு நிகழ்ச்சிகளாக மங்கல வாத்தியம், கரகா ட்டம், காவடியாட்டம், மயிலாட்டம், கண்டிய நடனம் என்பன இடம்பெறுவதுடன் சிறப்பு விருதுகள் வழங்கி கௌரவிக்கப்படும் நிகழ்வும் நடைபெறும்.

இவ்விழாவில் பிரமஸ்ரீ நித்யசுதானந்த சர்மா வரவேற்புரை நிகழ்த்துவார். சிவஸ்ரீ தானு மகா தேவ குருக்கள் ஆசியுரையும், யாழ் பல்கலைக்கழக இந்து நாகரிகத்துறைப் பேராசிரியர் ப. கோபால கிருஷ்ண ஐயர் சிறப்புரையும் வழங்குவார்கள் அன்றைய தினம் சைவசமய அறிவுப் போட்டியில் பரிசு பெற்ற மாணவர்களுக்கு பரிசில்களும் வழங்கப்படும். (01)

# திருமலை மாவட்ட முஸ்லிம் காங்கிரஸ் வேட்பாளரின் வாகனம் தீக்கிரை

ஸ்ரீலங்கா முஸ்லிம் காங்கிரஸ் சார்பில் கிழக்கு மாகாணசபைத் தேர்தலில் போட்டியிடும் திருகோணமலை மாவட்ட வேட்பாளர் லோ.ப. ரூபிகா சாந்தனியின் பிரசார வாகனம் நேற்று புதன்கிழமை அதிகாலை வேளையில் இனந் தெரியாதோரினால் தீக்கிரையாக் கப்பட்டுள்ளது.

மேற்படி வாகனம் தீக்கிரையாக்கப்பட்டமை தொடர்பில் தான் உப்புவெளி பொலிஸில் முறைப்பாடு செய்ததாக திருகோணமலை மாவட்ட வேட்பாளர் லோ.ப.ரூபிகா சாந்தினி தெரிவித்தார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவிக்கையில் நான் இந்த முறை சிறுபான்மைக்கட்சி ஒன்றின் சார்பில் தேர்தலில் போட்டியிடவுள்ளேன் இதனை சகித்துக் கொள்ள முடியாத எனது அரசியல் எதிரிகளே வாகனத்தை தீக்கிரையாக்கியுள்ளனர்.

நேற்று செவ்வாய்க்கிழமை நள்ளிரவுவரை தேர்தல் பிரசார நடவடிக்கையில் நான் ஈடுபட்டு விட்டு திருகோணமலை, துளசிபுரம் பகுதியில் உள்ள எனது வீட்டிற்கு திரும்பினேன். வழமை போன்று வாகனத்தை வீட்டின் முன்பகுதியில் நிறுத்திவிட்டு உறங்கச் சென்றுவிட்டேன். இதன் பின்னரே இந்த வாகனம் தீக்கிரையாக்கப்பட்டுள்ளது" என்றார்.

# வன்னிப் பகுதியில் சேவையாற்றிய 104 ஆசிரியர்களுக்கு இடமாற்றம்

மாகாண கல்வித் திணைக்களத் தினால் அனுப்பிவைக்கப்பட்ட இடமாற்றக் கடிதங்களுடன் வன்னியில் கடமை ஆற்றிய 104 ஆசிரியர்களும் இடமாற்றத்திற்கு தயாராக உள்ளதாக இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்டச் செயலாளர் லெஸ்லி தெரிவித்தார்.

வன்னி ஆசிரியர்களுக்கான இடமாற்றங்கள் தொடர்பாக பல பிரச்சினைகள் ஏற்பட்டதை தொடர்ந்து இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடுகள் பதிவு செய்யப்பட்டு விசாரணைகள் மேற்கொண்ட பின்னர் 104 வன்னி ஆசிரியர்களுக்கான இடமாற்றம் உறுதிப்படுத்தப்பட்டது.

உறுதிப்படுத்தப்பட்ட கடிதங்கள் 104 ஆசிரியர்களுக்கும் மாகாண கல்வி திணைக்களத்தினால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள நிலையில், 5 கல்வி வலயங்களில் உள்ள பாடசாலைகளுக்கு வலயக் கல்வி ஊடாக ஆசிரியர்கள் தெரிவுசெய்யப்பட்டு கடமையாற்றச் செல்வார்கள் எனவும் இலங்கை ஆசிரியர் சங்கத்தின் யாழ். மாவட்ட செயலாளர் குறிப்பட்டார்.

குறித்த 140 ஆசிரியர்களும் யுத்த காலத்தில் பல்வேறு துன்பங்களுக்கு மத்தியில் வன்னியில் கடமை ஆற்றியவர்கள். அவர்களின் சேவைகள் மதிக்கப்பட வேண்டும். தமது வசதிக்கு ஏற்ப பாடசாலைகளை தெரிவுசெய்து சேவை ஆற்றுவதற்கு மாகாண கல்வி திணைக்களத்தினால் வழங்கப்பட்ட இடமாற்றம் ஒரு வரப் பிரசாதம் எனவும் அவர் கூறினார்.

ஐ.தே.க. தலைவர் நியமனம்:

# நீதிமன்றத்தின் தடையுத்தரவு செப்டெம்பர் 5 வரை நீடிப்பு

ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் பதவி 6 வருடத்திற்கு ஒருமுறை நியமிக்கப்பட வேண்டும் என அக்கட்சியின் மத்திய செயற்குழுவில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்திற்கு விதிக்கப்பட்ட இடைக்கால தடை உத்தரவு நீடிக்கப் பட்டுள்ளது.

இந்த தடை உத்தரவு எதிர் வரும் செப்டெம்பர் 5ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளதாக கல்கிஸ்ஸை மாவட்ட நீதிமன்றம் நேற்று (22) உத்தரவிட்டுள்ளது.

ஐக்கிய தேசியக் கட்சியின் மத்திய செயற்குழுவின் தீர்மானத்திற்கு எதிராக அக்கட்சியின் தென் மாகாண சபை உறுப்பினர் மைத்திரி குணரத்ன மனுத் தாக்கல் செய்திருந்தார்.

கடந்த ஜூலை 19ம் திகதி இடம்பெற்ற ஐக்கிய தேசியக் கட்சி மத்திய செயற்குழு கூட்டத்தில், ஐதேக தலைவர் தெரிவு 6 வருடங்களுக்கு ஒருமுறை இடம் பெறும் என எடுக்கப்பட்ட தீர்மானம் கட்சியின் யாப்புக்கு முரணானது என மைத்திரி குணரத்ன மனுவில் சுட்டிக்காட்டியுள்ளார்.

# குருநகர் பகுதி மீனவர்களுக்காக புதிய எரிபொருள் நிரப்பு நிலையம்

கடற்றொழிலாளர்களின் நலன் கருதி குருநகர் பகுதியில் புதிய எரிபொருள் நிரப்பு நிலையம் ஒன்று நேற்று புதன்கிழமை திறந்து வைக்கப்பட்டுள்ளது.

இதனை குருநகர் வடகடல் நிறுவனமும் யாழ். மாவட்ட பலநோக்கு கூட்டுறவு சங்கமும் இணைந்து திறந்து வைத்துள்ளன

ஈழ மக்கள் ஜனநாயக கட்சியின் யாழ்.மாவட்ட பொறுப்பாளர் கமலேந்திரன் மற்றும் யாழ். மாவட்ட கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன தலைவர். அ. எமிலியாம்பிள்ளை ஆகியோர் இந்த எரிபொருள் நிரப்பு நிலையத்தை திறந்து வைத்தனர்.

கடற்றொழிலாளர்கள் தூர இடங்களுக்குச் சென்று எரிபொருளை கொள்வனவு செய்து கொள்கின்ற காரணத்தினால் கடற்றொழிலாளர்கள் நலன் கருதி குருநகர் வடகடல் நிறுவன வளாகத்தில் எரிபொருள் நிரப்பு நிலையம் திறந்து வைக்கப் பட்டுள்ளது.

அத்துடன், பலநோக்கு கூட்டுறவு சங்கத்தினால் நிர்ணயிக்கப்பட்ட விலையில் கடற்றொழிலாளர்களுக்கு எரிபொருள் விற்பனை செய்ய தீர்மானிக்கப்பட்டுள்ளதாகவும் கடற்றொழிலாளர் கூட்டுறவு சங்கங்களின் சம்மேளன தலைவர் தெரிவித்தார்.

# தாய், தந்தை, சகோதரி கொலைக்கு பணப் பிரச்சினையே காரணம்

வெள்ளவத்தை வீடொன்றில் தனது தந்தை, தாய், சகோதரி ஆகியோர் இறந்த சம்பவத்திற்கு நீண்டகால பணப்பிரச்சினையே காரணம் என இச்சம்பவம் தொடர்பாக தேடப்படும் 27 வயதான இளைஞர், தனது நண்பர் ஒருவருடனான மின்னஞ்சல் பரிமாற்றங்களில் ஒப்புக கொண்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

இவர் மருந்துக் கம்பனியொன்றில் விற்பனை பிரதிநிதியாக பணியாற்றியவர் ஆவார். இவர் 40 தூக்க மாத்திரைகளை தனது தந்தை, தாய், சகோதரி ஆகியோருக்கு கொடுத்துள் ளதா கவும் தூக்க மாத்திரை அட்டைகளை தாம் கண்டறிந் தாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

வெள்ளவத்தை ராமகிருஷ்ண வீதியிலுள்ள வீடொன்றில் சனிக்கிழமை பிற்பகல் மூவரின் சடலங்கள் மீட்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது.

கொட்டகலையைச் சேர்ந்த சங்கிலி குமாரசாமி (60), ஐயப்பன் பிரேமலி (58), அனிதபிரியா (23) ஆகியோரே உயிரிழந்தவர்கள் ஆவர்.

இச்சடலங்களில் காயங்கள் எதுவும் காணப்பட வில்லை. இவர்கள் வெள்ளிக் கிழமை இறந்திருக்கலாம் எனக் கருதப் படுகிறது. சடலங்களில் துர்நாற்றம் வீசுவதை தவிர்ப்பதற் காக மேற்படி இளைஞர் சடலங்கள் மற்றும் வீடு முழுவதும் வாசனைத் திரவியங்களை தெளித்துள்ளார்.

### சந்தேகநபர் மின்னஞ்சல்

மேற்படி இளைஞரை கைது செய்வதற்கு வெள்ளவத்தை பொலிஸாரும் கொழும்பு குற்றப் புலனாய்வுப் பிரிவினரும் தேடுதல் நடத்திவருகின்றனர். இவர் போலி கடவுச்சீட்டு மூலம் ஏற்கெனவே நாட்டைவிட்டு தப்பிச் சென்றிருக்கலாம் என பொலிஸார் சந்தேகிக்கின்றனர்.

# வானலை நாதம்

## வானொலியில் விளம்பர அறிவிப்பாளர்கள்



வானொலி அறிவிப்பாளர்களை பொதுவாக இரண்டு வகையாகப் பிரிக்கலாம். நிகழ்ச்சி அறிவிப்பாளர்கள், விளம்பர அறிவிப்பாளர்கள் என்பவர்களே அந்த இரு வகையினராவர். இரு சாரா ருக்கும் குரல் வளம் பிரதானம். சினிமாவில் தோன்றுவோருக்கு, ஒளிப்படத்துக்கு இசைவான முகத்தோற்றம் இருக்க வேண்டும் என்பர். அதுபோலவே வானொ லியில் அறிவிப்பாளர்களாகப் பணியாற்ற வருவோருக்கும் ஒலிவாங்கிக் கருவிக்கு இசைவான மைக்கிரோ ஃபோனிக் குரல் அமைந்திருத்தல் அவசியம். எனவே வானொலி அறிவிப்பாளருக்கு இருக்க வேண்டிய முதலாவது தகைமை குரல் வளமாகும்.

இலங்கை ஒலிபரப்புக் கூட்டுத்தாபனத்தில் 1971- 1978 காலப் பகுதியில் தமிழ்ப் பிரிவு, பிரிவு சேவை ஒன்று, சேவை இரண்டு என்றவாறாக இயங்கியது. இரண்டு சேவைக்கும் வெவ்வேறு பணிப்பாளர்கள். சேவை ஒன்றின் பணிப்பாளராக நியமிக்கப்பெற்ற சி.வி.ராஜசுந்தரம் ஒலிபரப்பு ஊடகத்தின் வல்லமையை நன்கு அறிந்தவர். அறிவொளி பரப்புவதில் வானொலி படிப்பறிவற்றோருக்கும் பயன்படத்தக்கதென்பதை நன்கறிந்திருந்த போதிலும் இலக்கியம், ஆடல், பாடல் போன்ற நுண்கலைகளில் ஆர்வம் கொண்டிருந்தமையால், குரல் வளம் மிக்க அறிவிப்பாளர்கள் சேவை ஒன்றில் மட்டுமே பணியாற்ற வேண்டும் என்று விரும்பினார்.

ஆனால் சேவை இரண்டில், அதாவது வர்த்தக சேவையில் பணியாற்றும் அறிவிப்பாளருக்கு புகழும், செல்வாக்கும், (உத்தியோகபூர்வமற்ற முறையில்) மேலதிக வருமானமும் கிடைத்து வந்தன. அறிவிப்பாளராகப் பணியாற்றி வந்த எஸ்.பி.மயில்வாகனன் தமிழ்நாட்டுச் சினிமா உலகில் செல்வாக்குமிக்கவராக விளங்கினார். சிவாஜி கணேசன், எம்.ஜி.ஆர்.போன்றவர்களை இலங்கைக்கு வரவழைப்பதற்கு மயில்வாகனன் அவர்களையே நாட வேண்டி இருந்தது. உண்மையில் தமிழ்ச் சினிமாத் துறையின் வாணிக வளர்ச்சிக்கு இலங்கை வானொலி அளப்பரும் சேவையாற்றியுள்ளதென்றால் மிகையாகாது.

வானொலி அறிவிப்பாளருக்கு அவசியமான மற்றொரு தகைமை மொழியாற்றல் ஆகும். தமிழ் மொழியில் மட்டுமன்றி ஆங்கிலம், சிங்களம் ஆகியவற்றிலும் அவர் தேர்ச்சி பெற்றிருத்தல் வேண்டும்.

தகவல் தொழில்நுட்ப யுகமெனக் குறிப்பிடப்படும் இக் காலத்திலே வானொலி அறிவிப்பாளர் கலை, இலக்கியம், சினிமா, வானொலி, தொலைக்காட்சி, அரசி யல் ஆகிய துறைகளில் ஆர்வமும் ஈடுபாடும் உடையவராய் இருத்தல் அவசியம். எல்லாவற்றிலும் முக்கியமானவை வாசிக்கும் பழக்கம்.

விளம்பர அறிவிப்பாளர் மற்றொரு தகைமையும் பெற்றிருத்தல் வேண்டும் அதாவதுள அவர் சிறந்த நடிகராயும் இருத்தல் அவசியம். அப்துல் ஹமீட், இராஜேஸ்வரி சண்முகம், நடராஜ சிவம், விசாலாட்சி ஹமீட் போன்றவர்கள் விளம்பர அறிவிப்புத் துறையில் பிரகாசிப்பதற்கு முக்கிய காரணம் அனைவரும் வானொலி நாடக நடிகர்களாகப் பயிற்சி பெற்றுள்ளமையாகும்.

விளம்பர அறிவிப்பு என்பது விளம்பரமாகும் பொருளின் தன்மைக்கு ஏற்ப மாறுபடும். ஆரம்ப காலத்தில், அதாவது மயில்வாகனன் காலகட்டத்திலே சந்தைக் களரியிலே குரல் எழுப்பிக் கூவி விற்பது போல விளம்பரங்கள் உரத்து அறிவிக்கப்பட்டன. ஆனால் பிற்காலத்தில் இந்த நடைமுறையில் மாற்றம் ஏற்பட்டது. சவர்க்காரம், பவுடர் போன்ற பொருள்களை விளம்பரம் செய்யும் போது மென்மையான குரலில் (இதனை ஆங்கிலத்தில் சொவ்ட் செல் என்பர்) அறிவிக்கப்பட்டன.

இந்த மாற்றத் தைக் கொண்டு வந்தவர்களில் அறிவிப்பாளர் எஸ்.கே.பரராஜ சிங்கம் குறிப்பிடத்தக்கவர். வி.சுந்தரலிங்கம் கணீரென்ற குரலில் விளம்பரங்களை அறிவிக்க எஸ்.கே. பரராஜசிங்கம் மென்மையான குரலில் அடக்கமாக அறிவிப்பார்.ஆக, வர்த்தக விளம்பர அறிவிப் பாளர் கல்வித்தகைமை குறைந் தவரானாலும் உலக விவகாரங் களிலும், கலை, இலக்கியம் மற்றும் நுண்கலைத் துறைகளி லும் ஈடுபாடும் பரிச்சயமும் உடையவராக இருத்தல் வேண்டும்.

**- காவலூர் இராசதுரை**
**("விளம்பரத் துறை - தோற்றம், வளர்ச்சி, வீச்சு, ஆதிக்கம்" என்ற நூலிலிருந்து)**

## வானொலியில் தொலைபேசி நிகழ்ச்சிகள்

**வானொலி நேயர்களுக்கு அன்றும், இன்றும் நன்கு அறிமுகமான ஒரு மூத்த ஒலிபரப்பாளர் விமல் சொக்கநாதன். ஒரு சட்டத்தரணியாகவும் விளங்கிய இவர் பல வருடங்களாக இலங்கை வானொலியில் கடமையாற்றியவர். 1976ஆம் ஆண்டு இலங்கையிலிருந்து புலம்பெயர்ந்து லண்டன் சென்று சட்டத்துறையில் முழுமையாக ஈடுபட்டு தகுதிகாண் பரீட்சையொன்றில் சிறப்புச் சித்தியடைந்ததன் ஊடாக லண்டன் மாநகர சட்டத்துறையில் ஓர் உயர்நிலை அந்தஸ்து பெற்ற பெருமைக்குரியவரானார். எனினும் ஒலிபரப்புத் துறையிலிருந்து பிரித்தெடுக்க முடியாதவாறு, லண்டன் பி.பி.ஸி தமிழோசை நிகழ்ச்சியில் இப்போதும் இவரது குரல் ஒலித்துக்கொண்டிருக்கிறது. இவர் தனது ஒலிபரப்புத் துறை அனுபவங்களையும், ஒலிபரப்பாளர்களுக்கான ஆலோசனைகளையும், வானொலி நிகழ்ச்சி சார்பான கருத்துக்களையும் சொல்லும் "வானொலிக் கலை" என்ற நூலிலிருந்து பெறப்பட்ட கட்டுரை இது.**

கடந்த சுமார் பத்து வருடங்களுக்குள் 'தொலைபேசித் தொடர்பு' என்பது முற்றாக மாற்றமடைந்துவிட்டது. வீட்டிலிருந்து அல்லது வீதி ஓரத்துக் கடையிலிருந்து தொலைபேசியில் பேசிய மக்கள், இப்போது நடந்துகொண்டு, ஓடிக்கொண்டு பேசுகிறார்கள். கடையில் நிற்கும்போது, சந்தையில் காய்கறி வாங்கும்போது, உணவகத்தில் உண்ணும் போது பேசுகிறார்கள். இப்படி எல்லாம் மக்களைப் பேச வைத்திருப்பது, 'செல்' எனப்படும் செல்லுலர் தொலைபேசித் தொழில்நுட்பம்! இந்தத் தொழில்நுட்ப அபிவிருத்தி உலக வானொலிகளிலும் இப்போது 'செல்' தொலைபேசிகளை முக்கிய பங்கேற்க வைத்திருக்கிறது.

வானொலி நிருபர்கள் தாம் திரட்டிய புத்தம்புதுத் தகவல்களைத் தமது வானொலியின் செய்திப் பகுதிக்கு அனுப்ப ஒரு தொலைபேசிப் பெட்டியை அல்லது ஒரு கடையைத் தேடி அலைய வேண்டியதில்லை. சம்பவம் நடந்த இடத்தில் நின்றபடியே செய்திகளைச் சூடு ஆறுமுன், நிலையத்திற்கு அனுப்பிவிடச் 'செல்' தொலைபேசி பேருதவியாக வந்து சேர்ந்திருக்கிறது.

அதேபோல, ஒரு வானொலி அரசியல் நிகழ்ச்சியின் போது நிகழ்ச்சி ஒலிபரப்பாளர் நேரடியாக ஒரு அரசியல்வாதியை அவருடைய 'செல்'லில் தொடர்பு கொண்டு அந்த உரையாடலை அப்படியே ஒலிபரப்புவதையும் நாம் கவனிக்க முடிகிறது.

ஒரு ஆலயத்தின் தேர்த் திருவிழாவில், சுவாமி வீதிவலம் வரும் வேளையில் - கோயிலின் அர்ச்சகரோடு அல்லது தர்மகர்த்தாவோடு, நிகழ்ச்சித் தயாரிப்பாளர் நேரடி நிகழ்ச்சியில் பேச விழையும்போது அங்கு கைகொடுப்பதும் இந்த கைத்தொலைபேசி தான்!

இங்கு குறிப்பாகக் கவனிக்கப் போவது, உலக வானொலி ஒலிபரப்புகளிலெல்லாம் இப்போது மிகவும் பிரபல்யமாகியிருக்கும் தொலைபேசி (Radio Phone in) நிகழ்ச்சியைப் பற்றிதான்.

**தொலைபேசி நிகழ்ச்சிகள்:**

ஒரு அறிவிப்பாளரே தனி ஒரு குரலில் நீண்ட நேரம் (மைக்) ஒலிவாங்கியில் பேசும் முறையைச் சற்று மாற்றியமைத்து, நேயர்களுடன் அந்த ஒலிவாங்கியைப் பகிர்ந்து கொள்வது, இந்தவித நிகழ்ச்சிகளின் அடிப்படைத் தத்துவம். இதற்காக நேயர்களை ஒலிபரப்பு நிலையத்திற்கு நேரடியாக அழைக்க வேண்டிய அவசியமேயில்லை. போக்குவரத்து வசதியீனம், முதுமையினால் பயணக் கஷ்டம், கடும் மழை, தொலை தூரம் போன்ற எல்லாத் தடைகளையும் மீறி வானொலி நேயர்கள் ஒலிவாங்கியை அறிவிப்பாளருடன் பகிர்ந்து கொள்ளலாம் நிகழ்ச்சி ஒலிபரப்பில் நேரடியாகத் தமது குரலில் கலந்து கொள்ளலாம்.

வீட்டுத் தொலைபேசிகள் மூலம் வானொலி ஒலிபரப்புகளில் நேயர்கள் கலந்து கொள்வது நீண்ட காலம் நடந்து வந்தாலும், அண்மைக் காலத்தில் 'செல்' போன்களின் எண்ணிக்கை அதிகரிப்பு, வானொலித் தொலைபேசி நிகழ்ச்சிகளில் 'செல்'களின் தாக்கத்தை, பங்களிப்பை, பன்மடங்காகப் பெருக்கிவிட்டிருக்கிறது.

'செல்'களின் இந்தப் பன்முக அதிகரிப்பினால் இந்த 'செல்' நேயர்களைத் தம்பால் ஈர்க்கும் விதத்தில், வானொலி நிலையங்கள் பல, தமது தினசரி ஒலிபரப்பில் ஒன்று இரண்டல்ல, கணிசமான நிகழ்ச்சிகளைத் 'தொலைபேசி நேயர்களின் நிகழ்ச்சிகளாக மாற்றியமைத்துத் தமது தரத்தைத் தாழ்த்தி, நேரத்தை நிரப்பி விடுகின்றன.




**கட்டுப்பாடுகள்:**

ஓர் ஒலிபரப்பு நிறுவனம், கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்த முன் - தொலைபேசி நிகழ்ச்சிகள் கொண்டுவரும் தொல்லைகளை உணர்ந்திருத்தல் அவசியம். அப்போதுதான் அவற்றைத் தடுக்கும் கட்டுப்பாடுகளை நடைமுறைப் படுத்த முடியம். ஒலிவாங்கியின் முன்னால் அமரும் ஓர் அறிவிப்பாளரின் தோளில், ஒலிபரப்பு நிலையம் பல பொறுப்புகளைச் சுமத்துகிறது. பல விஷயங்களை வரையறை செய்து வழங்கியிருக்கிறது.

ஒலிவாங்கியின் முன் அமர்ந்து ஓர் அறிவிப்பாளர் தன்னிச்சையாக பேசிக்கொண்டிருக்கிறார் என்று நேயர்களில் ஒரு சாரார் கருதினாலும் உண்மை அதுவல்ல. அறிவிப்பாளர் மிகுந்த கட்டுப்பாடுடன் நிலையத்தின் வரையறைக்குள் நின்றுதான் பேசுகிறார். அவர் அந்த வரையறைகளை மீறினால், அவரது பதவியே பறிக்கப்படலாம். இதுதான் உண்மை.

'தொலைபேசி மூலம் நேயர்கள் பேசும் நிகழ்ச்சி' என்பது ஓர் அறிவிப்பாளர் தமது ஒலிவாங்கியை நேயர்களுடன் பகிர்ந்து கொள்ளும் நிகழ்ச்சி என்று முன்னர் குறிப்பிட்டிருந்தேன்.


ஒலிவாங்கியில் பேசும் அறிவிப்பாளர் கடைப்பிடிக்க வேண்டிய பக்குவம், பொறுப்புகள் பற்றியும் குறிப்பிட்டேன். ஆனால் ஒலிவாங்கியில் (தொலைபேசி மூலம்) இணையும் வானொலி நேயர்களுக்கோ கட்டுப்பாடுகள் எதுவுமே இல்லை. பேசுவதில் எந்தவிதமான விதிகளும் இல்லை. எனவே, தனது தொலைபேசி மூலம் வானலைகளில் 'இணையும்' ஒரு வானொலி நேயர், பொறுப்பற்ற முறையில் மிகவும் காரசாரமான அரசியல் கருத்துகளை வெளியிடக்கூடும். நிலையத்திற்கு மிகவும் தர்ம சங்கடத்தை உருவாக்கக்கூடும். மிகவும் விரசமான விஷயங்களை, பாலியல் சமாச்சாரங்களில் கொச்சையாக, அவையடக்கம் என்ற உணர்வே இன்றிப் பக்குவமற்றுப் பேசக்கூடும். ஒரு சமூகத் தலைவரை, ஒரு பெரியவரை தரக்குறைவாகப் பேசி, தமது தனிப்பட்ட காழ்ப்புணர்ச்சியை வானொலியில் பரப்ப முற்படலாம்.

சம்பந்தப்பட்ட பெரி யவர், ஒலிபரப்பு நிலையத்தின் மீது பல லட்சம் மானநஷ்ட ஈடு கேட்டு வழக்கு தொடரும் பேராபாயம் ஏற்படலாம்!

ஒரு சமூக விரோதி, நிகழ்ச்சியை நடத்திக்கொண்டிருக்கும் அறிவிப்பாளரையே பகிரங்கமாக கேலி செய்ய அல்லது அச்சுறுத்த முற்படலாம்.

(மிகுதி அடுத்த வாரம்)

அக்டோபர் பன்னிரண்டாம் தேதியன்று மாட்டுக் கொட்டில் வெற்றி ஞாபகார்த்தமாகவும், நடுவேனில் தினத்தன்று புரட்சிதின ஞாபகார்த்தமாகவும் துப்பாக்கியை வெடிப்பது என்று மிருகங்கள் ஒரு மனதாக முடிவு செய்தன. மாரிக் காலத்தில் மாலியால் தொந்தரவு அதிகரித்துக் கொண்டிருந்தது. ஒவ்வொரு நாளும் வேலைக்கு அது காலங்கடந்து வந்தது. 'தூங்கிவிட்டேன்' என்று சொல்லி மன்னிப்புக் கேட்டது. மேலும், சொல்லிக்கொள்ள முடியாதபடி உடலில் வலிகளும் நோய் நொடிகளும் இருப்பதாகச் சொல்லிக் கொண்டது. ஆனால் அதற்குப் பசி மட்டும் எப்போதும் போலத்தான் இருந்தது. ஏதாவது ஒரு சாக்கைச் சொல்லிக்கொண்டு அது வேலை செய்வதை நிறுத்திவிட்டு ஓடிவிடும். குடிதண்ணீர் நிரம்பியிருந்த குட்டையின் கரையில் போய் நின்றுகொண்டு, தண்ணீரில் தெரிந்த தன் பிம்பத்தைப் பார்த்து ஆனந்தப்பட்டுக் கொண்டே பொழுதைக் கழிக்கும்.




ஆனால் இதைவிட முக்கியமான வி'யம் ஒன்று பற்றியும் வதந்திகள் நிலவின. விலங்குப் பண்ணையில் ஒருநாள் ஆனந்தமாக மாலி நாட்டிய நடை பயின்றுகொண்டு வந்தபோது, அதன் அழகிய வால் ஆடுவதையும், அதன் முகபாவத்தையும் பொருட்படுத்தாமல், க்ளோவர் சொல்லிற்று.

"மாலி, உன்னிடம் ஒரு முக்கியமான விஷயம் சொல்ல வேண்டும். விலங்குப் பண்ணையை பாக்ஸ்வுட் பண்ணையிலிருந்து பிரிக்கும் வேலி ஓரத்தில் நின்று நீ அப்பால் பார்த்துக் கொண்டிருந்ததை நான் இன்று காலையில் பார்த்தேன். பில்கிங்டனின் ஆட்களில் ஒருவன் வேலிக்கப்பால் நின்று கொண்டிருந்தான். நான் வெகு தூரத்தில் இருந்ததால் எனக்கு நிச்சயமாகத் தெரியவில்லை. எனினும் அவன் உன்னுடன் பேசிக் கொண்டிருந்ததையும், உன்னைத் தடவிக் கொடுத்ததையும் நான் கண்டேன் என்றுதான் நினைக்கிறேன். இதற்கு என்ன அர்த்தம் சொல்லு...."


"அவன் என்னைத் தொடவில்லை! நான் அங்கேயில்லை! அது பொய்!" என்று கத்திற்று மாலி. பின்னர் குதித்துக்கொண்டே கோபமாகத் தரையைக் காலால் பிராண்டியது அது.

"மாலி! இதோ, என்னை நிமிர்ந்து பார். நிஜமாகவே சொல்கிறாயா? அந்த மனிதன் உன்னைத் தட்டிக் கொடுக்கவே இல்லையா? சத்தியமாக என்னை நிமிர்ந்து பார்த்து சொல்" என்றது க்ளோவர். "அது பொய்' என்றது மாலி.

ஆனால் க்ளோவரை நிமிர்ந்து பார்க்க அதற்குத் தைரியம் வரவில்லை.

(நாளை..)

## வரைவோம் வாருங்கள்!



## சந்தர்ப்பம் – தன்னம்பிக்கை கதை

கிரேக்க நாட்டுச் சிற்பி ஒருவன், மனிதனிடம் வந்து போகும் சந்தர்ப்பத்தை பின்வருமாறு படம் பிடித்துக் காட்டுகிறான். அதுதான் சந்தர்ப்பம் என்னும் சிலை. அந்த சிலைக்கு இரு இறக்கைகள் இருக்கும். முன்னந்தலையில் கூந்தலும் பின்னந்தலை வழுக்கையுமாக இருக்கும்.



சந்தர்ப்ப சிலையிடம் சில கேள்விகள்
உனக்கு இறக்கை எதற்கு?
நா்ன் மக்களிடம் பறந்து செல்வதற்காக!
முன்னந்தலையில் கூந்தல் எதற்கு?
மக்கள் என்னைப்பற்றிப் பிடித்துக் கொள்வதற்காக!
ஏன் பெருவிரலில் நிற்கிறாய்?
சந்தர்ப்பத்தைப் பயன்படுத்தாதோரிடமிருந்து கண நேரத ்தில் பறந்தோடி விடுவதற்காக.
பின்னந்தலை ஏன் வழுக்கையாக இருக்கிறது?.
சந்தர்ப்பத்தை தவறவிட்டவர்கள் என்னைப் பற்றிப் பிடித்துக் கொள்ளாதிருப்பதற்காக!

சிற்பியின் கற்பனை எவ்வளவு அற்புதமானது பாருங்கள். இதன் மூலம் நல்லதோர் பாடத்தை உலகுக்கு உணர்த்துகிறார். ஒரு முறை சந்தர்ப்பம் நழுவி விட்டால் அதே சந்தர்ப்பம் மீண்டும் வரவே செய்யாது என்பதற்கு இதை விட வேறு என்ன உதாரணம் வேண்டும்?

## தங்கமோ தங்கம்!

❖ பூமியில் 100 மில்லியன் தொன் எடைக்கு மேற்பட்ட தங்கம் இருக்கின்றதாம். உலகம் முழுவதும் உள்ள கடல் நீரில் 27 மில்லியன் தொன் எடை தங்கம் இருக்கின்றதாம்.

❖ இயற்கையில் இதுவரையில் கிடைத்த பெரிய தங்கப் பாளத்தின் எடை 909 கிலோ! 1869இல் அவுஸ்திரேலியாவில் இது கண்டெடுக்கப்பட்டது.



❖ ஒரு அவுன்ஸ் தங்கத்தை மிக மெல்லிய கம்பியாக 80கி.மீட்டர் நீளத்திற்கு நீட்டலாம். தங்கத்தை பழங்கால சீனர்கள் தீமை செய்யும் பேய்களாகவே கருதினார்கள்.

❖ பழைய ஏற்பாட்டில் தங்கம் என்ற சொல் 415இடங்களில் குறிப்பிடப்பட்டுள்ளது. முதன் முதலில் தங்க நாணயம் கி.மு.560-546இல் துருக்கி மன்னரால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

**குழந்தைகளே!**

3 முதல் 12 வயது வரையான பிள்ளைகளின் பிறந்தநாள் வாழ்த்து தமிழ்நாதத்தில் பிரசுரமாகும். நீங்கள் செய்யவேண்டியது இதுதான்:

ஏதாவதொரு விடயத்தைப் பூர்த்தி செய்தல். அத்துடன் பெயர், ஊர் பிறந்ததினம் என்பவற்றை மாத்திரம் எழுதி உங்கள் புகைப்படத்தையும் இணைத்து எமக்கு தபாலில் அனுப்பிவைக்க வேண்டும்.

**சிறுவர் அமுதம், தமிழ்நாதம், 267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம்.**

# சிறுவர் அமுதம்

### நீண்ட தூக்கம்



குளிர்காலம் தொடங்கி வெப்பம் குறைந்ததும் குளிர்ப் பகுதியில் வாழும் சில விலங்குகள் வேகமாய் மண்ணுக்கு கீழே குடில் அமைத்து தூங்கப்போய் விடும். குடிலுக்குள் குளிர் நுழையாமல் இருக்க வாசலில் மண்போட்டு மூடிவிடும். குளிர் முடியும்போது, வெளியே வந்து வெளியில் தன் நிழல் தெரிகிறதா என்று பார்க்கும். நிழல் தெரிந்து விட்டால் குளிர்காலம் மாறத் தொடங்குகிறது என்று அர்த்தம். தூக்கத்தை கலைத்து விட்டு வெளியே வந்துவிடலாம். நிழல் தெரியவில்லை என்றால் மறுபடியும் தூங்கப் போய்விடுமாம். இது போல் சுட்டெரிக்கும் கோடையிலிருந்து தப்பிக்க நத்தைகள், சில மீன்கள், பாலூட்டிகள் நீண்ட கோடைத் தூக்கத்தையும் எடுத்துக் கொள்கின்றன.

### விடுகதைகள்




1.வாலால் நீர் குடிக்கும், வாயால் பூச்சொரியும் அது என்ன?

2.நன்றிக்கு வால் கோபத்துக்கு வாய் அது என்ன?

3.உயரத்தில் இருப்பிடம்.தாகம் தீர்ப்பதில் தனியிடம் அது என்ன?

4.தலையில் கீரீடம் வைத்த தங்கப்பழம் அது என்ன?

5.காகிதம் கண்டால் கண்ணீர் விடும், மூடிவிட்டால் மூலையில் அமரும் அது என்ன?

விடைகள்:
1.விளக்கு 2.நாய் 3. இளநீர்
4.அன்னாசிப்பழம் 5. பேனா

**சுடோக்கு எண் 35 விடை**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 8 | 1 | 7 | 3 | 2 | 4 | 9 | 6 | 5 |
| 2 | 6 | 3 | 9 | 5 | 1 | 8 | 4 | 7 |
| 9 | 5 | 4 | 6 | 8 | 7 | 2 | 3 | 1 |
| 5 | 3 | 8 | 1 | 7 | 2 | 4 | 9 | 6 |
| 1 | 9 | 2 | 4 | 6 | 3 | 7 | 5 | 8 |
| 4 | 7 | 6 | 5 | 9 | 8 | 1 | 2 | 3 |
| 7 | 4 | 5 | 2 | 1 | 6 | 3 | 8 | 9 |
| 3 | 8 | 9 | 7 | 4 | 5 | 6 | 1 | 2 |
| 6 | 2 | 1 | 8 | 3 | 9 | 5 | 7 | 4 |

**சுடோக்கு எண் 36**

| | | | | | | | | |
|---|---|---|---|---|---|---|---|---|
| 2 | 4 | | 6 | | 3 | | | 7 |
| | | 7 | | | 4 | | | |
| 6 | | | 7 | 8 | | | | |
| | 7 | 9 | | | | 5 | | |
| 8 | 3 | | | | | | 2 | 1 |
| | | 6 | | | | 7 | 3 | |
| | | | | 9 | 2 | | | 5 |
| | | | 8 | | | 3 | | |
| 9 | | | 1 | | 6 | | 7 | 2 |

# நீருக்காக அலையும் நிலையைத் தவிர்க்க,

# தரைக்கீழ் நீரைப் பாதுகாப்போம்!



நிலத்தின் அடியில் மாசடையும் நீரை சுத்திகரிப்பதென்பது இயலாதகாரியம். நீர்ப் பாதுகாப்பு சட்டங்கள் உருவாக்கப்படுவது அவசியம். நீரின் தேவை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது. இதன் விளைவாக ஒரு சொட்டு நீரின் விலை ஒரு சொட்டு பெற்றோலின் விலையை விடவும் கூடுதலான பெறுமதியை அடையக்கூடிய காலம் மிகவும் தொலைவில் இல்லை என்று ஆர்ஜென்டினாவில் நடைபெற்ற ஐக்கியநாடுகள் சபையின் நீரியல் தொடர்பான மாநாட்டில் கலந்து கொண்ட சிரியாவின் பிரதிநிதியான சவூப்கௌஉல் கூறினார்.

இத்தகைய பெறுமதிமிக்க நீரினை நாம் இரண்டு வகையாகப் பிரிக்கலாம்.

01. மேற்பரப்புநீர் (SurfaceWater)

02. தரைக்கீழ்நீர் (GroundWater)

என்பனவாகும்.

தரைக்கீழ் நீர் என்பது பூமியின் மேற்பரப்பிற்குக் கீழாகக் காணப்படும் நீராகும். நிலக்கீழ் நீர் நிரம்பிய வலயம் என்றும் அழைக்கப்படுகின்றது.

தரைக்கீழ் நீர்வளத்தினைப் பல்வேறுபட்ட நாடுகளும் பயன்பாட்டில் ஈடுபடுத்தி வருகின்றன. குடிநீரிலே தரைக்கீழ் நீரின் பங்கானது ஐரோப்பாவில் 75%ஆகவும், ஐக்கியஅமெரிக்காவில் 51%ஆகவும், ஆசியாவில் 32%ஆகவும், லத்தீன் அமெரிக்காவில் 29% ஆகவும் காணப்படுகின்றது.

எனவே இவ்வாறாகப் பயன்பட்டுவரும் தரைக்கீழ் நீர் இன்று அதிகரித்த விவசாய நடவடிக்கை, கைத்தொழில் மற்றும் ஏனைய சமூகநடவடிக்கைகளால் மாசடைந்து வருவது மிகவும் கவலைக்குரிய விடயமாக அமைந்துள்ளது.

ஒரு தடைவ தரைக்கீழ் நீர் மாசடைந்தால் அதனை மீண்டும் சுத்திகரிப்பது என்பது மிகவும் கடினமாகும். அதாவது தரைக்கீழ் நீரை இறைத்தல் மூலம் மேலே கொண்டு வந்து மீண்டும் அதைச் சுத்திகரிப்பது என்பது மிகவும் செலவும் கூடியது மட்டுமல்லாது நேர-காலம் என்பவற்றாலும் அது முடியாதகாரியமாகவே அமைந்துள்ளது.

நிலக்கீழ் நீர் என்பது தரையின்கீழ் காணப்படுகின்ற நீரினையே குறித்து நிற்கின்றது. இந்நிலக்கீழ் நீரானது உலகளாவிய ரீதியில் மிகவும் குறைந்தளவில் காணப்படுவதுடன் வெகுவாக அருகிச் செல்கின்ற வளமாகவும் காணப்படுகின்றது.

உலக மொத்த நீர்ப் பரம்பலில் 0.005% நீரே தரைக்கீழ் நீராகக் காணப்படுகின்றது. இத்தரைக்கீழ் நீரானது இன்று இலங்கையில் அதிமுக்கிய வளமாகத் தொழிற்பட்டு வருகிறது.

குறிப்பாக இன்று இலங்கை ஒரு விவசாய நாடாக இருப்பதனால் விவசாயத்துறைக்கும், வளர்ந்துவரும் கைத்தொழிலுக்கும், உதாரணமாக கட்டுநாயக்க சுதந்திர வர்த்தக வலயத்திற்கு இப்பகுதிகளில் காணப்படும் தரைக்கீழ் நீர் அதிகளவில் பயன்படுத்தப்பட்டு வருவதுடன், மக்கள் குடியேற்றத்திற்கும் பெரும்பங்களிப்பு செய்து வருகின்றது.

மக்கள் குடியிருப்பினைத் தீர்மானிக்கின்ற வளமாகவும் இன்று இது தொழிற்படுகின்றது. எனினும் கடந்த காலங்களில் இலங்கையில் இடம்பெற்றுவருகின்ற முறையற்ற விவசாய நடவடிக்கைகள் காரணமாக கற்பிட்டி, யாழ்ப்பாணம் போன்ற பகுதிகளில் நைதரசன் மாசுபடுதல் தரைக்கீழ் நீரில் அதிகளவில் ஏற்பட்டுள்ளதுடன், கைத்தொழில் நடவடிக்கைகளால் தலைநகர் கொழும்பு, அதனை அண்டிய பகுதிகளிலும், சனச்செறிவுமிக்க பிரதேசங்களில் அதிகரிக்கும் சனத்தொகை அழுத்தங்களினாலும், வெளியேற்றப்படுகின்ற கழிவுகளாலும் தரைக்கீழ் நீரானது மாசடைந்து வருகின்றது. எனவே தரைக்கீழ் நீர்வளத்தைப் பாதுகாக்க வேண்டிய தேவை நாட்டில் எழுந்துள்ளதுடன் நீருக்கான மாற்று மூலாதாரங்களை கண்டுபிடிக்கவும் புதிய தரைக்கீழ் நீர்வளங்களைக் கண்டுபிடிக்கவும் வேண்டிய தேவை ஏற்பட்டுள்ளது.

படிவுவீழ்ச்சி, நீர்நிலைகள், வடிநிலங்கள் என்பவற்றின் மூலம் மேற்பரப்பிற்கு வருகின்ற நீரானது ஊடுவடிதல் செயன்முறைக்கு உட்பட்டு மண், பாறைகளுக்கு இடையே உட்புகுந்து செல்லாவண்ணம் தடுக்கப்பட்டு நீரினைத் தேக்கி வைக்கின்றன.

இவ்வாறு தேக்கி வைக்கப்படுகின்ற நீரே தரைக்கீழ் நீர் என அழைக்கப்படுகின்றது. தரைக்கீழ் நீரானது காற்றுடன் கலந்த வலயம் (Zone of Aeration) நிரம்பல் வலயம் (Zone of Saturation) என்ற இரண்டு பிரதான வலயங்களைக் கொண்டது.

புவியின் மேற்பரப்பை வந்தடைகின்ற மழைநீரில் ஒரு பகுதி நிலத்தினுள் பொசிந்து தேங்குகின்றது. அதனைத் தரைக்கீழ் நீர் என்பர். அதேபோல புவியின் உட்பகுதியிலிருந்தும் சிறிதளவான நீர் தரைக்கீழ் நீராகத் தேங்குகின்றது. எனினும் படிவு வீழ்ச்சி வடிவங்களாக நிலத்தை வந்தடையும் நீர், தரைக்கீழ் நீரில் பெரும் பங்கை அளிக்கின்றது. நிலத்தினுள் பொசிந்து தரைக்கீழ் நீராக தேங்கும் நீரினளவு பல்வேறு காரணிகளில் தங்கியுள்ளது.

அவை பின்வருமாறு:

01. மழைநீரின் அளவைப் பொறுத்து ஓரிடத்தின் தரைக்கீழ் நீரினளவும் அமையும்.

02. நில மேற்பரப்பின் சாய்வினைப் பொறுத்துத் தரைக்கீழ் நீரினளவு அமையும். அதாவது குத்துச் சாய்வாக நிலமிருப்பின் அங்கு பெய்கின்ற மழைநீர் தேங்கி நிற்காது ஓடிவிடும். சமவெளியாயின் நீர் தேங்கி நிலத்தினுள் பொசிய வாய்ப்பாக இருக்கும்.

03. ஆவியாகும் விதத்தைப் பொறுத்து ஓரிடத்தில் தேங்கும் நீரினளவு அமையும். அதாவது பாலை நிலங்களில் ஆவியாகுதலதிகமாகும். விரைவாகவும் நிகழும், அதனால் தரையினுள் நீர் பொசிய வாய்ப்புக் குறைவு.

04. இயற்கையாக ஒரு பிரதேசத்தில் தாவரப் போர்வை இருக்கின்ற நிலத்தினுள், பொசியும் நீரினளவு அதிகமாகவிருக்கும்.

05.மண்ணினுள்ள நீரின் அளவினைப் பொறுத்து நீர் தொடர்ந்து ஊடுபரவும் தன்மையது. ஒரு பிரதேசத்து மண் போதியளவு நீரை உறிஞ்சிப் பூரிதமடைந்திருப்பின் மேலதிக நீரைப் பொசியவிடும் தன்மை குன்றும்.

06. நீரை உட்புகவிடும் பாறைப் படைகளின் இயல்பு தரைக்கீழ் நீரின் அளவினை நிர்ணயிக்கும் பாறைப்படைகளில் நுண்துளைகளும், வெடிப்புகளும் அமைந்திருக்கில் தரைமேல் நீரின் தரைக்கீழ் ஊடுபரவுதல் அதிகம் நிகழும்.

சுண்ணாம்புக் கற்பிரதேசங்களில் தரைக்கீழ் நீர் அதிகமாகக் காணப்படுவதற்கு முக்கிய காரணம், சுண்ணாம்புப் பாறைகளில் காணப்படும் நுண்துளைகளும் வெடிப்புக்களுமாகும். இந்த நுண்துளைகள், வெடிப்புகள் என்பவற்றினூடாக நீரானது கீழ் நோக்கிப் பொசிந்து நீரை உட்புக விடாப் பாறைப் படையை அடைந்ததும் தேங்குகின்றது. இதனை நீர்தாங்கு படுக்கை என்பர். பொதுவாக நீர்தாங்கு படுக்கைக்கு மேல் மூன்று வலயங்கள் காணப்படுகின்றன. அவை

(1) காற்றூட்டல் வலயம் (Aeration Zone)

(2) நிரம்புநீர்வலயம் (Saturation Zone)

(3) இடைவிட்ட நிரம்பு நீர் வலயம் (Intermittent Saturation Zone)

காற்றூட்டல் வலயம் என்பது வளி நிரம்பிய நுண்துளைகள், வெடிப்புகள் என்பவற்றைக் கொண்ட மேற்படையாகும். இது மேற்பரப்பு நீரைத் தரையின்கீழ் ஊடுபரவ விடும். ஒரு பிரதேசத்தில் தரைக்கீழ்நீர் எவ்வளவு உச்ச மட்டத்தில் தேங்கி நிற்குமோ அதுவே நிரம்பு நீர்வலயம் ஆகும். இதனை நீர்மட்டம் (Water Table) எனவும் கூறுவர்.

மேற்பரப்பிலுள்ள நீர்நிலைகளைப் போலல்லாது நிலக்கீழ் நீர் இரசாயனப் பதார்த்தங்களைப் பொறுத்தவரை மிகக் குறைவான சுத்திகரிப்புத் தன்மையையே கொண்டுள்ளது. திண்மப் பதார்த்தங்களையும் நுண்ணங்கிகளையும் மண் வடித்தெடுத்து கரைந்துவரும் இரசாயனப் பதார்த்தங்கள் நிலக் கீழ் நீரில் சேர்ந்து அந்நீருக்கே தனித்துவமான பண்புகளைக் கொடுக்கும்.

உதாரணமாக கல்சியம் காபனேற்றுக் கரைவதால் யாழ்.குடாநாட்டில் நீரும் கற்பிட்டி பகுதி நீரும் வன்மைத் தன்மையுடையதாகவுள்ளது. யாழ்.குடாநாட்டில் பெருமளவு செயற்கை உரம் உபயோகிக்கப்படுவதால் நிலக்கீழ் நீரில் நைத்திரேற்றுக்கள் அபாயகரமான அளவுக்குச் சேர்ந்து காணப்படுகின்றன.

இலங்கை மக்களது குடிநீர் தேவையையும் சிறியளவில் பயிர்ச்செய்கைக்கான நீர்த் தேவையையும் தரைக்கீழ் நீரே பூர்த்தி செய்துவருகின்றது. இலங்கையின் கரையோர அடையற் பாங்கான பிரதேசங்கள், புத்தளம், முல்லைத்தீவை இணைக்கும் கோட்டிற்கு வடபாகம், குறிப்பாக யாழ்ப்பாணக் குடாநாடு என்பன கிணறுகள், குழாய் கிணறுகள் ஆகியன மூலம் நீரைப் பெற்று வருகின்றது. யாழ்ப்பாணக் குடாநாட்டின் வாழ்வும் வளமும் தரைக்கீழ் நீரிலேயே தங்கியிருக்கின்றது.

யாழ்ப்பாணக் குடாநாட்டில் தரைக்கீழ் நீர்கிணறுகள் மூலமும் புத்தளம், மன்னார், முழங்காவில் ஆகிய கரையோரப் பகுதிகளில் குழாய்க் கிணறுகள் மூலமும் நீர் பெறப்படுகின்றது.


அதிகரிப்பும் அதிக நீர்த்தேவையை ஏற்படுத்திவிட்டது. கூடுதலாக நீர் இறைக்கப்படுவதால் உவர்நீர் உட்புகுதல் பல விடயங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

கரையோரக் கிணறுகள், தீவுப்பகுதிக் கிணறுகள் பலவும் ஏற்கனவே உருவாகிவிட்டன. இன்று யாழ்ப்பாணக் கழிப்பிடங்கள் நீரடைப்பு மலசலகூடங்களாக மாறிவிட்டன. அதனால் கிணறுகளுக்கருகே மலக்குழிகள் அமைந்து வருகின்றன. நகர்ப்புறங்களில் இது அதிகம், அதனால் கிணற்று நீர் மாசடைந்து வருவது அண்மைக் காலங்களில் அவதானிக்கப்பட்டுள்ளது.

அத்துடன் விவசாய, கைத்தொழில் நடவடிக்கைகளாலும் இலங்கையின் தரைக்கீழ் நீரானது அண்மைக் காலமாக பாரிய பிரச்சினைகளை எதிர்நோக்கியுள்ளது. கற்பிட்டிப் பகுதிகளில் கிணறுகளில் நைதரசனின் அளவு 44 மி.கிராம். அதேபோன்று இலங்கையின் வடமத்திய, வடமேல் உலர் வலயங்களில் விவசாயக் கிணறுகள் அதிகளவு தோண்டப்பட்டு தொடர்ச்சியாக பாவனைக்கு உள்ளாக்குவதால் நீர்நிலைகள் வற்றிச் செல்கின்றன.

அதேபோல கொழும்பு, யாழ்ப்பாணம், குருநாகல் போன்ற நகரங்களில் இடம்பெற்று வருகின்றன நகராக்கம், தரைக்கீழ் நீரின் தரத்தைப் பாதித்து வருகின்றது. அண்மைக் காலங்களில் சுனாமி போன்ற இயற்கை அனர்த்தங்களும் இவற்றில் கணிசமானளவு பங்களிப்பினை வகித்து வருகின்றது.

மாசடைந்த ஆறு ஒன்றினை 20 நாட்களின் பின்பு மீள்பாவனைக்கு உட்படுத்தலாம். ஆனால் மாசடைந்த தரைக்கீழ் நீரினை மீள்பாவனைக்கு உட்படுத்த, 1400 வருடங்கள் செல்லும் என ஆராய்ச்சியாளர்கள் கூறுகின்றனர். எனவே மாசடைந்துவரும் தரைக்கீழ் நீரானது தொடர்ந்து மாசுபடுத்தப்படுமானால் நீர்வளத்திற்கு தட்டுப்பாடு ஏற்படலாம். இதனால் இவற்றை தடுத்து நிறுத்துவதற்கு உரிய சட்டங்களையும் இயற்றுவதோடு அதனைப் பாதுகாக்க நடவடிக்கை எடுக்க வேண்டியதும் நம் எல்லோரதும் முக்கிய கடமையாக உள்ளது.



துலாக்கிணறு

யாழ்ப்பாணக் குடாநாட்டின் தரைக்கீழ் நீர் பின்வரும் சூழல் பிரச்சினைகளை இன்று பிரதிபலிக்கின்றது.

01. நன்னீர் வளம் குறைதல்

02. நன்னீர் உவராதல்

03. நன்னீர் மாசடைதல்

இன்று வீட்டுக்கு வீடு , தோட்டத்திற்கு தோட்டம் கிணறுகள் உள்ளன. துலாக்களுக்குப் பதிலாக நீரிறைக்கும் இயந்திரங்கள் பயன்படுத்தப்படுகின்றன. அதனால் கூடுதலான தரைக்கீழ் நீர் மேல்எடுக்கப்பட்டு பயன்படுத்தப்படுகின்றது. சனத்தொகை

**நன்றி: இணையம்.**

# அசாஞ்சை கைது செய்வது தற்கொலைக்கு சமமாகும்

### ஈக்வடார் ஜனாதிபதி


விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ்சை கைது செய்யும் நோக்குடன் ஈக்வடார் தூதரகத்தில் லண்டன் பொலிசார் நுழைய முயன்றால் அது தற்கொலைக்கு சமமாகும் என ஈக்வடார் ஜனாதிபதி தெரிவித்துள்ளார்.

விக்கிலீக்ஸ் நிறுவனர் ஜூலியன் அசாஞ் இரண்டு பெண்களை கற்பழித்தது தொடர்பாக சுவீடன் அரசு, இவர் மீது வழக்கு தொடர்ந்தது.

இதனையடுத்து பிரிட்டனில் தஞ்சம் புகுந்த அவர், சுவீடன் கோரிக்கையின் படி கைது செய்யப்பட்டார். இதன் பின் லண்டன் நீதிமன்றம் ஜாமீன் வழங்கியது.

இதற்கிடையே தங்கள் நாட்டிடம் ஒப்படைக்கும்படி, சுவீடன் கோரியது. இதை எதிர்த்து அசாஞ் மனுத் தாக்கல் செய்திருந்தார்.

இந்த மனுவை விசாரித்த உச்சநீதிமன்றம் அசாஞ்சை சுவீடனிடம் ஒப்படைக்கும்படி உத்தரவிட்டது.



இந்த உத் தரவை எதிர்த்து அசாஞ் மேல்முறையீடு செய்தார்.

ஆனால் இவரது மனுவை கோர்ட் நீதிமன்றம் தள்ளுபடி செய்து விட்டது. இதையடுத்து அசாஞ்சை கைது செய்து சுவீடனிடம் ஒப்படைக்கும் நிலை ஏற்பட்டுள்ளது. இதை தவிர்ப்பதற்காக அசாஞ் லண்டனில் உள்ள ஈக்வடார் நாட்டுத் தூதரகத்தில் கடந்த 19ஆம் திகதி தஞ்சம் புகுந்தார்.

அசாஞ்சுக்கு தஞ்சம் அளிக்க ஈக்வடார் ஜனாதிபதி ரபேல் கொரியா ஒப்புதல் அளித்துள்ளார். ஈக்வடார் ஜனாதிபதி ஒப்புதல் அளித்தாலும் லண்டனில் உள்ள ஈக்வடார் தூதரகத்தை விட்டு அசாஞ் வெளியே வரும் போது அவர் கைது செய்யப்பட உள்ளார்.

இது குறித்து ஈக்வடார் ஜனாதிபதி ரபேல் கொரியா குறிப்பிடுகையில், கைது செய்யாமல் பாதுகாப்பாக வெளியேற்றும் காலம் வரை, அசாஞ் தொடர்ந்து தூதரகத்தில் தங்கியிருக்கலாம்.

அசாஞ்சை கைது செய்யும் நோக்கோடு, தூதரகத்துக் குள் லண்டன் பொலிசார் நுழைந தால் அது தற்கொலைக்கு ஒப்பா கும் என்றார்.

# உலக பார்வை

## குழந்தையை தனியாக தவிக்கவிட்டு மது அருந்தி உல்லாசமாக இருந்த தாய்

வீட்டில் ஒரு வாரம் குழந்தையை தனியாக விட்டு விட்டு, தோழிகளுடன் சேர்ந்து மது அருந்தி ஆனந்தமாக இருந்த இளம் தாய் ஒருவருக்கு 15 மாதம் சிறைத் தண்டனை விதிக்கப்பட்டுள்ளது.

இங்கிலாந்தில் உள்ள பிரெகன் நகரைச் சேர்ந்தவர் டாலி. 20 வயதேயான அவர் திருமணமாகாமலேயே பெண் குழந்தைக்கு தாயாகியுள்ளார்.

இந்நிலையில் அவர் தனது 15 மாத குழந்தையை சுமார் ஒரு வார காலமாக வீட்டில் தனியாக விட்டுவிட்டு தனது தோழிகள் வீட்டுக்கு சென்று மது அருந்தி ஆனந்தமாக இருந்துள்ளார்.

அந்த ஒரு வாரமும் அவர் ஒரு முறை மட்டும் வீட்டுக்கு வந்து குழந்தைக்கு உணவு கொடுத்து விட்டு அதை இருட்டான அறையில் விட்டுவிட்டு சென்றுள்ளார்.

இங்கிலாந்தின் நடுக்கும் குளிரில் அந்த குழந்தை இருந்த அறையில் ஹீட்டர் கூட இயங்கவில்லை. இருட்டில் இருந்த குழந்தை அழும் சத்தம் கேட்டு அக்கம் பக்கத்தினர் பொலிசாருக்கு தகவல் கொடுத்தனர்.

பொலிசார் வந்து வீட்டுக்குள் புகுந்தபோது வீடு முழுவதும் அழுக்குத் துணி, காலி பீர் பாட்டில்கள், அழுக்கான டயப்பர்கள் ஆங்காங்கே கிடந்துள்ளது.பின்னர் பொலிசார் குழந்தையை மீட்டு, சாப்பாடு கொடுத்துள்ளனர், குழந்தையின் தாய் டாலியை கைது செய்தனர்.

நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தப்பட்ட அவருக்கு குழந்தையை கவனிக்காத குற்றத்திற்காக 15 மாத சிறை தண்டனை விதிக்கப்பட்டது.



ஈரானில் தயாரிக்கப்பட்ட நவீன ஆயுதங்களை பார்வையிடும் அந்நாட்டு அதிபர் முகமது அகமதிநிஜாத்மற்றும் பாதுகாப்பு அமைச்சர் அகமது வகிதி.

# பின்லேடனை கொலை செய்யும் திட்டத்தை நிராகரித்த ஒபாமா



ஒசாமா பின்லேடனை பலமுறை கொல்ல திட்டம் தீட்டப்பட்டு, அமெரிக்கா ஜனாதிபதி ஒபாமா நிராகரித்திருப்பது தற்போது தெரிய வந்துள்ளது.

சர்வதேச பயங்கரவாத இயக்கத்தின் தலைவரான ஒசாமா பின்லேடனை அமெரிக்கா பல ஆண்டுகளாக தேடி வந்தது.

இறுதியாக பாகிஸ்தானில் அபோதாபாத் நகரில் உள்ள பங்களாவில் அவர் தங்கியிருப்பதை கண்டுபிடித்து, அதிரடிப்படையினர் மூலம் கடந்தாண்டு மே மாதம் சுட்டுக் கொன்றது.

ஆனால் ஜனாதிபதியாக ஒபாமா பதவி ஏற்றது முதலே பலமுறை திட்டம் தீட்டப்பட்டு அவை கைவிடப்பட்டு இருக்கின்றன என்பது தற்போது தெரியவந்துள்ளது.

இதுகுறித்து அமெரிக்காவில் நேற்று வெளியிடப்பட்ட புதிய புத்தகத்தில் ரிஷி மினிடெர் என்பவர் குறிப்பிட்டுள்ளார்.

மேலும் அதில், பின்லேடனை கொல்லும் நடவடிக்கை எடுக்க கடந்தாண்டு ஜனவரி, பெப்ரவரி, மார்ச் ஆகிய மாதங்களில் திட்டமிடப்பட்டு அவற்றை ஒபாமா நிராகரித்து விட்டார்.

சிறிய விவகாரங்களில் தன்னை ஈடுபடுத்த அவர் விரும்பாமல் இருந்தார். எனவே இந்த பொறுப்பை உளவுப்படை டைரக்டர் லியான் பெனட்டா, இராணுவ மந்திரி ராபர்ட் கேட்ஸ், வெளிவிவகாரத்துறை அமைச்சர் ஹிலாரி கிளிண்டன் ஆகியோர் முடிவுக்கே விட்டு விட்டார் என்று கூறப்பட்டுள்ளது.

## ருவிற்றரின் உதவியால் மீட்கப்பட்ட குழந்தை

ஐக்கிய அரபு எமிரேட்டில் காருடன் கடத்தப்பட்ட ஒரு மாத குழந்தை டுவிட்டரின் உதவியால் மீட்கப்பட்டது.

ஐக்கிய அரபு எமிரேட்டின் துபாய் நகர் அருகே உள்ள ஷாப்பிங் சென்டருக்கு, ஒரு மாத குழந்தையுடன் கடந்த 18ஆம் திகதி தம்பதி ஒருவர் சென்றுள்ளனர்.

குழந்தையை காரிலேயே வைத்து விட்டு உள்ளே சென்றனர். காரை ஆப் செய்யாமல் அப்படியே விட்டிருந்தனர்.

வெளியில் வந்து பார்த்த போது காரை காணவில்லை. அதிர்ச்சி அடைந்த தம்பதி பொலிசில் புகார் செய்தனர். அவர்களும் உடனடியாக காரை பற்றி தகவல்களை டுவிட்டரில் வெளியிட்டனர்.

அந்த தகவலை பார்த்து ஏராளமானோர் டுவிட்டரில் தகவல் பரப்பினர். இந்நிலையில் ஷார்ஜாவில் வசிக்கும் ஒருவர், திருடப்பட்ட காரை பார்த்து பொலிசுக்கு தகவல் தெரிவித்தார்.

ஷாப்பிங் சென்டரில் இருந்து சில கிலோ மீட்டர் தூரத்தில் அனாதையாக விடப்பட்டிருந்த காரை பொலிசார் கண்டுபிடித்தனர். அதற்குள் குழந்தை பத்திரமாக இருந்தது. எனினும் மருத்துவமனையில் பரிசோதனை செய்து குழந்தை உடல் நலமுடன் இருப்பதை உறுதி செய்தனர்.

அதன்பின் பெற்றோரிடம் குழந்தை ஒப்படைக்கப்பட்டது. குழந்தையை மீட்க 7 மணி நேரமானது. டுவிட்டரின் வசதியால் குழந்தை மீட்கப்பட்டது என்று பொலிசார் மகிழ்ச்சியுடன் தெரிவித்தனர்.


# அமெரிக்காவுக்கு எச்சரிக்கை விடுத்துள்ள ரஷ்யா

சிரியாவில் பேராட்டக்காரர்களுக்கு எதிராக இரசாயன ஆயுதங்களை பயன்படுத்தக்கூடாது, மீறினால் தாக்குதல் நடத்தப்படும் என அமெரிக்கா எச்சரித்துள்ளது.

சிரியாவில் நடைபெறும் உள்நாட்டு கலவரத்தில் இதுவரை 18,000 பேர் இறந்துள்ளதாக ஐ.நா சபை குற்றம் சுமத்தி உள்ளது.

இந்நிலையில் நேற்று ரஷ்ய தலைநகர் மாஸ்கோவில் அந்நாட்டின் வெளிவிவகாரத்துறை அமைச்சர் செர்ஜி லாவ்ரோவ்வை சீனாவின் மூத்த பிரதிநிதி தாய் பின்க்கூ சந்தித்து சிரியாப் பிரச்னை குறித்து பேச்சுவார்த்தை நடத்தினார்.

அதன் பிறகு செர்ஜி லாவ்ரோவ் கூறுகையில், ஒரு நாடு தனது நாட்டு எல்லைதாண்டி, அடுத்த



நாட்டுப் பிரச்னையில் தலையிடகூடாது.

பன்னாட்டு சட்டத்தை கண்டிப்பாக மதித்து நடக்க வேண்டும். அப்படி மீறி தாக்குதல் நடத்தினால் அதை பார்த்துக் கொண்டு சும்மா இருக்க முடியாது.

ஒரு நாடு மக்களுக்கு எதிராக குண்டுகளால் தாக்குதல் நடத்திஎனால் அதை தடுக்க ஐ.நா பாதுகாப்பு சபைக்கு அதிகாரம் உள்ளது. அதை விட்டு அமெரிக்கா அங்கு தாக்குதல் நடத்தி ஜனநாயகத்தை கொண்டு வர நினைக்கும் போக்கை கைவிட வேண்டும்.

சிரியாவின் உள்நாட்டு பிரச்னையில் அந்நாட்டு பிரதிநிதிகள் தங்களுக்குள் அரசியல் ரீதியிலான பேச்சுவார்த்தை நடத்தி, ஒரு தீர்வுக்கு வர அந்நாட்டின் துணை பிரதமர் கத்ரி ஜமிளுடன் பேசியுள்ளேன்.

உள்நாட்டுப் பிரச்னையான இதில் வெளிநாட்டு தலையீடு ஒரு இடையூறாக இருக்கும் என்று அப்போது சிரியாப் பிரதமர் என்னிடம் கூறினார் என்று தெரிவித்தார்.

ரஷ்யாவும், சீனாவும் சிரியாவுக்கு ஆதராவாக பேசி வரும் நிலையில் அமெரிக்கா அங்கு தாக்குதல் நடத்துவோம் என்று கூறியிருப்பது பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

## ஹரியை சூழ்ந்த பெண்கள்

லொஸ் வேகாஸுக்கு ஓய்வு எடுக்கச் சென்ற இங்கி லாந்து இளவரசர் ஹாரியை இளம் பெண்கள் சூழ்ந்துக் கொண்டனர். லண்டன் ஒலிம்பிக் போட்டிகளில் கலந்து கொண்ட இங்கிலாந்து அணியின் அம்பாசடராக இருந்த இளவரசர் ஹரி ஓய்வு எடுப்பதற்காக அமெரிக்கா சென்றுள்ளார்.

அவர் லாஸ் வேகாஸில் உள்ள என்கோர் பீச் கிளப்புக்கு சென்றது குறித்த தகவல் காட்டுத்தீ போன்று பரவிவிட்டது. முன்னதாக அவர் எம்ஜிஎம் கிராண்ட் ஓட்டலின் வெட் ரிபப்ளிக் என்னும் பார்ட்டிக்கு சென்றார். அங்கு சிவப்பு நிற ஷார்ட்ஸ் அணிந்திருந்த ஹாரியை பிகினி அணிந்த பெண்கள் சூழ்ந்து கொண்டனர். எம்ஜிஎம் கிராண்ட ஓட்டல் வெட் ரிபப்பளிக் என்ற பெயரில் வாரத்தில் 4 முறை தண்ணீர் பார்ட்டி கொடுக்கும். 2 நீச்சல் குளங்கள் அமைந்துள்ள இடத்தில் நடக்கும் இந்த பார்ட்டிக்கு 1,600 பேர் வரை வருவார்கள். அத்தகைய பார்ட்டிக்கு தான் ஹரி சென்றுள்ளார். அவருடன் இரண்டு பாதுகாவலர்கள் சென்றிருந்த போதிலும் அவர்களையும் தாண்டி பெண்கள் ஹரியை சந்தித்து பேசி மகிழ்ந்தனர்.

# செவ்வாய்க்கு மீண்டும் விண்கலம் அனுப்பும் முயற்சியில் நாசா

செவ்வாய் கிரகத்தை ஆராய மீண்டும் விண்கலம் அனுப்ப அமெரிக்க விண்வெளி ஆய்வு மையம் நாசா முடிவு செய்துள்ளது.


முன்னதாக கடந்தாண்டு செவ்வாய் கிரகத்தை ஆய்வு செய்ய கியூரியாசிட்டி ரோவரை அமெரிக்கா அனுப்பியது.

அத்திட்டம் வெற்றிகரமாக அமைந்ததையடுத்து, இன்சைட் என்ற அடுத்த திட்டத்தை அமெரிக்கா அறிவித்துள்ளது. செவ்வாயின் மேற்பரப்பு குறித்தும், அதன் தள அமைப்பு பூமியைப் போல தகடுகளால் அமையாதது ஏன் என்பது குறித்து ஆய்வு மேற் கொள்ளப்பட இருக்கிறது.

இதன் மூலம் பூமிக்கு அடியில் எப்படி புவித் தகடுகள் அமைந்தன என்பதையும் கூடத் தெரிந்து கொள்ள முடியும். செவ்வாய் கிரகம் பற்றி இதுவரை நமக்குத் தெரியாத பல வி'யங்களை இன்சைட் திட்டம் தெளிவுபடுத்தும் என்றும் நாசா விஞ்ஞானிகள் கூறியுள்ளனர்.

# இந்திய செய்திகள்

# வல்லரசு நாடுகளிடமிருந்து மிரட்டல்கள் வருவது தடுக்கப்பட்டுள்ளது



சிவசங்கர் மேனன்

இந்தியா அணு ஆயுத நாடாக மாறியதால் மற்ற நாடுகளில் இருந்து நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்தல்கள் வருவது தடுக்கப்பட்டுள்ளது என தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் கூறியுள்ளார்.

டெல்லியில் நடந்த தேசிய அணு ஆயுத குறைப்பு தொடர்பான மாநாட்டில் தேசிய பாதுகாப்பு ஆலோசகர் சிவசங்கர் மேனன் பேசுகையில், முன்பெல்லாம் உலகில் வல்லரசாக உள்ள சில நாடுகள் நமக்கு நேரடியாகவும், மறைமுகமாகவும் அச்சுறுத்தல்களை விடுத்தன.

நம்மை மிரட்ட முயற்சித்தன. தைரியமான தலைவர்கள் இருந்ததால், அவர்களின் முயற்சி பலிக்கவில்லை. கடந்த 1998ஆம் ஆண்டில் இந்தியா அணு ஆயுத நாடாக அறிவிக்கப்பட்டது. அப்போதிருந்து வல்லரசுகளிடம் இருந்து நமக்கு மிரட்டல் வருவது நின்று போனது.

அணு ஆயுதங்கள் நாட்டின் பாதுகாப்புக்கு மிக முக்கிய பங்காற்றுகின்றன. அணு ஆயுதங்களை போர்க்களத்தில் பயன்படுத்த மாட்டோம் என தொடக்கம் முதலே இந்தியா வலியுறுத்தி வருகிறது.

ஆனால் ஒரு சில நாடுகள் போருக்கு பயன்படுத்துவதற்காக அணு ஆயுதங்களை தயாரிக்கின்றன. அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்பதே, இந்தியாவின் நிலை.

சமீபகாலமாக பெரும்பாலான நாடுகளும், மக்களும் அணு ஆயுதம் இல்லாத உலகை உருவாக்க வேண்டும் என்ற வாதத்துக்கு ஆதரவு தெரிவிக்க தொடங்கியுள்ளனர். இதற்கு முன் இந்த அளவுக்கு ஆதரவு எழுந்தது இல்லை.

உலகில் அணு ஆயுதத்தை முற்றிலும் ஒழிக்க வேண்டும் என்பதை இந்தியா ஆதரிக்கிறது. இதற்கு சர்வதேச அளவில் ஒருமித்த கருத்தை உருவாக்க வேண்டும்.

அதேநேரத்தில் நாட்டு மக்களை வெளியில் இருந்து வரும் அச்சுறுத்தல்களில் இருந்து, பாதுகாக்க வேண்டிய பொறுப்பும், அரசுக்கு உள்ளது.

அணு ஆயுத அச்சுறுத்தலில் இருந்து மக்களை பாதுகாப்பதற்காக அணு ஆயுதத்தை வைத்திருக்க வேண்டியுள்ளது என்று தெரிவித்தார்.

# அமெரிக்கா, சவுதி அரேபியாவிடம் உதவி கோரிய இந்தியா

வடகிழக்கு மாநிலத்தவர் மத்தியில் பீதியை உண்டாக்கும் வகையில், இணையத்தளங்களில் வதந்தியை பரப்பியவர்களை கண்டறிவதற்காக அமெரிக்கா, சவுதி அரேபியா ஆகிய நாடுகளிடம் மத்திய அரசு உதவி கோரியுள்ளது.

பீதியை ஏற்படுத்திய சில சமூக வலை தளங்கள், இணையத்தளங்கள் ஆகியவற்றின் சேர்வர்கள் அமெரிக்காவை மையமாக வைத்து செயல்படுகின்றன.

எனவே வதந்தியை பரப்பியவர்களின் ஐ.பி.முகவரியையும், அது தொடர்பான தொழில்நுட்ப விவரங்களையும் கண்டுபிடிக்க உதவும்படி அமெரிக்காவுக்கு நீதிமன்றம் மூலமாக மத்திய அரசு கடிதம் அனுப்பியுள்ளது.

அதே போன்று சவுதி அரேபியாவை மையமாகக் கொண்டு செயல்படும் சில இணையத்தளங்களிலும், இதுபோன்ற வதந்திகள் பரப்பப்பட்டதால் சவுதி அரசிடமும் உதவி கோரப்பட்டுள்ளது.

இதற்கிடையே பாகிஸ்தானைச் சேர்ந்த இரண்டு அரசியல் கட்சிகள், ஒரு தனியார் தொலைக்காட்சி சேனல் ஆகியவற்றுக்கும் வதந்தி பரப்பிய விடயத்தில் தொடர்பு இருப்பதாகவும் தற்போது தெரியவந்துள்ளது.

இதையடுத்து வதந்தி பரவுவதற்கு காரணமாக இருந்த, 310 இணையத்தளங்களை மத்திய அரசு இதுவரை முடக்கியுள்ளது குறிப்பிடத்தக்கது.

# நாகர்கோவில் சந்தையில் பயங்கர தீ விபத்து: 50 கடைகள் எரிந்து நாசம்



தமிழ் நாட்டில் நாகர்கோவிலில் உள்ள வடசேரி சந்தையில் ஏற்பட்ட தீ விபத்தில் 50 கடைகள் எரிந்து சாம்பல் ஆனது.

அதிகாலை 4 மணி வரை போராடி தீ அணைக்கப்பட்டது. நாகர்கோவில் வடசேரியில் பிரசித்தி பெற்ற கனகமூலம் சந்தை உள்ளது. இதில் 150க்கும் அதிகமான கடைகள் உள்ளன.

காய்கறிகள், பழங்கள் உள்பட பல்வேறு பொருட்கள் விற்பனை செய்யப்படுகின்றன. இந்த சந்தைக்கு குமரி மாவட்டத்தில் பல்வேறு பகுதிகளில் இருந்தும், கேரளாவில் இருந்தும் ஏராளமான வியாபாரிகள் மற்றும் பொதுமக்கள் வந்து செல்கிறார்கள்.

அதிகாலை 4 மணியில் இருந்து இரவு 11 மணி வரை வியாபாரம் விறுவிறுப்பாக நடைபெறும்.

இந்த நிலையில் நேற்று இரவு 11 மணியளவில் திடீரென வடசேரி சந்தையின் மேல் தள பகுதிகளில் உள்ள கடைகளில் தீப்பிடித்தது. தகவலறிந்து தீயணைப்பு படை வீரர்கள் விரைந்து வந்தனர்.

இதற்கிடையே காற்று வேகமாக வீசியதாலும், பல கடைகள் முன் பெருமளவு குப்பைகள் தேங்கி கிடந்தாலும் மளமளவென தீ பரவியது. சந்தையை நெருங்க முடியாத அளவுக்கு தீயின் தாக்கம் இருந்தது.

அதிகாலை 4 மணி வரை போராடி தீ முழுவதும் அணைக்கப்பட்டது. இந்த தீ விபத்தில் மொத்தம் 50 கடைகள் வரை எரிந்து சாம்பலாகின. ஒரு சில கடைகளில் பொருட்கள் மட்டுமின்றி பணமும் எரிந்து விட்டதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

ரூ.50 லட்சத்துக்கு மேல் சேதம் ஏற்பட்டிருக்கலாம் என்று கூறப்படுகிறது. விபத்து நடந்த இடத்தை, எஸ்.பி.பிரவேஷ்குமார், நாஞ்சில் முருகேசன் எம்.எல்.ஏ, நகராட்சி தலைவர் மீனாதேவ் பார்வையிட்டனர். தீ விபத்துக்கான காரணம் குறித்து பொலிசார் விசாரணை நடத்தி வருகிறார்கள்.

ஏற்கனவே சில ஆண்டுகளுக்கு முன் வடசேரி சந்தையில் தீ விபத்து ஏற்பட்டு 6 பேர் இறந்தனர் என்பது குறிப்பிடத்தக்கது.



கலவரத்தால் பாதிக்கப்பட்ட அசாமில், திரிணாமூல் காங்கிரஸ் மாணவ அமைப்பின் சார்பில் நடந்த அமைதி ஊர்வலத்தின் போது, சமாதானத்தை வலியுறுத்தி, வாகனங்களில் வந்தவர்களுக்கு வெள்ளைரோஜா கொடுத்தனர்.

# நித்தியானந்தா சீடர்களை விரட்டியடித்த மதுரை ஆதீனம்



மதுரை ஆதீன மடத்தில், இதுரை சாதுவாக இருந்து வந்த மதுரை ஆதீனகர்த்தர் அருணகிரிநாதர் மிகவும் கோபமடைந்து விட்டதாகக் கூறப்படுகிறது.

அவரது உத்தரவுப்படி ஆதீன மடத்தில் தங்கியிருந்த நித்தியானந்தாவின் 2 தீவிர ஆதரவாளர்கள் மடத்தை விட்டு வெளியே விரட்டியடிக்கப்பட்டுள்ளனர்.

மதுரை ஆதீன மடத்தின் அடுத்த வாரிசாக நித்தியானந்தாவை மதுரை ஆதீனகர்த்தர் அருணகிரிநாதர் அறிவித்தது முதலே பெரும் பஞ்சாயத்தாக இருந்து வருகிறது.

அடுத்தடுத்து நித்தியானந்தா சர்ச்சையிலும், வழக்குகளிலும் சிக்க அருணகிரிநாதர் கையைப் பிசைந்தபடிதான் உள்ளார். இருப்பினும் எந்த முடிவையும் எடுக்க முடியாத நிலையில்தான் அவரும் உள்ளார்.

இந்த நிலையில் நித்தியானந்தாவின் ஆதரவாளர்கள் என்ற பெயரில் மதுரை ஆதீன மடத்தில் தங்கியிருப்போர் செய்யும் செயல்களால் சமீப காலமாக ஆதீனகர்த்தர் கடும் கோபமடைந்து வந்ததாக செய்திகள் தெரிவித்தன.

குறிப்பாக முந்தைய ஆதீனங்கள், தற்போதைய ஆதீனத்தின் தந்தை உள்ளிட்டோரின் பெரிய பெரிய போட்டோக்களை தூக்கி விட்டு நித்தியானந்தாவின் படங்களை அவரது ஆதரவாள கள்மாட்டி வைத்ததால்தான் பெரும் பிரச்சினைக்கு காரணம்.

இந்த நிலையில் திடீரென புதிய திருப்பமாக நித்தியானந்தாவின் இரண்டு முக்கிய ஆதரவாளர்களை மடத்தை விட்டு விரட்டியடித்துள்ளார் மதுரை ஆதீனம். அவர்களது பெயர்கள் சொ'ரூபானந்தா மற்றும் பாண்டிச் செல்வம்.

இவர்களில் சொரூபானந்தா ரொம்ப நாட்களாக நித்தியானந்தா கூடவே இருப்பவர். அதேசமயம், பாண்டிச்செல்வம் இடையில் சேர்ந்தவர் என்று தெரிகிறது. நித்தியானந்தாவின் பி.ஆர்.ஓ போல இவர் செயல்பட்டு வந்தார்.

இந்த இரண்டு பேரையும் ஏன் மதுரை ஆதீனம் மடத்தை விட்டு விரட்டியடித்தார் என்பது தெரியவில்லை. ஆனால் உள்ளுக்குள் ஏதோ பெரிய அளவில் கலவரம் நடந்து விட்டதாகவே கருதப்படுகிறது.

தற்போது மதுரையில் இல்லை நித்தியானந்தா, கொடைக்கானலில் இருக்கின்றார்.

ஒருவேளை அவர் மதுரைக்குத் திரும்பியதும் சொரூபாவும், பாண்டியம் மறு படியும் மடத்துக்குள் வந்தாலும் வந்து விடலாம் என ஆதினத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

# டுவிட்டர் இணையத்தளம் மீது சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும்: மத்திய அரசு




வடகிழக்கு மாநிலத்தவருக்கு இணையதளம் மற்றும் செல்போன் வாயிலாக மிரட்டல் விடுத்தது தொடர்பாக பேஸ்புக், யூடியூப் ஆகிய சமூக வலைதள நிறுவனங்களிடம் மத்திய அரசு விசாரணை நடத்தி வருகிறது. விசாரணைக்கு ஒத்துழைக்காத டுவிட்டர் இணையதளம் மீது சட்டரீதியாக நடவடிக்கை எடுக்கப்படும் என எச்சரிக்கை விடப்பட்டுள்ளது.

அசாமில் போடோ இனத்தவருக்கும் முஸ்லிம்களுக்கும் இடையே கடந்த மாதம் மோதல் வெடித்தது. இது பெரும் கலவரமாக மாறியது.

ஒரு வாரம் நீடித்த இந்த கலவரத்தில் 78 பேர் கொல்லப்பட்டனர். இலட்சக்கணக்கானோர் வீடுகளை விட்டு வெளியேறி நிவாரண முகாம்களில் தஞ்சம் புகுந்தனர்.

இந்நிலையில் கடந்த வாரம் பெங்களூர், புனே, ஐதரா பாத், சென்னை, மும்பை ஆகிய நகரங்களில் இருந்து ஆயிரக்கணக்கான வடகிழக்கு மாநிலத்தவர் வெளியேற தொடங்கினர்.

இமெயில் மற்றும் செல்போனில் அவர்களுக்கு மிரட்டல் செய்தி வந்ததே இதற்கு காரணம் என்பது கண்டுபிடிக்கப்பட்டது. இந்த செய்திகள் பாகிஸ்தானில் இருந்து அனுப்பப்பட்டிருப்பதை உள்துறை அமைச்சகம் கண்டுபிடித்துள்ளது.

பேஸ்புக், யூ டியூப் போன்ற சமூக வலை தளங்கள் இதனை உறுதி செய்துள்ளன. ஆதாரங்கள் கொடுத்தால் நடவடிக்கை எடுப்பதாக பாகிஸ்தான் அரசு கூறியதை தொடர்ந்து ஆதாரங்கள் திரட்டும் பணி தற்போது நடைபெற்று வருகிறது. யூ டியூப் மற்றும் பேஸ் புக் நிறுவனங்கள் மத்திய அரசுக்கு முழு ஒத்துழைப்பு அளித்து வருவதாக தொலை தொடர்பு துறை செயலாளர் ஆர்.சந்திரசேகர் தெரிவித்துள்ளார். இது வரை 250க்கும் அதிகமான வலை தளங்கள் முடக்கப்பட்டுள்ளன.

டுவிட்டர் வலை தளம் விசாரணைக்கு ஒத்துழைக்க மறுத்து வருகிறது. டுவிட்டர் உள்பட விசாரணைக்கு ஒத்துழைக்க மறுக்கும் அனைத்து வலை தளங்கள் மீதும் சட்டப்படி நடவடிக்கை எடுக்கப்படும் என சந்திரசேகர் தெரிவித்துள்ளார். முதல் கட்ட விசாரணை அறிக்கை பாகிஸ்தான் அரசிடம் சமர்ப்பி க்கப்படும் என உள்துறை அமைச்சக வட்டாரங்கள் தெரிவித்தன.

# எஸ்.எல்.பி.எல். ருவென்ரி-20 தொடர்: றுகுணவை வென்றது ஊவா நெக்ஸ்ட்

ஸ்ரீலங்கா பிறீமியர் லீக் தொடரின் போட்டி ஒன்றில் ஊவா நெக்ஸ்ட் அணி வெற்றிபெற்றுள்ளது. றுகுண ரோயல்ஸ் அணிக்கெதிரான இப்போட்டியில் ஊவா நெக்ஸ்ட் அணி 14 ஓட்டங்களால் வெற்றிபெற்றது.

கண்டி பல்லேகல கிரிக்கெட் மைதானத்தில் இடம்பெற்ற இப்போட்டியில் நாணயச்சுழற்சியில் வெற்றிபெற்ற ஊவா நெக்ட்ஸ் அணி முதலில் துடுப்பெடுத்தாடத் தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய ஊவா நெக்ஸ்ட் அணி 20 ஓவர்களில் 6 விக்கெட்டுக்களை இழந்து 155 ஓட்டங்களைப் பெற்றது. சிறப்பான ஆரம்பத்தைப் பெற்றுக் கொள்ளாத ஊவா நெக்ஸ்ட் அணி 8.2 ஓவர்களில் 2 விக்கெட்டுக்களை இழந்து 42 ஓட்டங்களைப் பெற்றிருந்தது. எனினும் தொடர்ந்து வந்த வீரர்கள் சிறப்பாக ஆட ஓரளவு போட்டித்தன்மையான ஓட்ட எண்ணிக்கையைப் பெற்றுக் கொண்டது.

துடுப்பாட்டத்தில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக உபுல் தரங்க 40 பந்துகளில் 48 ஓட்டங்களையும், அன்ட்ரூ மக்டொனால்ட் 14 பந்துகளில் 28 ஓட்டங்களையும், சொய்ப் மலிக் 20 பந்துகளில் 27 ஓட்டங்களையும் பெற்றனர்.

பந்துவீச்சில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக வகாப் றியாஸ் 4 ஓவர்களில் 34 ஓட்டங்களுக்கு 3 விக்கெட்டுக்களையும், தரங்க லக்ஷித்த 4 ஓவர்களில் 40 ஓட்டங்களுக்கு இரண்டு விக்கெட்டையும், ரமித் ரம்புக்வெல்ல 4 ஓவர்களில் 23 ஓட்டங்களுக்கு ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.


156 ஓட்டங்களை வெற்றி இலக்காகக் கொண்டு களமிறங்கிய றுகுண ரோயல்ஸ் அணி 20 ஓவர்களில் 9 விக்கெட்டுக்களை இழந்து 141 ஓட்டங்களைப் பெற்று 14 ஓட் டங்களால் தோல்வியடைந்தது. சீரான இடைவேளைகளில் விக் கெட்டுக்களைத் தொடந்து இழந்த ஊவா நெக்ஸ்ட் அணி இறுதி நேரத்தில் வகாப் றியாஸின் சிறப்பான துடுப்பாட்டத்தின் காரணமாக நம்பிக்கை பெற்ற போதிலும் வெற்றிபெற முடியவில்லை.

துடுப்பாட்டத்தில் றுகுண ரோயல்ஸ் அணி சார்பாக வகாப் றியாஸ் 18 பந்துகளில் ஆட்டமிழக்காமல் 31 ஓட்டங்களையும், சாமர சில்வா 22 பந்துகளில் 23 ஓட்டங்களையும் பெற்றதோடு, உதிரிகளாக அவ்வணிக்கு 21 ஓட்டங்கள் கிடைக்கப் பெற்றன.

பந்துவீச்சில் ஊவா நெக்ஸ்ட் அணி சார்பாக சீக்குகே பிரசன்ன 4 ஓவர்களில் 19 ஓட்டங்களுக்கு 4 விக்கெட்டுக்களையும், அன்ட்ரூ மக்டொனால்ட் 4 ஓவர்களில் 16 ஓட்டங்களுக்கு 2 விக்கெட்டுக்களையும், உமர் குல், சச்சித்திர சேனநாயக்க ஆகியோர் தலா ஒரு விக்கெட்டையும் கைப்பற்றினர்.

போட்டியின் நாயகனாக ஊவா நெக்ஸ்ட் அணியின் சீக்குகே பிரசன்ன தெரிவானார்.

# சச்சின் தோள் கொடுப்பார் - டிராவிட்



நியூஸிலாந்து டெஸ்ட் தொடரில் வி.வி.எஸ். லுக்ஷ்மனும், நானும் இல்லாத நிலையில் இந்திய அணிக்கு சச்சின் தோள் கொடுப்பார் என்று ராகுல் டிராவிட் நம்பிக்கைத் தெரிவித்தார்.

கடந்த ஆண்டு இங்கிலாந்து மற்றும் அவுஸ்திரேலியாவுக்கு எதிரான டெஸ்ட் தொடர்களில் இந்திய அணி படுதோல்வி கண்டது. இதனிடையே மூத்த வீரர்களான ராகுல் டிராவிட், லக்ஷ்மன் ஆகியோர் ஓய்வுபெற்றுவிட்ட நிலையில், நியூஸிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் இளம் வீரர்களுடன் களம் காண்கிறது இந்திய அணி. நடுவரிசையை பொறுத்தவரையில் சச்சினை நம்பியே உள்ளது இந்திய அணி.

இது தொடர்பாக டிராவிட் கூறியதாவது: கடந்த 16 ஆண்டுகளாக இந்திய அணிக்கு சச்சின் தோள் கொடுத்து வருகிறார். நியூஸிலாந்து தொடரிலும் அது தொடரும் என்று நம்புகிறேன். இந்திய கிரிக்கெட்டில் லக்ஷ்மன் மிகச் சிறந்த வீரர். அவருடன் விளையாடியதை கௌரவமாகக் கருதுகிறேன். களத்தில் மிகச்சிறந்த வீரரான லக்ஷ்மன், மைதானத்துக்கு வெளியில் மிகச்சிறந்த மனிதர்.

லக்ஷ்மன் அவருக்கென்று சில உத்திகளை வைத்திருந்தார். அதன்படியே அவர் பயிற்சி மேற்கொள்வார். அணியில் இருந்த இளம் வீரர்களுக்கு அவர் மிகப்பெரிய ஊக்கமாக இருந்தார். அதனால் இளம் வீரர்கள் அவரை நன்றாக கவனித்திருப்பார்கள். அவரிடம் இருந்து நிறைய விடயங்களை கற்றுக்கொண்டிருப்பார்கள். எனவே இளம் வீரர்களில் சிலர் லக்ஷ்மனுக்கு நிகராக விளையாடுவார்கள் என நம்புகிறேன் என்றார்.

# ருவென்ரி-20 இங்கிலாந்து: பீற்றர்சன் நீக்கம்

செப்ரெம்பரில் இலங்கையில் இடம்பெறவுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான இங்கிலாந்து அணி அறிவிக்கப்பட்டுள்ளது. அறிவிக்கப்பட்டுள்ள அவ்வணியில் சர்ச்சைக்குரிய துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் இடம்பெறவில்லை.

தென்னாபிரிக்காவுக்கு எதிரான 3ஆவது டெஸ்ட் போட்டியிலும் சேர்க்கப்பட்டிருக்காத கெவின் பீற்றர்சன், தற்போது தென்னாபிரிக்காவிற்கெதிரான ஒருநாள் சர்வ தேசப் போட்டிகள், சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடர் ஆகியவற்றிலும் சேர்க்கப்படாததை அடுத்து அவரது கிரிக்கெட் எதிர்காலம் குறித்த கேள்விகள் எழுந்துள்ளன.

அறிவிக்கப்பட்டுள்ள சர்வதேசக் கிரிக்கெட் சபையின் உலகக் கிண்ண ருவென்ரி-20 தொடருக்கான அணியின் தலைவராக ஸ்ருவேர்ட் ப்ரோட் தொடர்ந்தும் நீடிப்பதோடு, சிரேஷ்ட வீரர்களான இயன் பெல், ஜேம்ஸ் அன்டர்சன், மற் பிரயர், ஜொனதன் ட்ரொட் ஆகியோரும் அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளனர்.


அறிவிக்கப்பட்டுள்ள தென்னாபிரிக்காவிற்கெதிரான ஒருநாள் அணியில் ஸ்ருவேர்ட் ப்ரோடிற்கு ஓய்வு வழங்கப்பட்டுள்ளதாடு, தனது தனிப்பட்ட காரணங்களுக்காக டெஸ்ட் தொடரிலிருந்து ஒதுங்கியிருந்த ரவி போப்பராவிற்கு அணியில் இடம் வழங்கப்பட்டுள்ளது.

ருவென்ரி-20 அணி: ஸ்ருவேர்ட் ப்ரோட், ஜொனி பெயர்ஸ்ரோ, ரவி போப்பாரா, ரிம் பிரெஸ்னன், டனி பிறிக்ஸ், ஜொஸ் பட்லர், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் ஃபின், அலெக்ஸ் ஹேல்ஸ், கிறெய்க் கீஸ்வெட்டர், மைக்கல் லம்ப், ஒய்ன் மோர்கன், சமித் பட்டேல், கிரேம் ஸ்வான், லூக்ரைட்

ஒருநாள் போட்டி அணி:

அலஸ்ரெயர் குக், ஜேம்ஸ் அன்டர்சன், ஜொனி பெயர்ஸ்ரோ, இயன் பெல், ரவி போப்பாரா, ரிம் பிரெஸ்னன், ஜேட் டேர்ண்பக், ஸ்டீவன் ஃபின், கிறெய்க் கீஸ்வெட்டர், ஒய்ன் மோர்கன், சமித் பட்டேல், கிரேம் ஸ்வான், ஜொனதன் ட்ரொட், கிறிஸ் வோக்ஸ்.

# பீற்றர்சன் விவகாரத்தை இங்கிலாந்து சரியாகக் கையாளவில்லை -வோர்ண்



இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரர் கெவின் பீற்றர்சன் - இங்கிலாந்து அணியிலிருந்து நீக்கப்பட்டுள்ளமை வேதனையானது என அவுஸ்திரேலிய அணியின் முன்னாள் சுழற்பந்து வீச்சாளர் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார். பீற்றர்சன் அணிக்குச் சேர்க்கப்படாமை அணிக்கும் அவருக்கும் வேதனையானது எனவும் தெரிவித்தார்.

இங்கிலாந்து அணியின் நட்சத்திரத் துடுப்பாட்ட வீரரான கெவின் பீற்றர்சன் - தென்னாபிரிக்க வீரர்களுக்கு இங்கிலாந்து அணியின் அணித்தலைவர் அன்ட்ரூ ஸ்ட்ரோஸிற்கு எதிரான குறுஞ்செய்திகளை அனுப்பினார் என்ற குற்றச்சாட்டின் பேரில் அணியிலிருந்து விலக்கப்பட்டுள்ளார்.

இந்நிலையில் இது தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த ஷேன் வோர்ண், தான் செய்தது தவறு என்பதை ஏற்றுக்கொள்ளும் முதலாவது நபராக கெவின் பீற்றர்சனே காணப்படுவார் எனத் தெரிவித்த கெவின் பீற்றர்சன், தான் செய்த தவறுகளை கெவின் பீற்றர்சன் ஏற்றுக் கொள்வார் எனவும் தெரிவித்தார்.

ஆனால் இங்கிலாந்துக் கிரிக்கெட் சபையின் தன்முனைப்பு அதிகமாகக் காணப்படுவதால் சில விடயங்களை அனுசரித்து, ஏற்றுச் செல்வதற்கு அவர்கள் தயாராக இல்லை எனவும் ஷேன் வோர்ண் தெரிவித்தார்.

இரு தரப்பிலும் தவறுகள் காணப்படுவதாகத் தெரிவித்த கெவின் பிற்றர்சன், எனினும் இரு தரப்பின் தவறாலும் ஏற்பட்ட முக்கிய விடயமாக கெவின் பீற்றர்சன் தற்பாது சர்வதேசப் போட்டிகளில் பங்குபற்ற முடியாத நிலை காணப்படுவதாகவும், அது வேதனையானது எனவும் தெரிவித்தார்.

கெவின் பீற்றர்சன் இங்கிலாந்தின் தேசிய ஒப்பந்தத்தில் கைச்சாத்திடாமல், இங்கிலாந்து அணிக்காக இனிமேல் போட்டிகளில் பங்குபற்றாது விடில் அது வேதனையானது எனத் தெரிவித்த ஷேன் வோர்ண், இங்கிலாந்தின் தலைவர், இங்கிலாந்துக் கிரிக்கெட் சபை, இங்கிலாந்து அணியின் பயிற்றுவிப்பாளர் ஆகியோர் தாங்கள் கெவின் பீற்றர்சன் விவகாரத்தைச் சரியாகக் கையாளவில்லை என்பதை ஏற்றுக்கொள்ள வேண்டும் எனவும் ஷேன் வோர்ண் தெரிவித்துள்ளார்.

# "பிக்பாஷ் "தொடரில் மலிங்க



அவுஸ்திரேலியாவின் ருவென்ரி-20 தொடரான பிக்பாஷ் தொடரில் இலங்கை அணியின் வேகப்பந்து வீச்சாளர் லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். அவர் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணிக்காக விளையாடவே ஒப்பந்தம் செய்யப்பட்டுள்ளார்.

மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராக ஷேன் வோர்ண் நியமிக்கப்பட்டுள்ளதோடு, அந்த அணியிலேயே லசித் மலிங்க சேர்க்கப்பட்டுள்ளார். கடந்த பருவகாலத்தில் மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் தலைவராகச் செயற்பட்ட போதிலும், கடந்த மாதத்தில் அப்பதவியிலிருந்து விலகியிருந்தார்.

2011ஆம் ஆண்டு ஐ.பி.எல்லின் பின்னர் ஐ.பி.எல். போட்டிகளிலிருந்து ஓய்வுபெற்ற ஷேன் வோர்ண், 2011ஆம் ஆண்டு பிக்பாஷ் லீக் தொடரில் பங்குபற்றியிருந்தார். அதன் பின்னர் இதுவரை எந்தப் போட்டிகளிலும் பங்குபற்றியிருக்காத நிலையிலும் அவருக்கு அணித்தலைமை வழங்கப்பட்டுள்ளது.

இதேவேளை லசித் மலிங்கவின் ஒப்பந்தம் தொடர்பாகக் கருத்துத் தெரிவித்த மெல்பேர்ண் ஸ்ரார்ஸ் அணியின் பிரதம தேர்வாளர் இயன் சப்பல், கடந்த சில வருடங்க ளாக மட்டுப்படுத்தப்பட்ட ஓவர்கள் கொண்ட போட்டிகளில் லசித் மலிங்கவே முதல்நிலைப் பந்துவீச்சாளராகக் காணப்படுகிறார் எனத் தெரிவித்ததோடு, அவரை ஒப்பந்தம் செய்வதில் மகிழ்ச்சியடைவதாகத் தெரிவித்தார்.

விக்கெட்டுக்களைக் கைப்பற்றுதல், இறுதி நேர ஓவர்களில் ஓட்டங்களைக் கட்டுப்படுத்துதல் ஆகிய இரண்டு பணிகளையும் மிகச்சிறப்பாகச் செய்யக்கூடிய ஒருவர் எனத் தெரிவித்தார்.

# "சம்பியன்ஸ் திரொபி" போட்டி அட்டவணை அறிவிப்பு

ஐ.சி.சயினி 50 ஓவர் "சம்பியன்ஸ் திரொபி" கிரிக்கெட் போட்டி அடுத்த ஆண்டு (2013) ஜூன் 6ஆம் திகதி தொடங்கி 23ஆம் திகதி நிறை வடைகிறது.

இங்கிலாந்தின் கார்டிஃப்பில் தொடங்கும் இப் போட்டியின் முதல் ஆட்டத்தில் இந்தியா-தென்னாபிரிக்க அணிகள் மோதுகின்றன.

மொத்தம் 8 அணிகள் பங்கேற்கும் இப்போட்டியில் அவுஸ்திரேலியா, இங்கிலாந்து, நியூஸிலாந்து, இலங்கை அணிகள் "ஏ" பிரிவிலும், இந்தியா, பாகிஸ்தான், தென்னாபிரிக்கா, மேற்கிந்தியத் தீவுகள் ஆகிய அணிகள் "பி" பிரிவிலும் இடம்பெற்றுள்ளன.

ஒவ்வொரு பிரிவிலும் முதல் 2 இடங்களைப் பிடிக்கும் அணிகள் அரையிறுதிக்கு முன்னேறும். முதல் அரையிறுதி ஆட்டம் ஜூன் 19 ஆம் திகதியும், 2 ஆவது அரையிறுதி ஆட்டம் ஜூன் 20 ஆம் திகதியும் நடைபெறுகின்றன.

போட்டி அட்டவணை

| திகதி | மோதும் நாடுகள் | மைதானம் |
|---|---|---|
| ஜூன் 06 | இந்தியா -தென்னாபிரிக்கா | கார்டிஃப் |
| ஜூன் 07 | மே.இ.தீவுகள் -பாகிஸ்தான் | ஓவல் |
| ஜூன் 08 | இங்கிலாந்து -அவுஸ்திரேலியா | எட்கபாஸ்டன் |
| ஜூன் 09 | இலங்கை -நியூஸிலாந்து | ஓவல் |
| ஜூன் 10 | பாகிஸ்தான் -தென்னாபிரிக்கா | எட்கபாஸ்டன் |
| ஜூன் 11 | இந்தியா - மே.இ.தீவுகள் | ஓவல் |
| ஜூன் 12 | அவுஸ்திரேலியா -நியூஸிலாந்து | எட்கபாஸ்டன் |
| ஜூன் 13 | இங்கிலாந்து -இலங்கை | ஓவல் |
| ஜூன் 14 | மே.இ.தீவுகள் -தென்னாபிரிக்கா | கார்டிஃப் |
| ஜூன் 15 | இந்தியா -பாகிஸ்தான் | எட்கபாஸ்டன் |
| ஜூன் 16 | இங்கிலாந்து -நியூஸிலாந்து | கார்டிஃப் |
| ஜூன் 17 | இலங்கை-அவுஸ்திரேலியா | ஓவல் |
| ஜூன் 19 | முதல் அரையிறுதி | ஓவல் |
| ஜூன் 20 | 2ஆவது அரையிறுதி | கார்டிஃப |
| ஜூன 23 | இறுதி ஆட்டம் | எட்கபாஸ்டன் |

# இந்திய தேர்வுக் குழுவுக்கு புதிய தலைவர்?

இந்திய அணியின் புதிய தேர்வுக் குழுத் தலைவராக ரோஜர் பின்னி நியமிக்கப்பட அதிக வாய்ப்புள்ளது.

இந்திய கிரிக்கெட் அணியின் தேர்வுக்குழுத் தலைவராக, கடந்த 2008 முதல் தமிழகத்தின் ஸ்ரீகாந்த் உள்ளார். தவிர, உறுப்பினர்களாக ஹிர்வானி, சுரேந்திர பாவே, ராஜா வெங்கட் உள்ளனர். இவர்களது பதவிக் காலம் வரும் செப்ரெம்பர் மாதத்துடன் முடிகிறது. மீதமுள்ள மொகிந்தர் அமர்நாத் கடந்த ஆண்டு தான் உறுப்பினராக பொறுப்பேற்றார். இதனால், இவர் அடுத்த தேர்வுக்குழுத் தலைவராகலாம் என்று எதிர்பார்க்கப்பட்டது. ஆனால், இந்திய கிரிக்கெட் சபை (பி.சி.சி.ஐ.,) எப்போது, என்ன செய்யும் என்று யாருக்கும் தெரியாது. கிரிக்கெட்டில் இருந்து ஓய்வு பெற்றபோது, தேர்வுக் குழுவை "ஜோக்கர்கள" கூட்டம் என்று விமர்சித்த அமர்நாத், தேர்வுக் குழு உறுப்பினர் ஆனார். இவர் அடுத்த தலைவர் என்று எதிர்பார்த்த நிலையில், புதிய திருப்பமாக ரோஜர் பின்னிக்கு அதிக வாய்ப்பு உள்ளதாக கூறப்படுகிறது.

இப்பத்திரிகை இன்ஃபோமீடியா பிரைவேட் லிமிட்டட் நிறுவனத்தினால் இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்ற முகவரியிலுள்ள தமது அச்சகத்தில் 23.08.2012 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது